REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 18 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 92 | Thursday 18, April, 2024 | 16 பக்கங்கள் | 50/-





## மடு அன்னை திருச்சொரூப பவனியில் ட்ரோன் மூலம் மலர் சொரிய அனுமதி

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



மடு அன்னையின் திருச்சொரூபம் பவனிகளின்போது பயணப் பாதைகளில் ட்ரோன்கள் மூலம் பூச்சொரிவதற்குத் தேவையான அனுமதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுக் கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மடு அன்னையின் திருச்சொரூப பவனி தற்போது இடம்பெற்று வருகிறது. இந்நிலையில், அன்னையின் பயணப் பாதையெங்கும் ட்ரோன் மூலம் பூச்சொரிந்து சிறப்பிப்பதற்குத் தேவையான

06

### மலைநாட்டு எழுச்சி பத்தாண்டு திட்டம்

## 12 மாவட்டங்களுக்கு முதற்கட்டமாக ரூபா 4109 மில்லியன் நிதி விடுவிப்பு

### ஜூலை 31க்குள் நிறைவு செய்ய அமைச்சர் பிரசன்ன அறிவுறுத்தல்

பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ், இவ்வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் 10,765 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களுக்கு 4109.20 மில்லியன் ரூபா

06

### வெளிநாட்டுக் கடனாக 42 பில். அமெ. டொலர்

## மறுசீரமைப்புக்கு நட்பு நாடுகளின் ஒத்துழைப்பை அரசு எதிர்பார்க்கிறது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்துக்கு 42 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கடன்களை மறு சீரமைப்பு செய்ய நேர்ந்துள்ளதாக நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்காக, நாட்டின் நட்பு நாடுகளிலிருந்து சிறந்த உதவி ஒத்துழைப்புக்கள் கிடைக்குமெ ன அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேவேளை, கடன் மறுசீரமைப்பு தொடர்பான

06

### அரச தோட்ட தொழிலாளர்களுக்கு செலுத்தப்படாதுள்ள

# EPF/ETF வழங்கும் யோசனை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு

### 500 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு எதிர்பார்ப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச பெருந்தோட்ட யாக்கத்தின் கீழ் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு செலுத்தப்படாதுள்ள EPF/ ETF ஆகியவற்றை வழங்குவதற்கான அமைச்சரவைப்பத்திரம், அடுத்தவாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுமென அரச பெருந்தோட்ட யாக்க மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளை செலுத்துவதற்காக 500 கோடி ரூபாவை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் முதல் உத்தியோகபூர்வ நடவடிக்கையாக இது தொடர்பில் தேவையான ஆலோசனைகளை அமைச்சின் செயலாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தோட்டத்தொழிலாளர்களின் முழுமையான உரிமையை பாதுகாக்கும் வகையில், பெருந்தோட்ட யாக்க மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ள அவர்,

இவ்விவகாரம் தொடர்பில் தற்போது ஊழியர்களினால் 2,000 க்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கான கட்டணமாக பாரியளவு நிதி செலவிடப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மிஹிந்தலை வன பாதுகாப்பு பகுதியில்

## போலி ஆவணங்கள் தயாரித்து ஆறு ஏக்கர் காணி அபகரிப்பு?

### வர்த்தகர் ஒருவருக்கு எதிராக வழக்கு தொடர உத்தரவு



மிஹிந்தலை, மருதங்குளம் பிரதேசத்தில் மிஹிந்தலை வனப்பகுதியாக இனங்காணப்பட்டுள்ள 18 ஏக்கர் காணியில், ஆறு ஏக்கர் காணியை அபகரிக்க முயற்சி செய்யும் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறு அனுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் கஞ்சனா நர்தனா அபிமானி செனவிரத்ன, வன பாதுகாப்பு அதிகாரி சுமித் யுவாரிசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வன பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிடும் வகையில் குறிப்பிட்ட பிரச்சினைக்குரிய காணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரம் நான்கும் போலியானதாக இருப்பின், அது சம்பந்தமாக அனுராதபுரம் விசேட குற்றத் தடுப்பு விசாரணைப்

06

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: உண்மையான தகவலை மைத்திரி வெளிப்படுத்த வேண்டும்

### முன்னுக்குப்பின் முரணான கருத்து அவசியமற்றது



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிடாமல் உண்மையான கருத்துக்களை கூற, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வர வேண்டுமென

06

## வடக்கில் வெகு விரைவில் புதிய வீட்டுத்திட்டங்கள்

### ஒரு வருடத்துக்குள் 32,000 வீடுகள்




வட மாகாணத்தில் வீடற்றவர்களின் சிக்கலை நிவர்த்திக்கும் நோக்கில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய புதிய வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில்

06

## புதிய விசா நடைமுறை நேற்றிலிருந்து அமுல்

### விசேட வர்த்தமானி வெளியீடு



புதிய விசா முறையை நடைமுறைப்படுத்த உள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. நேற்று (17) முதல் இப்புதிய விசா நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைவாக ETA (Estimated Time Of Arrival)

06

## மீன் பிடிக்கும் தோரணையில் போதைப் பொருள் கடத்தல்

### கைதான பத்துப்பேரை தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் தோரணையில் 380 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளை கடத்தியவர்களை, தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு கொழும்பு

06

## சிறுவர்களை பாதிக்கும் வயிற்றுப்போக்கு நோய்

### எச்சரிக்கிறார் டொக்டர் தீபால் பெரேரா



சம காலங்களில் சிறுவர்களிடையே வயிற்றுப்போக்கு நோய் குறிப்பிடத்தக்க அளவில் பரவுவதால், பெற்றோர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின், சிறுவர் நல மருத்துவ வைத்தியர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார். நீட்டிக்கப்பட்ட விடுமுறை நாட்களை தொடர்ந்தே, இவ்வாறான

06

## பாலித தெவரப்பெருமவின் இறுதிக்கிரியை நாளை



காலம் சென்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெருமவின் இறுதிக் கிரியை நாளை வெள்ளிக்கிழமை இடம்பெற்று, சடலம் குடும்ப மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

06

### ஆரியரட்னவின் இறுதிக் கிரியைகள் அரச மரியாதையுடன் நாளை மறுதினம்



சர்வோதய அமைப்பின் ஸ்தாபகர் அமரர் ஏ.டீ. ஆரியரத்னவின் இறுதிக் கிரியைகள் அரச மரியாதையுடன் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் சுதந்திர சதுக்கத்தில் இடம் பெறவுள்ளன.

அன்னாருக்கு அரச மரியாதை வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக,

06

### ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின்

## புதிய நியமனங்களுக்கு எதிராக ஆட்சேபனை

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின், பதில்

06

## நடிகை தமித்தா, கணவருக்கு 24 வரை விளக்கமறியல் நீடிப்பு

### கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாக கூறி நிதி மோசடி செய்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள சிங்கள திரைப்பட,

06

## சாதாரண தர பரீட்சை; அடுத்த வாரம் அனுமதி அட்டைகள் விநியோகம்

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு (2023) தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை, அடுத்த வாரம் முதல் விநியோகிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களினூடாக பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

06




# நகர்வலம்



## ஜனாதிபதித் தேர்தலில்...

# போட்டியிடுவதா – இல்லையா? இரண்டு வாரங்களில் தீர்மானம்

## நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக தம்மை நிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பெரும்பாலானவர்கள் வேண்டுகோள் விடுத்து வருவதாக நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் இக்காலங்களில் தாம் ஆலோசித்து வருவதாகவும் இன்னும் இறுதி முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள அவர், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் தாம் அதற்கான தீர்மானத்தை வெளியிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அமைச்சர், அது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தாம் நிலையியற் காப்பு சட்டம் தொடர்பில் தெளிவு படுத்துவதற்கு அன்றி நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு சென்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இலவச அரிசி

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

ஜனாதிபதியின் திட்டத்தின் பிரகாரம் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான அரசாங்கத்தின் இலவச அரிசி வழங்கும் வேலைத் திட்டம் 2024 களுத்துறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலக பிரிவுகளிலும் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி வேலைத் திட்டத்தின் களுத்துறை மற்றும் இங்கிரிய பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பௌத்த சமய மற்றும் மத விவகார கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, களுத்துறை மாவட்டசெயலாளர், ஜீ.பீ. ஜனக குமார மற்றும் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.





களுத்துறை மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளின் இலவச அரிசி விநியோக வேலைத் திட்டம் பிரதேச செயலாளர்களின் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரி, நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம சேவகர் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர்

# சங்க ஏற்பாட்டில் சித்திரை புத்தாண்டு விழா இன்று

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டின் சித்திரை புத்தாண்டு விழா இன்று (18) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாத்தளை வி.டி நாணயக்கார பூங்காவனத்திடலில் நடைபெறவுள்ளது. மேற்படி ஊடகவியலாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஊடகவியலாளர்களின் குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்புடன் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான நாலக பண்டார கோட்டகொட, மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன, மாத்தளை பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லலித் ரோஹண உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கலாசூரி இ. சிவகுருநாதனின் ஊடகப் பணி;


# பேர்த் மாநகரில் நூல் வெளியீடு

மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் கலாசூரி இ. சிவகுருநாதனின் ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கென முத்திரை பதித்துக் கொண்டவர்.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான 'இலங்கை இதழியழில் சிவகுருநாதன்' வெளியீட்டு விழா எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீடு, 1 ஹில் வியூ பிளேஸ், பென்ட்லி, மேற்கு ஆஸ்திரேலியா என்னும் முகவரியில் அமைந்துள்ள ஹில்வியூ இன்டர்கல்ச்சரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில் நடைபெறும்.



மூத்த தமிழ் எழுத்தாளர் டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்த நூல் வெளியீடு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்த நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவணக் காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றுவார்.

அத்துடன் டாக்டர் சி. பாஸ்கரநாதன் இந்நூல் பற்றி சிறப்புரையையும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையையும் நிகழ்த்துவர்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப் பணி மற்றும் இலக்கியப் பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும்.

## அத்துமீறி பிரவேசித்து அராஜகம்;

# பெண்ணொருவரை தாக்கி பற்களை உடைத்த பொலிஸ் கான்ஸ்டபிள் !

## எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

திவுல்வெவ பகுதியில் வீட்டு காணியொன்றிற்குள் அத்துமீறி பிரவேசித்து பெண் ஒருவரை தாக்கி அவரின் 14 பற்களை உடைத்ததாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவரை கைது செய்து கெப்பித்திகொல்லாவ நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார் அவர் எதிர்வரும் (22) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக குவுகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் திறப்பனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவராவர்.

தாக்குதலுக்கு உள்ளான பெண் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன்



அவரின் 14 பற்கள் உடைந்துள்ளதுடன் அந்த பற்களை அறுவை சிகிச்சை மூலம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென பல் வைத்தியர்கள் பரிந்துரை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் அவரது 21 வயதுடைய மகனுடன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கமைய இந்த பொலிஸ் கான்ஸ்டபிளையும் அவரது சகோதரரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# LACSDO MEDIA NETWORK SRI LANKA வின் விருது விழா

LACSDO MEDIA NETWORK SRI LANKA வின் திறமைமிக்க விருது வழங்கும் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 4.00 மணி முதல் 7.00 மணிவரை புத்தளத்திலுள்ள Bishrul Hafi ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகள், கெபிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் ஊடக அனுசரணை வழங்கவுள்ளன.

LACSDO MEDIA தலைவர் கலாநிதி ஏ.எல். அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக், ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத், புத்தளம், பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிலையத்தின் பணிப்பாளர் ஜுவைரியா முகைடீன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விசேட அதிதிகளாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், கெபிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் எம்.எப். ஷியாஉல் ஹசன், வசந்தம் தொலைக்காட்சியின் முகாமையாளர் ஏ.முஹமட் இர்பான் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சீனன்கோட்டை பிரதேச கலீபதுஷ் ஷாதுலியாக இஹ்ஸானுதீன் நியமனம்

பேருவளை சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் ஆத்மீகஞானி சங்கைக்குரிய உதுமான் லெப்பை ஆலிம் (ரஹ்மத்துல்லாஹி) அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடைபெறும் கத்தமுல் குர்ஆன் தமாம் கந்தூரி மஜ்லிஸில் சீனன்கோட்டை பகுதிக்கான கலீபதுஷ்ஷாதுலியாக சாதுலியா தரீக்காவின் உலக ஆன்மீக தலைவர் சங்கைக்குரிய செய்ஹு ஸஜ்ஜாஜா அஷ் ஷெய்க் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களினால் நியமிக்கப்பட்ட சீனன் கோட்டை பள்ளிச் சங்க உப செயலாளரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் நிறைவேற்று குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் ஏ.எச்.எம் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொருளாளர் கலாநிதி மௌலவிஅஸ்வர் அஸாஹீதீன் (அல் அஸ்ஹரி), சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர்களான எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், அரூஸ் அனஸ், உப தலைவர் ஸப்வான் நயீம், உறுப்பினர் முஸ்னி உவைஸ் ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவிகள் எம்.எம் ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி), எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி), எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி) உட்பட உலமாக்கள், பள்ளிச் சங்க உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள் பெருமளவிலானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# சமூக சேவையாளர் சித்தீக் காலமானார்



மதுரங்குளி, விருதோடையைச் சேர்ந்த சமூக சேவையாளரான சமாதான நீதவான் ஷெரீப் முஹம்மத் (எம்.எஸ்.) சித்தீக் (வயது 60) நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் ஜனாஸா விருதோடை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நியாஸ், புத்தளம் நகர சபை முன்னாள் தலைவர் ரபீக் உட்பட முக்கியஸ்தர்களும் நல்லடக்கத்தில் கலந்துகொண்டனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர், மதுரங்குளி வர்த்தக சங்க ஆலோசகராவார்.

# சமூக சேவையாளர் ஷெய்க் தாவூத் மறைவுக்கு ஹஸன் பாஸி அனுதாபம்



கொழும்பை பிறப்பிடமாகவும் பேருவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சமூக சேவையாளர் ஷெய்க் தாவூத் கடந்த 14ஆம் திகதி பேருவளையில் காலமானார். அன்னாரின் ஜனாஸா மஹகொடை மஸ்ஜிதுல் ரஹ்மான் ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் (15) நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் மறைவு குறித்து பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி அனுதாபச்செய்தியொன்றை வெளியிட்டுள்ளார். அச்செய்தியில்; இறையடியெய்திய எனது அன்புக்குரிய நண்பர் ஷெய்க் தாவூத், சமூகத்தின் நலனுக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றினார். தான் கொழும்பில் பிறந்தாலும் பேருவளையில் வாழ்ந்ததோடு, தமது சமூகத்திற்காக எவ்வித வேறுபாடுமின்றி அர்ப்பணிப்போடு சமூக சேவையில் ஈடுபட்டார். அனைவருடனும் புன்முறுவலுடன் பழகும், அன்னாரின் நற்பணிகளை வல்ல நாயன் அங்கீகரித்து அன்னாருக்கு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்க வேண்டுமென தான் பிரார்த்திப்பதாகவும் ஹஸன் பாஸி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 99 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 99 ஆவது கவியரங்கம் இம்மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் கலாபூஷணம் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் கவியரங்கினைத் தலைமையேற்று நடாத்துகிறார்.



நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர், நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழ கணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# காட்டு யானையின் தாக்குதலில் தந்தை பலி; மகள் படுகாயம்

**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள்**

காட்டு யானையின் தாக்குதலில் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதுடன் படுகாயமடைந்த அவரது மகளை சிகிச்சைக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக கல்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (16) மாலை மடாதொம்பே பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். கல்நேவ, மடாதொம்பே பகுதியை வசிப்பிடமாக கொண்ட 62 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; உயிரிழந்த நபர் தனது மகளுடன் மோட்டார் சைக்கிளில் மடாதொம்பே பகுதியிலிருந்து வீடு நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது காட்டுயானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்பது பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய வெளி மாநில மற்றும் அயலக தமிழ் சேவையை பாராட்டி 'மனம் மன்றம்' சேலம் வெள்ளிக்கிழமை (12) நடத்திய 49ஆம் ஆண்டு விழாவில் தில்லி தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் முனைவர் இரா. முகுந்தனுக்கு அவரது தமிழ்ப் பணியை பாராட்டி அவருக்கு "தமிழ் மாமணி' விருதினை திருக்கைலாய பரம்பரை செங்கோல் ஆதினம் 103வது குருமகா சன்னிதானங்கள் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிராகச தேசிய ஞான பராமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு விருதை வழங்கினர். உடன் மூன்று நாள் இந்நிகழ்சிக்கான ஏற்பாடுகளை மனம் மன்றத்தின் தலைவர் டாக்டர் P.S. பன்னீர் செல்வம், வழக்கறிஞர் மற்றும் பட்டிமன்றம் நடுவர் மனம் மன்றத்தின் செயலாளருமான S.D.கலையமுதன் சிறப்பாக செய்திருந்தனர்.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 18 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.12
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 05
ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 07.33 - 09.03வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



பாராளுமன்றம் 24, 25, 26 திகதிகளில் கூடும்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மூன்று நாட்கள் ஒத்திவைப்பு விவாதம்



எதிர்க்கட்சி கொண்டுவந்துள்ள பிரேரணைக்கமைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை மூன்று நாட்கள் நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவிக்கையில், பாராளுமன்றத்தை எதிர்வரும் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

06

## புறக்கோட்டை மிதக்கும் சந்தையில் சட்டவிரோத கட்டடங்கள் அகற்றல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு, புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் அனுமதியற்ற விதத்தில் இயங்கிய விற்பனை நிலையங்கள் நேற்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அகற்றப்பட்டுள்ளன. மேற்படி பகுதியில் மிதக்கும் சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்களால் பயணிகள் உள்ளிட்டோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதைக் கருத்திற் கொண்டே அக்கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் பத்ராணி ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். கடந்த 2016 ஆம் ஆண்டு லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்காக இந்த விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன. இருந்த போதிலும் அந்த விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் குறைவடைந்ததால், மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ரோஸி சேனநாயக்க லொத்தர் விற்பனைக்கு மேலதிகமாக ஏனைய பொருட்களையும் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கியதாக அங்குள்ள வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய பின்னணியில் கொழும்பு மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் பொலிஸாரும் இணைந்து நேற்று இந்த விற்பனை நிலையங்களை அங்கிருந்து அகற்றியமை குறிப்பிடத்தக்கது.



உலகின் முதல் பெண் பிரதமரான அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 108ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று (17) பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் அன்றைய தினம் காலையிலும், முன்னாள் ஜனாதிபதியும் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் புதல்வியுமான திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க குழுவினர் பிற்பகலிலும் மலர்ச் செண்டு வைத்து மரியாதை செலுத்தினர்.
(படங்கள்: வாசித பட்டபெந்திகே, துஷ்மந்த மாயாதுன்ன)

## வெளிநாட்டவரை அவமதித்தவர் ரொக்கம், சரீரப் பிணையில் விடுதலை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு புதுக்கடை பகுதியில் வெளிநாட்டவர் ஒருவரை அவமதித்து துன்புறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஹோட்டல் உரிமையாளர், 50,000 ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. கொழும்பு புதுக்கடை பகுதியில் கொத்து ரொட்டி வாங்க சென்றுள்ள வெளிநாட்டவரே இவ்வாறு அவமதிப்புக்குள்ளாகியுள்ளார்.

மேற்படி ஹோட்டலின் உரிமையாளர் வெளிநாட்டவர் ஒருவரிடம் கொத்துரொட்டி ஒன்றின் விலை 1900 ரூபா எனக் கூறியுள்ளார். அவர் அதனை கொள்வனவு செய்ய மறுத்துள்ள நிலையில் ஹோட்டல் உரிமையாளர் அவரை அச்சுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பான காணொளிகள் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில் சந்தேக நபரான 51 வயதுடைய ஹோட்டல் உரிமையாளர் வாழைத்தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

## ஸ்ரீல.சு கவில் மோசடிகளில் ஈடுபட்டதில்லை நிரூபிக்க முடிந்தவர்கள் முன் வரலாம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தாம் பதவியேற்ற காலம் முதல் இதுவரை எந்த ஒரு மோசடியிலும் ஈடுபட்டது கிடையாதென, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மோசடி செய்திருந்தால் எவரும் அதனை நிரூபிக்கலாம் அல்லது வெளியிடலாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி சவால் விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் 108ஆவது நினைவு தினம் நேற்றைய தினம் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்: மறைந்த முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவின்உருவச்சிலையைபார்த்துக்கொண்டுஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்ற வகையில் எமக்கு வேறு எந்த கட்சியுடனும் இணைய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு

விரைவில் நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை


(லோரன்ஸ் செல்வநாயகம்)

எல்லை மீறி மீன்பிடித்த குற்றத்திற்காக மியன்மாரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கி அந்நாட்டு அரசாங்கம் அவர்களை விடுதலை செய்துள்ளது.இவர்களை விரைவில் இலங்கைக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி 15 இலங்கை மீனவர்களும் மியன்மார் கடல் பாதுகாப்பு அதிகாரிகளினால் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்டு அந்த நாட்டு நீதிமன்றத்தினால் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளதாக அங்குள்ள இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 15 இலங்கை மீனவர்களும் மியன்மார் கடற்பரப்பில் சட்டவிரோதமாக பிரவேசித்தமை மற்றும் அங்குள்ள கடலில் மீன் பிடித்தமை மற்றும் அந்நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறிய குற்றத்திற்காக அவர்களுக்கு ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

மியான்மாரில் புது வருடப் பிறப்பின்போது சிறைக் கைதிகள் பலர் விடுதலையாகினர். இந்த வேலைத் திட்டத்தின் கீழ் மேற்படி இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ள 15 மீனவர்களையும் விரைவில் இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தங்கத்தின் விலை மீண்டும் உச்சத்தை தொடுகிறது



22 கரட் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது. ஒரு பவுண் விலை 1,84,550 ரூபாவாக நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

இதன்படி,24 கரட் 01 கிராம் தங்கத்தின் விலை 25,160 ரூபாவாக உள்ளதுடன் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 2,01,300 ரூபாவாக பதிவாகியுள்ளது. 22 கரட் 01 கிராம் தங்கத்தின் விலை 23,070 ரூபாவாகவும், 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 1,84,550 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

06

## பாதாளக்குழு மீது துப்பாக்கிச் சூடு நடத்த விசேட பயிற்சி



பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விசேட பயிற்சி வழங்கப்பட உள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்கு விஜயம் செய்திருந்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி தப்பிச் செல்லும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்த பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த நூறு பேருக்கு இந்த விசேட துப்பாக்கிச் சூட்டு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதியில், நாட்டிலிருந்து போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் இல்லாதொழிக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

## உள்நாட்டு, வெளிநாட்டு பொதிகள் சேவை மோசடிக்காரர்களிடம் சிக்க வேண்டாம்

தபால் திணைக்களம் எச்சரிக்கை

பொதிகள் சேவைக்கு தபால் திணைக்களம் குறுஞ்செய்தி (SMS) அனுப்புவதில்லை. எனவே கடன் அட்டை தரவுகளை வழங்கி மோசடிக்காரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டாமென தபால் மாஅதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ. எம். ஆர்.பி சத்குமார பொதுமக்களிடம் கேட்டுள்ளார்.

உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பொதிகள் பெறப்பட்டதைப் பற்றிய தகவலை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கும் எந்தவொரு SMS குறுஞ் செய்தியையும் தபால் திணைக்களம் அனுப்புவதில்லையென திணைக்களம் அறிவித்துள்ளது.

மோசடியான இணையத்தளம் மற்றும் சூட்சுமமாக தயாரித்த போலி கையடக்க தொலைபேசி எண்களைப் பயன்படுத்தி பொது மக்களை ஏமாற்றும் மோசடி நடந்து வருகிறது.

இலங்கை தபால் திணைக்களம், SL POST, Sri Lanka Post போன்ற பெயர்களைப் பயன்படுத்தியும் தபால் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பயன்படுத்தியும் இந்த மோசடிகள் இடம்பெறுகின்றன.

தபால் திணைக்களம், கடன் அட்டை தகவல்களை குறுஞ்செய்திகள் மூலம் ஒருபோதும் வினவுவதில்லை.

கடன் அட்டைகள் மூலம் பொதிகள் தொடர்பான எந்தவொரு பரிவர்த்தனையையும் மேற்கொள்வதும் இல்லை.

பொது மக்களுக்கு அனுப்பப்படும் குறுஞ்செய்திக்கு, இணையத்தளம் அல்லது குறுஞ்செய்தி அல்லது வேறு எந்த வகையிலும் தங்கள் கடன் அட்டை விவரங்களை வழங்க வேண்டாமென்று பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விபரங்களை அறிய கீழ்க்கண்ட தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தபால் திணைக்கள உதவி சேவை 1950, தகவல் தொழில்நுட்பப் பிரிவு 011 2542104, 011 2334728. 0112335978, 0112687229, 0112330072.

பிரபல பாடகர் ரோஹன பெத்தகேயின்

## புத்தாண்டு பாடலை திரிபுபடுத்திய கலால் திணைக்கள அதிகாரி கைது

சித்திரைப் புத்தாண்டு பாடலை கேலி, கிண்டல் செய்யும் வகையில் திரிபுபடுத்தி பாடிய மதுவரித் திணைக்கள அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குளியாப்பிட்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரபல பாடகர் ரோஹன பெத்தகேயின் "சூர்ய மங்கல்ய" என்ற பாடலே இவ்வாறு இவரால் திரிபுபடுத்தி பாடப்பட்டுள்ளது.

திரிபுபடுத்தப்பட்ட பாடல் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடாபில் வடமேல் மாகாண கணினி குற்றப்பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விசாரணைகளின் பின்னர் வாரியபொல தலாதுஓய பகுதியைச் சேர்ந்த 31 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

06



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

*ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.*

## பாராட்டுப்பெற்ற இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள்

பணவீக்க அழுத்தங்கள், நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வுகள் கொண்ட சவாலான பொருளாதார நிலையை இலங்கை சமீப வருடங்களில் அனுபவித்து வந்தது. எவ்வாறாயினும், சவாலான காலகட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றியுள்ளமைக்கு, உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டியுள்ளன.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால கூட்டத் தொடரில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உள்ளிட்ட குழுவினருடனான பேச்சுவார்த்தையின் போது, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியஸ்தர்கள் இவ்வாறு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

IMF உலக வங்கியின் வசந்தகால கூட்டத்தொடரில் நாட்டின் பொருளாதார ஸ்திர நிலைமைக்கான இலங்கையின் உறுதியான அர்ப்பணிப்பு பாராட்டுகளைப் பெற்றிருப்பது, நிச்சயம் ஒரு திருப்புமுனையைக் குறிக்கிறது. மேற்படி வசந்த காலக் கூட்டத்தொடரில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகாமுராவின் இந்த ஒப்புதல் வலுவான பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சமூகபொருளாதார முன்னேற்றங்களுக்கு மத்தியில் பாரிய பொருளாதார செயற்பாடுகளில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு அங்கீகாரத்திற்கு தகுதியானது. மூலோபாய நடவடிக்கைகள் மற்றும் தியாகங்கள் மூலம், இலங்கை நிலையான வளர்ச்சியை நோக்கிய பாதையில் நடைபோடுகின்றது, இது சர்வதேச நிதி நிறுவனங்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

இது அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தத் திட்டங்களின் செயல்திறனை உறுதிப்படுத்துகிறது, இந்நடவடிக்கைகள் பணவீக்கத்தின் விரைவான குறைப்பு மற்றும் வெளிநாட்டு இருப்புக்களை வலுப்படுத்துதல் போன்ற உறுதியான முடிவுகளை அளித்துள்ளன.

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களின் வெற்றிக்கு கல்வி, சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்தும் பன்முக அணுகுமுறை காரணமாக இருக்கலாம். நிலையான வளர்ச்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளில் கவனம் செலுத்துவதன் மூலம், சர்வதேச முதலீட்டாளர்களுக்கான கவர்ச்சிகரமான இடமாக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது. சர்வதேச புரிந்துணர்வுக்கான வர்த்தக சபையுடனான (BCIU) உரையாடல், இலங்கையின் பொருளாதார வாய்ப்புகள் மற்றும் அதன் முழுத் திறனை வெளிக்கொணருவதில் அதிகரித்த சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

வோஷிங்டனில் இடம்பெற்ற மாநாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் இந்தியா மற்றும் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கும் நிதி இராஜாங்க அமைச்சருக்கிடையிலும் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில், இந்தியா மற்றும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் இலங்கையின் சீர்திருத்த முயற்சிகளைப் பாராட்டியுள்ளார். அவரது இந்த ஒப்புதல், இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களின் சாதகத் தன்மையை வலுப்படுத்துகிறது. கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதங்கள் மற்றும் IMF இன் மதிப்பாய்வு என்பவை நிதி ஒழுக்கம் மற்றும் நிதி ஸ்திரத்தன்மைக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கை தனது சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் கணிசமான முன்னேற்றங்களைச் செய்திருந்தாலும், சவால்கள் இன்னமும் உள்ளன. நிர்வாகத்தின் பல வீனங்களை நிவர்த்தி செய்வது, ஊழலை எதிர்த்துப் போராடுவது மற்றும் அதிகார செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவது ஆகியவை பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைத் தக்கவைக்க முக்கியமானவை. நிர்வாக சீர்திருத்தத்திற்கான முக்கிய பரிந்துரைகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தின் செயல் திட்டம், சரியான திசையில் பயணிக்கின்றது. எவ்வாறாயினும், இந்த சீர்திருத்தங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதிப்படுத்த தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை.

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்துள்ளன, சர்வதேச சமூகத்தின் பாராட்டுகளையும் பெற்றுள்ளன. முன்னோக்கி நகர்வது, சீர்திருத்தத்திற்கான நிலையான அர்ப்பணிப்பு மற்றும் நிர்வாக சவால்களை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் என்பன இலங்கையின் முழுப் பொருளாதார ஆற்றலை உணர்ந்து, அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இன்றியமையாததாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# எழில் மிகுந்த நுவரெலியாவின் சுற்றுலா தொழில்துறை மறுமலர்ச்சி



### ஆராய ஜனாதிபதி நேரடி விஜயம்



### சுற்றுலா பயணிகளுக்கு புதுமையான அனுபவத்தை வழங்க மேம்படுத்தப்பட்ட Peko Trail வேலைத்திட்டம்

எழில் மிக்க மலைகளை அண்மித்துக் காணப்படும் சுற்றுலாத் தொழில்துறையின் மறுமலர்ச்சி தொடர்பில் ஆராய நேற்றுமுன்தினம் (16) காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியா உடபுசலாவை கோர்ட் லொட்ஜ் தோட்டத்திற்கு நேரடி விஜயம் மேற்கொண்டிருந்தார். Peko Trail பாதையினூடாக ஜனாதிபதி நடைப் பயணமாக இப்பகுதிகளை மேற்பார்வை செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

"Peko Trail" என்பது இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளூடாகச் செல்லும் 300 கிலோ மீற்றர் மலையேறும் பாதையாகும். ஆசியாவின் மிக ரகசியமான பாதைகளில் இதுவும் ஒன்றாகும்.

Peko Trail என்று அறியப்படும் இந்தப் பாதையானது கண்டியில் ஆரம்பித்து ஹட்டன் ஊடாக ஹோட்டன் தென்ன தேசிய வனப் பூங்கா வரையில் செல்கிறது. அதன் பின்னர் ஹப்புத்தலை எல்ல ஊடாக பயணித்து அழகிய நுவரெலியா நகரத்தில் பயணத்தை நிறைவு செய்யலாம். இந்த பாதை பிரித்தானிய காலனித்துவ காலத்தில் பெருந்தோட்டங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்குச் செல்ல பயன்படுத்தப்பட்டுள்ளது.

Peko Trail பாதையினூடாக 3.2 கி.மீ தூரத்திற்கு நடைப் பயணமாக சென்ற ஜனாதிபதி கோர்ட் லொட்ஜ் தோட்ட மக்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

அப்பகுதி மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிறப்பு வரவேற்பளித்ததோடு, ஜனாதிபதி அங்குள்ள மக்களுக்கு தமிழ், சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பிரவுன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் கோர்ட் லொட்ஜ் தோட்டம் 264 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு. அங்கு 349 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த விஜயத்தின் போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் கல்வி, சுகாதார பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்திய ஜனாதிபதி, உயர்தரத்தின் பின்னரான அப்பகுதி பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் ஆராய்ந்தார்.

அதனையடுத்து தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

கோர்ட் லொட்ஜ் தோட்டத்தில் "Light Bright" என்ற நாமத்திலான தேயிலை வகை உற்பத்திச் செய்யப்படுவதோடு, அங்கு சுற்றுலா விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி தொழிற்சாலை ஊழியர்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இப்பகுதியின் ஊடாக மலையேறும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுவையான தேநீரை அருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் கவனம் செலுத்தினார்.

பின்னர் Peko Trail பாதையினூடாக சுற்றுலா தொழில்துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

Peko Trail வேலைத்திட்டத்தின் ஸ்தாபகரான இலங்கையின் மலையகப் பகுதிகளில் பல வருடங்களாக சுற்றுலா பயணங்களை மேற்கொண்டிருக்கும் சுற்றுலா ஆலோசகர் மிகோல் குணாட் உலகின் மிகச் சிறந்த மலையேறுதல் களமாக இலங்கையை உலக வரைபடத்தில் இணைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

Peko Trail வழிப்பாதையின் ஊடாக சுற்றுலா பயணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்கு இந்நாட்டின் வரலாறு, கலாசாரம், உள்நாட்டு உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு அனுபவங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். Peko Trail சுற்றுலா வழிப்பாதை 22 கட்டங்களை கொண்டுள்ளதோடு, ஒரு நாள் அல்லது பல நாட்களாக பயணிக்கவும் முடியும்.

இலங்கையின் தேசிய சுற்றுலா வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக முன்னெடுக்கப்படும் Peko Trail திட்டத்திற்கு ஐரோப்பிய யூனியன் (EU) மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனம் (USAID) ஆகியவற்றின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளதோடு, நிலையான சுற்றாடல் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களும் அதனில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அருமையான சுற்றுலா அனுபவத்தை தேடிச் செல்லல் உள்ளிட்ட புதிய சுற்றுலாச் செயற்பாடுகளை இலங்கைக்குள் வலுப்படுத்தல், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

Peko Trail வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க உதவியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்த மிகேல் குணாட், சுற்றுலாத் துறையில் புதிய மாற்றத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

### உலகில் மலையேற்றத்துக்கான சிறந்த களமாக இலங்கை





# தமிழ் மக்களின் சுமை தாங்கும் தர்ம தேவதையாக அமைச்சர் டக்ளஸ்

ஆயுதப் போராட்ட காலங்களிலும் சரி, ஜனநாயக வழிமுறையினூடாகவும் சரி, தமிழ் மக்களின் சுமைதாங்கும் தர்ம தேவதையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்து வருகின்றார் எனத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறீ. பற்குணராஜா, அமைச்சர் முன்னெடுக்கும் முயற்சிகள் தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பனவாகவே இருந்து வந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இளைஞராக இருந்த காலத்தில் அவரது செயற்பாடுகள் எவ்வாறானதாக இருந்ததென்பதை நினைவு கூர்ந்ததுடன் இன்றுள்ள அரசியல்வாதிகளுள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேறுபட்டவராகவே இருக்கின்றார் என்றார்.



### யாழ். பல்கலை துணைவேந்தர் புகழாரம்!

அவர் மக்களுக்கான தேவைகளை அறிந்து அவர்களது நலன்கள், அவர்களது எதிர்காலம், அவர்களது பொருளாதாரம் என்பன எவ்வாறானதாக இருக்க வேண்டும் அல்லது கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எவ்வாறு அவற்றை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதிலேயே அதிக கரிசனை மிக்கவராக இருந்து வருகின்றார்.

இவ்வாறான ஒருவரைத்தான் தமிழ் மக்கள் அதிகம் நேசிக்க வேண்டும். அது மட்டுமல்லாது தமிழ் மக்களின் கல்வித்தரம் மேலும் உயர்வடைவதற்கான பல்வேறு முயற்சிகளை குறிப்பாக, எவ்வாறான தடைகள் இருந்தபோதிலும் அவற்றைத் தகர்த்து வெற்றிகளை பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

இதற்கு கிளிநொச்சி அறிவியல் நகரும், யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் சான்று பகர்கின்றன.

அதுமட்டுமல்லாது பின்தங்கிய கிராமங்களின் விளையாட்டுத்துறை, கல்வி ஆகியவற்றில் மட்டுமல்லாது அப்பகுதி மக்களின் வாழ்வாதாரங்களிலும் அவர் அதிக அக்கறை செலுத்தி வருவதை பார்க்க முடிகின்றது. அதேவேளை அமைச்சரின் அரசியல் சாணக்கியத்தினூடாக தொழில்வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகளும் எமது மக்களுக்கு கிடைத்திருக்கின்றன.

அதேபோன்று எதிர்காலத்திலும் எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தகுதியானவராகவும் அவரே இருக்கின்றார். இந்த யதார்த்தத்தைப் புரிந்து யாழ். பல்கலைக் கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினர் மட்டுமல்லாது அனைவரது முன்னெடுப்புக்களும் அமைந்தால், அனைத்து தேவைகளுக்குமான தீர்வுகளும் சிறப்பானதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இடர்மிகு காலத்தின் குரல் ஊடகர் பொ.மாணிக்கவாசகம்



### ஈழத்து ஊடகத்துறையில் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக துணிச்சலுடன் பணிபுரிந்த பொ. மாணிக்கவாசகத்தின் முதலாவது ஆண்டு நினைவு தினம் கடந்த 12ஆம் திகதியாகும்

இலங்கையில் உள்நாட்டு மோதல்கள் இடம்பெற்ற நாட்களில் இரவு 9.15க்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்க மாட்டார்கள்.

அந்தக்காலத்தில் வானொலிப் பெட்டிகளுக்கு முன்பாக, 'இது லண்டன் பிபிசியின் உலக சேவையில் இருந்து முழங்கும் தமிழோசை' என்ற ஆனந்தியின் அறிவித்தலுடன் 'வடபுலத்திலிருந்து மாணிக்கவாசகம்' என்ற அறிவிப்புக்காய் காத்திருந்த காலங்களை மறக்க முடியாது.

#### இடர்மிகு காலத்தின் குரல்

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகம் முதலாவது ஆண்டு நினைவு தினம் கடந்த 12ஆம் திகதியாகும். பத்திரிகை தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு சிறந்த ஊடகவியலாளராகச் சேவையாற்றிய, பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.

பொ. மாணிக்கவாசகம் பத்திரிகையாளராக ஆற்றியசேவையும், அதிலும் விசேடமாக பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆற்றிய பணிகளும் மறக்க முடியாதவை. கல்வி, சுகாதாரம், அரசியல் களங்களில் உண்மை, நேர்மை, துலங்கும் வகை செய்திகள் தந்த மாண்பு மகத்தானது.

#### வாழ்நாள் சாதனையாளர் விருது

13/12/2023இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ. மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் “கால அதிர்வுகள்”, “வாழத்துடிக்கும் வன்னி”, “மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்” என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத்துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித்திருந்தார்.

#### தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர்

தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர், அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.

#### 'வென்மேரி' விருது கௌரவம்

யாழ்ப்பாணத்தில் 18/8/22இல் நடைபெற்ற 'வென்மேரி விருதுகள்" விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

"வென்மேரி அறக்கட்டளை"யின் முதலாவது விருது விழாவான இந்நிகழ்வு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விழா என்ற மகுடத்துடன் நடைபெற்ற இந்த விழாவில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டார்கள். மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் எனப் பலதரப்பட்ட ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஊடகத்துறையில் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை முக்கியமானதாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# இஸ்ரேல்-ஈரான் பதற்றம் போராக மாற்றம் பெறுமா?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**மேற்காசியப் பிராந்தியம் பாரிய மனித அழிவுகளுக்கு தயாராவதாகவே தெரிகிறது. இஸ்ரேல்–ஹமாஸ் போர் பாலஸ்தீனர்களை மட்டுமல்ல பிராந்திய நாடுகளின் சாதாரண அராபியர்களையும் அழிவுக்கு உள்ளாக்க ஆரம்பித்துள்ளதாகவே தென்படுகிறது. ஹமாஸ் அமைப்பின் முக்கியஸ்தர் இஸ்மாயில் ஹலியின் மூன்று மகன்கள் மற்றும் பேரக்குழந்தைகள் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டமை ஹமாஸின் தாக்குதலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. ஹமாஸ்– இஸ்ரேல் போரின் ஆரம்பகாலங்களைவிட தற்போது இஸ்ரேலியத் தாக்குதலும் ஹமாஸ் அமைப்பின் பிரதான தளபதிகள் கொல்லப்படுவதும் அதிகமாக உள்ளது. அதனால் இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கோ அல்லது தெற்கு காஸா மீதான தாக்குதலை நிறுத்துவது பற்றியோ கவனம் கொள்ளாது என்பது தெளிவாகத் தெரிகிறது. மறுபக்கத்தில் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பது போல் அமெரிக்கா காட்டிக் கொண்டாலும் அதன் உண்மையான வடிவம் தற்போது தெரிந்துள்ளது. ஆனாலும் ஈரான்– இஸ்ரேல் போர்ப் பதற்றம் மேற்காசியாவை உலுக்குவதாகவே தெரிகிறது. இக்கட்டுரையும் ஈரான்– இஸ்ரேல் போரின் வாய்ப்புக்களை தேடுவதாக அமையவுள்ளது.**

முதலாவது, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலையொட்டி இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பதாக இப்பகுதியில் பல தடவைகள் வெளிப்படுத்தப்பட்டது. அமெரிக்க இஸ்ரேல் முறுகலானது வெறும் ஏமாற்றுவித்தை மட்டுமே என்பது, தற்போது தெரியவந்துள்ளது. ஈரான் தனது சிரியாவில் அமைந்துள்ள தூதரகம் மீதான இஸ்ரேலியத் தாக்குதலுக்கு பதிலடி வழங்கப்படும் என்று தெரிவித்ததுடன் அமெரிக்காவை விலகியிருக்குமாறும் கேட்டுக் கொண்ட அறிவிப்பு வெளியான பின்னர், இரும்புக் கவசம் போல், இஸ்ரேலை அமெரிக்கா பாதுகாக்கும் என பைடன் தெரிவித்துள்ளார். இதுவரை இஸ்ரேலுக்கு எதிராக முன்வைத்த அனைத்துக் கருத்துக்களும் போலியானவை என்பதை பைடன் உறுதிப்படுத்தியிருந்தார். ஏறக்குறைய அமெரிக்காவே இஸ்ரேல் ஹமாஸ் போரின் முக்கிய பங்காளி. இஸ்ரேலை பாதுகாப்பது அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் அவற்றின் நேட்டோ இராணுவ அமைப்பும் தான் என்பதை போர் தொடங்கியதிலிருந்து உணரக் கூடியதாக இருந்தது. இஸ்ரேலை சாடுவது, உணவுப் பொதிகளை வீசுவது, போர் நிறுத்தத்துக்கு உழைப்பது போன்ற பலவிடயங்களை திட்டமிட்டே மேற்கு பிரயோகிக்கின்றது. ஏகாதிபத்தியத்தின் உண்மை வடிவத்தை மறைப்பதற்கே அத்தகைய உத்திகளை அவ்வப்போது வெளிப்படுத்துகிறது மேற்குலகம்.



இரண்டாவது, அமெரிக்க ஜனாதிபதி தனது பிரஜைகளை இஸ்ரேலின் அனைத்துப் பிரதேசங்களிலும் நடமாடக் கூடாதென தடைவிதித்துள்ளார். காரணம் ஹமாஸ் பணயக் கைதிகளாக பிடித்த அமெரிக்கப் பிரஜைகள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை என்பதை கவனத்தில் கொண்டிருப்பதுடன் போரின் இலக்கு அமெரிக்கர்களும் என்பது அமெரிக்க நிர்வாகத்திற்கு தெரிந்துள்ள விடயமாகவே உள்ளது. அதனால் தனது பிரஜைகளைப் பாதுகாப்பதிலும் போரில் அமெரிக்காவின் பங்கையும் பைடன் உறுதிப்படுத்தியுள்ளார்.

### ஹமாஸ் பணயக் கைதிகளாக பிடித்த அமெரிக்கப் பிரஜைகள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை

மூன்றாவது, ஈரான், இஸ்ரேலுடன் போர் புரியக் கூடிய இராணுவ வலிமையுடையதாக உள்ளதா என்பது பிரதான கேள்வியாகவே உள்ளது. தற்போது அமெரிக்கா தலைமையிலான நேட்டோ உட்பட மேற்குலகத்துடன் இணைந்துள்ள இஸ்ரேலை எதிர்கொள்ளும் திறன் ஈரானுக்கு உண்டா என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். வெறுமையாகவே இஸ்ரேலுடன் மோதுவதே கடினமான இலக்காக அமைவதுடன், அமெரிக்கா, இஸ்ரேலுக்கு வழங்கும் ஆதரவு போன்று ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்பது கடந்த இஸ்ரேல் ஹமாஸ் போரில் கண்டு கொள்ளக் கூடிய விடயமாகவிருந்தது. எனவே ஈரான் தனித்தே போரை எதிர்கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகும். நேரடிப் போரை இஸ்ரேலுடன் மேற்கொள்ளப் போவதாக ஈரானிய அதியுயர் தலைவர் எச்சரித்துள்ளார். அதேநேரம் ஈரானிய வெளியுறவு அமைச்சர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, தமது மண்ணில் இஸ்ரேல் தாக்குதலை மேற்கொள்ளாதவரை ஈரான் இஸ்ரேலுடன் போருக்கு போகாது என ஐக்கிய நாடுகள் சபையிடம் தெரிவித்துள்ளார்.




நான்காவது, ஈரான் இஸ்ரேலுடன் நேரடிப் போருக்கு போவதற்கான வாய்ப்பு இல்லை என்றே ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதற்கு பலகாரணங்கள் உண்டு. குறிப்பாக ஈரானின் இராணுபலம் இஸ்ரேலுக்கு முன்னால் தாக்குப்பிடிக்கக் கூடியதல்ல. ஈரானிடம் நீண்டதூர ஏவுகணைகளும் நவீன தொழில்நுட்பமுடைய ரோன்களும் மற்றும் விமானத் தாக்குதல் திறனும் இருந்த போதும், இஸ்ரேல் அதனை எதிர் கொள்ளும் திறனுடன் போரில் ஈடுபடுவதுடன் அமெரிக்காவின் இராணுவ ஒத்துழைப்புமுள்ளது. அதனால் இலகுவில் இஸ்ரேலை எதிர் கொள்ள முடியாத நிலை ஈரானுக்கு ஏற்படும். அதனால் நேரடிப் போரை ஈரான் தவிர்க்கவே விரும்பும். அமெரிக்காவின் வெளியுறவுச் செயலாளர் பிளிங்டனும் மேற்காசிய நாடுகளுடன் தொடர்ச்சியான உரையாடலை நடாத்தி வருகிறார். அதாவது ஈரான் இஸ்ரேல் போரை பிராந்திய நாடுகள் விரும்பவில்லை என்பதை முதன்மைப்படுத்தி வருகிறார். அத்தகைய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்கா இஸ்ரேல் மீதான போரை தடுக்கும் எனவும், இரும்புக் கவசம் போல் பாதுகாக்கும் எனவும் வெளிப்படுத்த முனைகிறார் பிளிங்டன். அமெரிக்காவின் இராஜதந்திர செயற்பாடாகக் கூட பைடனின் அறிவிப்புக்கு மதிப்பீடுகள் எழுந்துள்ளன.

**ஈரானிடம் நீண்டதூர ஏவுகணைகளும் நவீன தொழில்நுட்பமுடைய ரோன்களும் மற்றும் விமானத் தாக்குதல் திறனும் இருந்த போதும், ஈரானின் இராணுவ பலம் இஸ்ரேலுக்கு முன்னால் தாக்குப்பிடிக்கக் கூடியதல்ல.**

ஐந்தாவது, ஈரானின் வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாகின் தெரிவித்த ஒரு கருத்து கவனத்திற்குரியது. அதாவது ஈரானின் மண்மீது தாக்குதல் நிகழ்த்தும்வரை இஸ்ரேல் மீது ஈரான் நேரடிப் போரை மேற்கொள்ளாது என்பதாகும். ஈரானின் பலம் முழுவதும் அதன் தரையிலேயே குவிந்துள்ளது. அது ஒரு நீண்ட நிலத் தொடர்ச்சியையும் வலுவான புவிசார் இஸ்லாமிய அரசியலையும் கொண்டது. அது மட்டுமன்றி இஸ்ரேலுடன் தரைத் தொடர்பையோ எல்லையையோ பகிராத நாடு என்ற வகையில் அதன் இருப்பு தனித்துவமானது. ஈரானின் அரசியல் புவியியலே அதன் பாதுகாப்பாகும். ஈரானின் புவிசார் அரசியலைவிட அதன் அரசியல் புவியியலே வலுவானது. அதனால் இஸ்ரேலிய தாக்குதல் மட்டுமல்ல அமெரிக்காவின் தாக்குதலும் அதிக நெருக்கடியை ஈரானில் எதிர்கொள்ளும். ஏற்கனவே ஈரானில் 1979ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு சிறந்த அனுபவம் உள்ளது. ஈராக்குடனான வெற்றியும் அதன்வழியே ஈரானுக்கு ஏற்பட்டதென்பது மறுக்க முடியாதது.

ஆறாவது, ஈரானின் இஸ்ரேல் மீதான போர் ஹிஸ்புல்லா, ஹமாஸ் மற்றும் ஹவுத்தி கிளர்ச்சிக் குழுக்கள் மூலமே நிகழ வாய்ப்புள்ளதாக தெரிகிறது. ஏனெனில் அத்தகைய மூன்று குழுக்களுக்கும் ஈரானின் ஆதரவு உள்ளதாகவே தெரிகிறது. அத்தகைய ஆயுதக் குழுக்களை முன்னிறுத்தியே ஈரான், இஸ்ரேல் மீதான போரை நிகழ்த்துவதாக அமெரிக்காவும், இஸ்ரேலும் கருதுகின்றன. அது மட்டுமன்றி அத்தகைய குழுக்களுக்கான ஆயுத தளபாட விநியோகத்தை ரஷ்யா மற்றும் சீனா வழங்குவதாகவும் இஸ்ரேல் மீதான போர் சர்வதேச பரிமாணம் கொண்டதாகவும் விவாதிக்கப்படுகிறது. ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும் வடகொரியா என்பன இப்போருக்கான ஆயுத தளபாட விநியோக சக்திகள் என்ற அடிப்படையிலேயே இஸ்ரேலும் மேற்குலகமும் செயல்படுகின்றன. ஆனால் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவது போன்று அல்லது மேற்குலகம் இஸ்ரேலுக்கு ஒத்துழைப்பது போன்று ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும் வடகொரியா ஹமாஸ் அமைப்புக்கோ ஏனைய கிளர்ச்சிக் குழுக்களுக்கோ ஆதரவு வழங்காது.

எனவே இஸ்ரேல் ஈரான் பதற்றம் போராக மாறுவதற்கான நகர்வுகளை இழந்து வருகிறது. அத்தகைய உத்தியை ஈரான் மேற்கொள்வதே ஈரானுக்கு பாதுகாப்பானது. இஸ்ரேலுடன் ஈரான் போருக்கு போகுமாயின் ஈரானின் பலம் காணாமல் போவது மட்டுமல்ல மேற்காசியாவில் வலுவான அரசின் இருப்பே காணாமல் போய்விடும். அதனைத் தக்கவைப்பதே தற்போது ஈரானுக்கு அவசியமானது. இஸ்ரேலும் மேற்குலகமும் இலகுவில் தோற்கடிக்க முடியாத சக்திகள். அதனை எதிர்கொள்வதென்பது இராணுவ பலத்தில் மட்டுமல்ல புலனாய்விலும், பின்வாங்கலிலும் சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பதிலுமே தங்கியுள்ளது. அதனை ஈரான் தக்கவைக்கும் உத்தியை வெளிப்படுத்த வேண்டும். தற்போதைய ஈரானின் பலம் ஈரானின் அரசியல் புவியியலிலே உள்ளது.

---

# இலங்கை நூலக சங்கத்தின் 18ஆவது தேசிய ஆய்வு மாநாடு

## இன்று தென் கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில்



இலங்கை நூலக சங்கம் அதனது வருடாந்த மாநாடுகளை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நடத்தி வருகிறது. அது பல அங்கத்தவர்களைக் கொண்டு நூலகர்களுக்கான தொழில் முறை தராதரங்களைப் பேணும் மற்றும் நூலகவியல் கல்வியினை மேற்கொள்ளும் நிறுவனமாகும். அந்தவகையில், அதனது 18ஆவது தேசிய ஆய்வு மாநாட்டை இன்று (18) தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்துகிறது.

இம்முறை நடைபெறுகின்ற இவ் தேசிய ஆய்வு மாநாடு “நூலகங்கள் மற்றும் சமூகத்தின் இணைப்பு, சமூகத்தின் மூலம் பிணைப்பினை வலுப்படுத்தல்'' எனும் தொனிப் பொருளில் அமையவுள்ளதோடு இம்முறை விஷேடமாக இலங்கையில் மும்மொழிகளிலும் இவ் ஆய்வு மாநாடு நடத்தப்படுகின்றது.

இலங்கை நூலக சங்கத்தின் தற்போதைய தலைவர் திரு. பிருத்தி லியனகே மற்றும் முன்னாள் தலைவர் கலாநிதி திரு. ஆனந்த திஸ்ஸ ஆகியோரின் நெறிப்படுத்தல்களில் இவ் ஆய்வு அமர்வுகள் இடம்பெறுகின்றன.

இம்மாநாட்டில் பொது நூலகர்கள், பாடசாலை நூலகர்கள், நூலக பணியாளர்கள், எதிர்கொள்ளும்பிரச்சினைகள்மற்றும் சவால்கள் ஆய்வுக்குட்படுத்தப் படவுள்ளது. அந்த வகையில் இம் முறை தமிழ்மொழி மூலம் கிழக்கு மாகாணத்தில் இம்மாநாடு இடம்பெறுகிறது .



இவ் ஆய்வு மாநாடு இரண்டு கட்ட அமர்வுகளாக இடம் பெறுகின்றன. முதல் அமர்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட, தொழில்நுட்ப பிரிவு கேட்போர் கூடத்திலும் இரண்டாவது அமர்வு எதிர்வரும் 26ம் திகதி கம்பஹா பொது நூலகத்தில் சிங்கள மொழி மூலமும் இடம் பெறவுள்ளது.

இதன் முதலாவது அமர்வில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கரும், முதன்மை பேச்சாளராக பேராதனை பல்கலைக்கழக நூலகர் ஆர். மகேஸ்வரனும் கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், கிழக்கு பல்கலைக்கழக நூலகர் கலாநிதி டபிள்யூ.ஜே. ஜெயராஜ், தென் கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட தலைவர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், இலங்கை நூலகர் சங்க தலைவர் பிருத்தி லியனகே, ஆகியோரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மேலும் முதன்மை அமர்வின் தலைமையுரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் நூலகர் கலாநிதி திருமதி கே. சந்திரசேகர் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வின் மாநாட்டு தலைவராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி திருமதி முஹம்மட் மஜீட் மஸ்றூபாவும், இணை மாநாட்டு தலைவராக கிழக்கு பல்கலைக்கழக பிரதி நூலகர் எஸ். சாந்தரூபனும், மாநாட்டின் செயலாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி ஜெனனும், இணைச் செயலாளராக கல்முனை பொது நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

ஜெளபர் ஏ கரீம்...
(இறக்காமம் தினகரன் நிருபர்)



# ஈஷி கேஷில் போதைப்பொருள் விநியோகம்: 'வயம்ப குமாரி' கைது

முந்தல் அகுணவில பிரதேசத்திலிருந்து பல பிரதேசங்களுக்கு ஈஷி கேஷ் மற்றும் வேறு பல முறைகளைப் பயன்படுத்தி ஐஸ் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த வயம்ப குமாரி என்றழைக்கப்படும் பெண் ஒருவரை முந்தல் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள், பல்வேறு வங்கிகளுக்கு சொந்தமான ஏ.ரி.எம் அட்டைகள் மற்றும் கைத்தொலைபேசிகள் மேலும் பத்தாயிரம் ரூபா பணம் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

முந்தல் அகுணவில பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடைய 'வயம்ப குமாரி' என்ற பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# துறைசார் வல்லுநர்களின் வழிகாட்டல்கள் சுபீட்சமான எதிர்காலத்துக்கு அடித்தளமிடும்

**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**





துறைசார் வல்லுநர்கள் குறைந்த பட்சம் அவர்கள் சார்ந்த விடயங்களிலாவது மக்களை அறிவுறுத்தி, ஆலோசனை வழங்கி வழி காட்ட வேண்டுமென தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.அக்கரைப்பற்று "பைத்துல்ஹிக்மா" கல்லூரியில் நடந்த மாணவர்களுக்கு கௌரவம் வழங்கும் விழாவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.இந்நிகழ்வில் பிரதம அதிதியாககப் பங்கேற்ற அதாஉல்லா மேலும் குறிப்பிட்டதாவது;

துறைசார் நிபுணர்கள் சுய நலத்திலிருந்து விடுபட்டு பொது நலத்தொண்டில் ஈடுபட வேண்டும்.அல்லாஹ்வின் அருட்கொடையாக கிடைத்த அறிவை அமானிதாமாகக் கருதிச் செயற்பட துறைசார் நிபுணர்கள் முன்வருவது அவசியம்.சமூக முன்னேற்றத்தில் இவ்வாறானவர்களின் பங்களிப்புக்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன.நவீன சர்ச்சைகளில் சிக்கியுள்ள இன்றைய உலகை மீட்பதற்கு துறைசார் நிபுணர்களின் ஒத்துழைப்புக்கள் அவசியமாகிறது. பைதுல் ஹிக்மா கல்வி அபிவிருத்தி நிறுவனம் எமது இளம் தலைமுறையினரை சரியான பாதைக்கு வழிகாட்டுகின்றமை பாராட்டுக்குரியது. இதுவே இன்றைய தேவையுமாகும். இது தொடர வேண்டும். இவ்வாறே ஒவ்வொரு துறையினரும் தமது துறைசார் பணிகளை மேற்கொள்ள முன்வந்தால், சுபீட்சமான எதிகாலத்தை நோக்கிப் பயணிக்கலாம் என்றார். இந்நகிழ்வில் "பைத்துல் ஹிக்மா" கல்வி நிறுவனத்தில் பயின்று சர்வ கலாசாலைகளுக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில் தலைமையில் இந்நிகிழ்வு இடம்பெற்றது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: உண்மையான...

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் (16) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இவருடைய கருத்துக்கள் தொடர்பாக பாராளுமன்ற அமர்வில் நடைபெறவுள்ள விவாதத்தில்,தாமும் உரையாற்ற உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சுமார் 500 இற்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். இன்னும் பலர் இந்த வடுக்களுடன் வாழ்கின்றனர். எனவே, இதை ஒரு சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

குற்றம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

## மடு அன்னை திருச்சொரூப பவனியில்...

அனுமதியை பெற்றுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நிகழ்வுகளின் ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடிய அமைச்சர், ட்ரோன் மூலம் மடு அன்னையின் திருச்சொரூபத்துக்கு பூச்சொரிவதற்கு அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.தனிப்பட்டவர்கள் ட்ரோன்பாவனையை மேற்கொள்வது பாதுகாப்புக் காரணங்களுக்காக தடை செய்யப்பட்டிருந்தது.

இருந்தபோதும், அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## வடக்கில் வெகு விரைவில்...

இடம்பெற்ற புதுவருட கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, இதனை அவர் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

"பெரிய குளங்கள் மற்றும் சிறு குளங்களின் நீர்மட்டம் போதுமானதாக உள்ளதால், இடைப்போகம் மற்றும் சிறுபோகங்களில் போதுமான அளவு விளைச்சலை எதிர்பார்க்க முடியும். இவ்வாறு விளைச்சல் கிடைத்தால் எங்களுடைய வறுமையிலிருந்து மீள்வதற்கு நல்ல சந்தர்ப்பமும் கிடைக்கும்.

இவ்வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்திலும் குளங்களை புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல, வட மாகாணத்தில்17 பாரிய குளங்களை புனரமைப்பு செய்வதற்கான நிதியை மத்திய அரசாங்கத்திடமும் ஏனைய நிதி நிறுவனங்களிடமும் நாங்கள் கோரியுள்ளோம்.

வட மாகாணத்தில் வீடில்லாதவர்களின் சிக்கலை நிவர்த்திக்கும் நோக்கில், புதிய வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

32,000 பயனாளிகளுக்கு இவ்வீடுகள் வழங்கப்படவுள்ளன. குறித்த வீட்டுத் திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட்டு காணி உறுதிப் பத்திரத்துடன் பயனாளர்களிடம் ஒரு வருடத்திற்குள் கையளிக்கப்பட உள்ளன. மக்களிடையே கலை, கலாசாரங்களை வளர்ப்பதற்காக கிராமங்கள் தோறும் திறந்தவெளி மேடைகளை அமைக்கப்பட உள்ளன.இவ்விடயம் தொடர்பில் கலாசார உத்தியோகஸ்தர்கள் புதிய அணுகுமுறைகளை பின்பற்ற வேண்டும். கிராமங்களில் திறந்தவெளி மேடைகளை அமைத்து நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதன் ஊடாக கலை, கலாசாரங்களின் தனித்துவங் களை பாதுகாக்க முடியும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

## சிறுவர்களை பாதிக்கும்...

வயிற்றுப்போக்கு சிறுவர்களிடையே அதிகம் பரவி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

அடிக்கடி தண்ணீருடன் மலம் வெளியேறுதல், வயிற்று வலி அல்லது பிடிப்புகள், பசியின்மை, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை இந்த நோய்க்கான அறிகுறிகளாக உள்ளன.

இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு அழைத்துச் செல்லுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர். சிறார்களுக்கு உணவளிக்கும் போது அதிக விழிப்புடன் இருக்குமாறும் பெற்றோர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதற்கிடையில், சிறுவர்கள் மத்தியில் டைபாய்டு காய்ச்சல் (Typhoid fever) பரவுவது குறித்தும் மருத்துவர் எச்சரித்துள்ளார். ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களின் இறப்புக்கு வயிற்றுப் போக்கு நோய், இரண்டாவது முக்கிய காரணமாக உள்ளதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு உட்பட்ட வெளிநாட்டுப் பயணங்கள்

# ஆசிரியர்களை அனுமதிக்கும் அதிகாரம் மாகாண கல்விப் பணிப்பாளர்களிடம்

ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கான விடுமுறைகளை அனுமதிக்கும் அதிகாரம், மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலப் பகுதியில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ள ஆசிரியர்கள் அல்லது கல்வித்துறை உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை வழங்கும் பணிகளை இனிமேல் மாகாண கல்விப் பணிப்பாளர்களே மேற்கொள்வர். கல்வி அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் இவ்வதிகாரம் மாகாண கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.இவ்வாறான விடுமுறைகளைக் கோருவோருக்கான அனுமதியை கல்வி அமைச்சு வழங்குவதில் நீண்ட காலங்கள் தேவைப்படுகின்றன. இதனால், குறிப்பிட்ட காலத்துக்குள் இவர்களால் வெளிநாடு செல்ல முடியாதுள்ளது. இது குறித்து கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு பயணங்களுக்கான விடுமுறை, விடுமுறையை நீடித்தல் போன்ற முடிவுகளையும் மாகாண கல்விப் பணிப்பாளர்களே மேற்கொள்ள உள்ளனர்.

இவ்விடுமுறைகள் தொடர்பிலான தகவல்கள் கோரப்படும்போது, தாமதமின்றி தகவல்களை வழங்கும் முறையை உருவாக்குமாறும் மாகாண கல்விப்பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## போலி ஆவணங்கள் தயாரித்து...

பிரிவிடம் முறைப்பாடு செய்து அடுத்தகட்ட சட்டபூர்வ நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ்விவகாரம் தொடர்பில் அனுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள பீ/123/2024 ஆம் இலக்க வழக்குத் தொடர்பான விசாரணை நேற்றைய தினம் மேலதிக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதன்போதே நீதவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இதன் போது நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்த வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரி சுமித் யுவாரிஸ், மேற்படி பிரச்சனைக்குரிய காணியில் ஆறு ஏக்கரை பிரதிவாதியான வர்த்தகர் சட்ட விரோதமாக அபகரித்து காடுகளை அழித்து தீ வைத்து கொளுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார். மேற்படி காணி தொடர்பில் நான்கு அனுமதிப் பத்திரங்கள் தம்மிடம் உள்ளதாக தெரிவித்த பிரதிவாதி, நான்கு அனுமதிப் பத்திரங்களையும் சமர்ப்பித்துள்ளதாக நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ள வன பாதுகாப்பு அதிகாரி, அந்த அனுமதிப் பத்திரங்களின் உண்மைத் தன்மை தொடர்பில் வன பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் மிஹிந்தலை பிரதேச செயலாளரிடம் எழுத்து மூலம் வினவியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அனுமதிப்பத்திரங்களின் எவ்வித பதிவோ அல்லது ஆவணங்களோ மிஹிந்தலை பிரதேச செயலகத்தில் கிடையாது என்றும் மிஹிந்தலை பிரதேச செயலாளர் என். பி ஜே. நாயக்க பண்டாரவின் சார்பில் உதவி பிரதேச செயலாளர் எம் .எம். கே.சந்திரகுப்த வன பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளதாகவும் வன பாதுகாப்பு அதிகாரி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். பிரதிவாதியால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அனுமதிப் பத்திரங்களில் ஒரு அனுமதிப் பத்திரத்தில் மாத்திரம் அனுராதபுரம் முன்னாள் மாவட்டச் செயலாளர் டி .கே தசநாயக்க கையொப்பமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதாக நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வன பாதுகாப்பு அதிகாரி, அந்த கையொப்பமும் அனுராதபுரம் முன்னாள் மாவட்டச் செயலாளர் டி .கே. தசநாயக்கவின் கையொப்பம் இல்லை என மிஹிந்தலை முன்னாள் பிரதேச செயலாளர் சிறிமேவன் தர்மசேன வன பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மறுசீரமைப்புக்கு நட்பு நாடுகளின்...

நிபந்தனைகள் தொடர்பில் இரு தரப்பினருக்கிடையில் இணக்கப்பாட்டுக்கு வர முடியாதுள்ளமை தொடர்பிலும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இருந்தபோதும், இருதரப்பினரதும் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகள், தொடர்ந்தும் சில வாரங்களுக்கு முன்னெடுக்கப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. வொஷிங்டன் நகரில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மாநாட்டில், இலங்கை சார்பாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பங்கேற்றுள்ளார்.

## 12 மாவட்டங்களுக்கு முதற்கட்டமாக...

விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் இவ்வருட வரவு செலவு திட்டத்தில், மலைநாட்டு எழுச்சி பத்தாண்டு பத்து வருட பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு 10.000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, குருநாகல், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதல் காலாண்டில் 09 மாவட்டங்களுக்கு இத் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தினபுரி, கேகாலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## நடிகை தமித்தா, கணவருக்கு...

சின்னத்திரை நடிகை தமித்தா அபேரத்ன மற்றும் அவரது கணவர் ஆகியோரை தொடர்ந்து (24) வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள், நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை கவனத்தி கொண்ட நீதிமன்றம் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளது. குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தினர் இவ்விருவரையும் கைது செய்திருந்தனர். மேற்படி இக்குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த (05) நடிகை தமித்தா அபேரத்ன மற்றும் அவரது கணவர் ஆகியோர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

## புதிய விசா நடைமுறை...

முறைக்குப் பதிலாக, இணைய வழி முறையிலான E விசா முறை அமுல்படுத்தப் பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. சுற்றுலா விசாவின் கீழ் 08 வகையான விசாக்கள் வழங்கப்படுகின்றன. வணிக விசாவின் கீழ் 04 வகையான விசாக்கள் வழங்கப்படும்.

புதிய விசா முறையில், கட்டணம் முழுமையாக செலுத்தப்பட வேண்டிய தேவை மற்றும் இலங்கையில் தங்கியிருக்கக்கூடிய கால எல்லை என்பன அறிவிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எச். ஜே.இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள், அது தொடர்பான கட்டணங்கள் மற்றும் இலங்கையில் தங்கியிருக்கும் காலம் என்பன ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இணையவழி மூலம் விசாவுக்கு விண்ணப்பிப்பதால் விரைவாக விசாவை வழங்கும் சந்தர்ப்பம் இருப்பதாகவும் அவர் கூறினார். இப்புதிய முறைமூலம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் முதலீட்டாளர்களை கவர முடியும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எச்.ஜே.இலுக்பிட்டிய தெரிவித்தார்.

## புதிய நியமனங்களுக்கு...

பொதுச் செயலாளர் இந்த ஆட்சேபனைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவில் முன்வைத்துள்ளார்.

கட்சியின் யாப்பிற்கமையவே, சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளதாக கட்சியின் பதில் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். த்நாயக்கவிடம் வினவிய போது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர், சட்டத்தரணியூடாக தமது ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இன்று (18) இடம்பெறவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தின் போது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பிலும் அதற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனை தொடர்பிலும் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

## மீன் பிடிக்கும் தோரணையில்...

நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இச்சம்பவம் தொடர்பில், பத்துப் பேர் கடந்த (12) கைது செய்யப்பட்டனர்.

நாட்டின் தெற்கு ஆழ்கடல் பிரதேசத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் இவர்களைக் கைது செய்தனர்.இவர்களிடமிருந்து 83 கிலோ ஹெரோயின் மற்றும் 179 கிலோ ஐஸ் என்பன கைப்பற்றப்பட்டன.

இவர்கள் பத்துப் பேரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களை ஏழு நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளுக்கு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இன்றைய பலன்கள் (18.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :** புதியவர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது.

**ரிஷபம் :** குடும்பத்தில் சலசலப்பு அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல் ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும். போட்டிகளுக்கு மத்தியில் தொழில் முன்னேற்றத்தை காண்பீர்கள்.

**மிதுனம் :** பெற்றோர் வழியில் பிரச்சினைகள் ஏற்படும். உங்களுக்கு உதவுவதாக சொன்ன உற்றார் உறவினர்கள் கடைசி நேரத்தில் கை விரிப்பார்கள்.

**கடகம் :** துன்பங்களும் தொழில் நஷ்டங்களும், காரியத்தில் தடைகளும் வந்து கொண்டே இருக்கும். நீங்கள் நினைத்தது நிறைவேறாமல் போகலாம்.

**சிம்மம் :** தொகை வருவதில் தடைகள் ஏற்படும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் கூடும். தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்ள மாட்டார்கள்.

**கன்னி :** விபரீத ராஜயோக அடிப்படையில் எதிர்பாராத விதத்தில் நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும். தொழிலில் அடுக்கடுக்காக ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்.

**துலாம் :** குடும்பத்தில் சில பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். அதிக முயற்சி செய்தும் சில காரியங்கள் முடிவடையாமல் போகலாம்.

**விருச்சிகம் :** சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பாகப்பிரிவினைகளும் சுமுகமாக முடியும்.

**தனுசு :** பிள்ளைகளால் பிரச்சினைகளும் விரயங்களும் ஏற்படும். புதிய முயற்சிகளில் குறுக்கீடுகள் வரலாம்.

**மகரம் :** குடும்ப பிரச்சினை அதிகரிக்கும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்ய இயலாது. தொழிலில் குறுக்கீடுகளும் அதிகரிக்கும்.

**கும்பம் :** கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. கொள்கை பிடிப்போடு செயல்பட முடியாது. மருத்துவ செலவும் மனக்கவலையும் கூடும்.

**மீனம் :** சுப விரயங்களும் வீண்விரயங்களும் சொத்து விரியங்களும் ஏற்படும். உறவினர்களிடமும் உயர்மட்ட அதிகாரிகளிடமும் பகை வளர்த்துக் கொள்ள வேண்டாம்.

## உயிர்த்த ஞாயிறு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதற்கமைய எதிர்வரும் 24 புதன் கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரையான காலப் பகுதியில் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீடு, நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து, மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடத்தப்பட உள்ள தாக பதில் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஏப்ரல் (25) வியாழக்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரையான காலப் பகுதியில் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் 22338/39 ஆம் இலக்க வர்த்தமானி மற்றும் 2352/29 ஆம் இலக்க வர்த்தமானி ஆகியவற்றில் வெளியிடப்பட்ட இரண்டு ஒழுங்குவிதிகள், மதுவரிச் சட்டத்தின் கீழ் 2361/44 இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அறிவித்தல், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதிக்கப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான இரண்டாவது நாள் விவாதம் நடைபெறும். ஏப்ரல் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சபை ஒத்திவைப்பு விவாதத்தின் மூன்றாவது நாள் விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

## தங்கத்தின் விலை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

21 கரட் 01 கிராம் தங்கம் 22,020 ரூபாவாகவும் , 21 கரட் 08 கிராம் (01 பவுண்) தங்கம் 1,76,150 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் தங்கத்தின் விலை, இரண்டு இலட்சத்தை தொட்டிருந்தது.தற்போது மீண்டும் தங்கத்தின் விலையில் வரலாறு காணாத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

## புத்தாண்டு பாடலை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்நபர் மதுவரித் திணைக்களத்தில் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் நேற்று குளியாப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குளியாப்பிட்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## சாதாரண தர பரீட்சை; அடுத்த வாரம்...

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தபாலினூடாக பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் (06) ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை, எதிர்வரும் (15) வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பாலித தெவரப்பெருமவின்...

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாலித தெவரப்பெரும,மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## ஆரியரட்னவின் இறுதிக் கிரியைகள்...

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன பணிப்புரை வழங்கியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் சர்வோதய அமைப்புடனும் கலந்துரையாடியே பிரதமர் தினேஷ் குணவர்தன இத்தீர்மானத்தை எடுத்துள்ளார். இதன்படி அன்னாரது இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் எதிர்வரும் சனிக்கிழமை சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளன. 63 வருடங்களுக்கு மேல் சர்வோதய அமைப்பு இலங்கையில் பாரிய சேவைகளை செய்துள்ளது. அரச சார்பற்ற அமைப்பாக இயங்கி வரும் இவ்வமைப்பு எக்காலத்திலும் தடையின்றி தொடர்ந்து சமூக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. கலாநிதி ஆரியரட்ன ஆற்றியுள்ள தேசிய மற்றும் அர்ப்பணிப்புள்ள சேவைகளுக்காக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பல்வேறு விருதுகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் நாட்டில் அரசியல் தலைவர்களின் அனல் பறக்கும் இறுதிக்கட்ட பிரசாரம்

தமிழ் நாட்டில் நாளை மறுநாள் (ஏப். 19) தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நேற்றுடன் பிரசாரம் நிறைவடைந்தது. இந்நிலையில், அரசியல் தலைவர்கள் இறுதிக் கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாடு முழுவதும் நாளை மறுநாள் தொடங்கி ஜூன் 1ஆம் தேதி வரை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

7 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக தமிழ்நாட்டில் 39 தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளுக்கு






நாளை மறுநாள் (ஏப். 19) ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

நாளை மறுநாள் தமிழ்நாட்டு மற்றும் புதுச்சேரியில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், கடந்த 2 வாரங்களுக்கு மேலாக அனல்பறக்க நடந்துவந்த பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது.

தமிழ்நாட்டில் திமுக, அதிமுக, பாஜக கட்சிகள் கூட்டணி வைத்து போட்டியிடுகின்றன. நாம் தமிழர் கட்சி வழக்கம்போல் இந்த முறையும் தனித்து களம் இறங்கியுள்ளது. இவர்களை தவிர, ஏராளமான சுயேச்சைகளும் போட்டியிடவுள்ளன. இந்நிலையில், தமிழ்நாடு அரசியல் தலைவர்கள் மட்டுமல்லாமல், தேசிய தலைவர்களும் தமிழ்நாட்டில், வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை இல்லாத அளவுக்கு, பிரதமர் மோடி, கடந்த 4 மாதங்களில் 8 முறை தமிழ்நாட்டிற்கு வந்துள்ளார். காங்கிரஸ் முன்னாள் தலைவரும் எம்.பி.யுமான ராகுல் காந்தி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கே என காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தலைவர்களும் இந்தியா கூட்டணிக்காக களமிறங்கியுள்ளனர்.

பிரசாரம் செய்வதற்கு நேற்று கடைசி நாள் என்பதால், நேற்று காலை முதலே முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, பாஜக தலைவர் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், தேமுதிக தலைவர் பிரேமலதா விஜயகாந்த், முன்னாள் முதலமைச்சர் ஓபிஎஸ் என அனைவரும் இறுதி கட்ட பிரசாரம் மேற்கொண்டனர்.

### திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின்:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வீடியோ பரப்புரை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில், "வரும் 19ம் தேதி நம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகும் நாள். உங்க வாக்கு உங்க தொகுதியை மட்டும் தேர்வு செய்வதற்கான வாக்கு மட்டுமல்ல. 10 ஆண்டுகளாக நம் நாட்டை நாசப்படுத்திய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கிற தேர்தல். இனி இந்தியாவில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா ? வேண்டாமா ? என்று முடிவு செய்கிற தேர்தல் இது" இவ்வாறு கூறி 39 தொகுதிகளில் திமுக சார்பிலும், கூட்டணிக் கட்சிகள் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை கூறி வாக்கு சேகரித்தார்.

### அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி:

அதிமுக சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலையொட்டி, "தமிழர் உரிமை மீட்போம்; தமிழ் நாடு காப்போம்", "ஒற்றை விரலால் ஓங்கி அடிப்போம்" என்ற தாரக மந்திரத்தை குறிக்கோளாகக் கொண்டு, மத்தியில் தமிழ் நாட்டின் நியாயமான கோரிக்கைகளையும், உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான முழு அங்கீகாரத்தையும் அதிமுகவிற்கு வழங்க வேண்டும்.

தேர்தல் அன்று அதிமுகவின் சின்னமான 'இரட்டை இலை'க்கு வாக்களியுங்கள்" என தெரிவிக்கப்பட்டது.

### நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்:

விழுப்புரம், மரக்காணம் பேருந்து நிலையம் எதிரே நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

அப்போது அவர், "எண்ணற்ற உரிமைகளை இழந்து நிற்கிற என் இனத்தின் மக்கள் சொந்த நிலத்திலேயே உரிமையை இழந்து உணர்வு எழுந்து அடிமையாக நிற்க கூடிய ஒரு தேசிய இனத்தின் மக்கள், நீர் உரிமையை இழந்தோம்.

பசி இல்லாத தேசம், மக்களின் வறுமை இல்லாத தேசம், மக்களின் வாழ்க்கை தரம் உயர்ந்த நாடு, எல்லாருக்கும் வேலை, அவரவர் வாழ்விடத்திலே, ஆகச் சிறந்த கல்வி அவரவர் வாழ்விடத்திலேயே இதுதான் என்னுடைய கோட்பாடு" இவ்வாறு பேசினார்.

### பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை

கோவை கஸ்தூரி நாயக்கன் பாளையத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக பாஜக மாநிலத்தலைவர் அண்ணாமலை பங்கேற்றார்.

அப்போது அவர் பேசுகையில், "என் மண் என் மக்கள் யாத்திரை முடிந்தவுடன் லோக்சபா தேர்தல் வந்துவிட்டது.

இங்கு போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

இங்குள்ள முதியோர்களுடன் மாலை நேரத்தில் அமர்ந்து பேச வேண்டும் என கடந்த ஓராண்டாகவே முயற்சிகளை மேற்கொண்டேன். ஆனால், அதற்கு நேரம் கிடைக்கவில்லை.

தேர்தல் பிரசாரம் செய்வதற்கு இன்று கடைசி நாள். அதனால் உங்களைச் சந்தித்துப் பேச வேண்டும் என நினைத்தேன். அதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது" எனப் பேசிக் கொண்டிருக்கும் போதே கண் கலங்கினார். அவரைத் தேற்றும் வகையில் அங்கிருந்தவர்கள், 'ஜெய் ஸ்ரீராம்' என முழக்கங்களை எழுப்பினர்.

### தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்:

மதுரையில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சரவணனை ஆதரித்து, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் கூறியதாவது, "சித்திரை திருவிழா நேரத்தில் மக்களை சந்திப்பதில் மகிழ்ச்சியாக உள்ளது. மதுரையில் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மதுரையை சுற்றியுள்ள நகரங்களுக்கு மின்சார ரயில்கள் அமைக்கப்படும்.

தேர்தலை அலட்சியம் செய்யாமல் மக்கள் வாக்களிக்க வேண்டும். வேட்பாளர் சரவணன் செய்த சேவையை மக்கள் மறந்துவிடக்கூடாது. களத்தில் வந்து மக்களுக்காக சேவை செய்வது இந்த அதிமுக கூட்டணி" இவ்வாறு பேசினார்.

# மக்கள் எதிர்பார்த்த அமைப்பு முறைமை மாற்றத்தை நாம் ஏற்படுத்தியுள்ளோம்

**– அமைச்சர் மனுஷ நாணயக்கார**

மக்கள் வீதிக்கு இறங்கி மாற்றத்தை ஏற்படுத்தும்படி கூச்சலிட்டனர். ஓர் அமைச்சாக கொள்கை முறைமையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு கடந்த இரண்டு வருடங்களில் தேவையான கொள்கை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கான விசேட நிகழ்வில் நேற்று (17) கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தொழிற் துறையில் பல சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது. கடந்த வருட இறுதியில் அந்த மாற்றங்களுக்கு அடித்தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நினைவு கூர்ந்தார்.



இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

சுமார் இரண்டு வருடங்களாக மக்கள் தெருக்களில் இறங்கி கூச்சலிட்டனர். இந்த முறைமையை மாற்றக் கோரினர். ஆனால் ஒட்டுமொத்த மக்களும் இந்த முறைமையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என நினைத்தனர். ஆனால் மக்கள் அங்கு மனமாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. அதனால் தான் எங்களுக்கு தேசிய கொள்கைகள் தேவைப்பட்டன. யார் மாறினாலும் மாறாத திட்டத்தைத் தயாரிக்க விரும்பினோம். கடந்த இரண்டு வருடங்களில் எமது அமைச்சு அந்த வேலைத்திட்டத்தை சரியாகச் செய்துள்ளது.

நாங்கள் குடியகல்வு கொள்கையை உருவாக்கினோம். மேலும், தொழிலாளர் கொள்கை குறித்து மீண்டும் விவாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதற்கு தொடர்புடைய கொள்கையையும் அறிமுகப்படுத்தி தொழிலாளர் சட்டத்தையும் மாற்றினோம். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மாற்றி கொள்கை மாற்றத்தை உருவாக்கவும் முடிந்தது.

அவ்வாறே எங்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தையும் தொழிலாளர் துறையையும் டிஜிட்டல் மயமாக்க முடிந்ததுள்ளது. வெள்ளையர்களின் காலத்தில் நினைத்துக்கூட பார்க்காத ஒவ்வொரு தொழிலாளிக்கும் கௌரவத்தை வழங்கும் கருசரு திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

எம்மால் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய மிக அடிப்படையான கொள்கை மாற்றத்தை உருவாக்க முடிந்தது. இதற்கு அமைச்சில் உள்ள அனைவரும் உறுதியாக இருந்தனர். இதுதான் உண்மையான போராட்டம். அதாவது அனைத்து அரசு ஊழியர்களும் ஒன்றிணைந்து கடுமையாக உழைத்து கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

உழைத்து நாட்டைக் கட்டியெழுப்புவது உண்மையான போராட்டம். பல வருடங்களாக செய்ய முடியாத காரியங்களை இந்த இரண்டு வருடங்களில் செய்து முடித்துள்ளோம்" என தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில்;

# இஷாக் ரஹ்மான் எம்.பியினால் பாடசாலைகளுக்கு நிதியுதவி



**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் நிதியொதுக்கீட்டில் மாவட்டத்தில் 200 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பாடசாலைக்கும் 01 மில்லியன் முதல் 10 மில்லியன் வரையிலான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

அதன் மூன்றாவது கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு நிதியொதுக்கீட்டு அனுமதிக்கடிதங்கள் கடந்த (12) பாராளுமன்ற உறுப்பினரின் கலாவெவ காரியாலயத்தில் வைத்து பாடசாலை நிறுவாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் நிர்வாகிகள் அவற்றை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்கள் முன்னணி ஸ்தாபகரின் ஜனன தினம்





மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 67 வது ஜனனதின நிகழ்வு நேற்று (17) புதன்கிழமை நுவரெலியாவில் அமைந்துள்ள மலையக மக்கள் முன்னணி காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்ததுடன் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட பூஜை நிகழ்வும் நடைபெற்றது.

(நுவரெலியா தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



## தொற்றா நோய்களிலிருந்து மக்களை பாதுகாக்க மட்டக்களப்பில் உடற்பயிற்சி நிலையம் திறப்பு

**புதிய காத்தான்குடி தினகரன், பெரிய போரதீவு தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 இலட்சம் ரூபா செலவில் புதிய உடற்பயிற்சி நிலையம் பொதுமக்களின் பாவனைக்கு நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கோட்டை பூங்கா வளாகத்தில் திறந்தவெளி உடற்பயிற்சி நிலையத் திறப்பு விழா மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்றதுடன், இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என்.சிவலிங்கம் கலந்துகொண்டு உடற்பயிற்சி நிலையத்தை திறந்து வைத்துள்ளார்.



இந்த உடற்பயிற்சி நிலையத்தை அமைக்க உலக வங்கி நிதி உதவி வழங்கியுள்ளது.

மக்களை தொற்றா நோய்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் 'உடற்பயிற்சியில் ஈடுபடுவோம், வாழ்க்கையில் ஆரோக்கியத்தை பேணுவோம்' எனும் விசேட செயற்றிட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவை பிரிவினர் முன்னெடுக்கவுள்ளனர். அந்த வகையில் மக்கள் அதிகளவில் கூடுகின்ற இடங்களில் தினமும் 30 நிமிட உடற்பயிற்சியில் அவர்களை ஈடுபடுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினூடாக இந்த விசேட செயற்றிட்டம் பிராந்திய சுகாதார சேவை அலுவலகத்தால் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் சம்பவிக்கின்ற மரணங்களில் 85 சதவீதமானவை தொற்றா நோய்கள் காரணமாக இடம்பெறுவதால் சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவை பிரிவினர் இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கையை மக்கள் மத்தியில் கொண்டு வந்துள்ளனர்.

## காரைதீவு உணவு நிலையங்களில் PHI யினர் திடீர் சோதனை

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



அம்பாறையின் காரைதீவு பிரதேசத்திலுள்ள உணவுகளை கையாளும் விற்பனை நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விசேட சோதனை நடத்தியதுடன், உணவக உரிமையாளர்கள் மற்றும் உணவுகளை கையாளும் தொழிலாளர்களுக்கும் விழிப்புணர்வு வழங்கினர்.

இதன்போது உணவுகளை கையாளும் சுகாதார முறை தொடர்பாகவும் நீரால் பரவக்கூடிய நோய்கள் தொடர்பாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விழிப்புணர்வூட்டினர்.

பண்டிகைக்காலத்தையொட்டி காரைதீவில் அமைந்துள்ள உணவுகள் கையாளும் நிலையங்கள், மீன் விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள் உள்ளிட்டவற்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடத்தினர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா பஷீரின் வழிகாட்டலின் கீழ் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் இச்சோதனையை நடத்தினர்.

## மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய அலங்கார திருவிழா

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நாளை (19) பாற்குட பவனி நடைபெறவுள்ளதாக, ஆலய பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி கே.ஜெயசிறில் தெரிவித்தார்.

இரண்டாவது அலங்கார திருவிழா சித்திரைப் புதுவருட தினமான 14ஆம் திகதி ஆரம்பமாகியதுடன், தொடர்ந்து 09 தினங்கள் பகல் வேளை அலங்கார திருவிழா நடைபெற்று, எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (23) சித்ரா பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவத்துடன் அலங்கார திருவிழா இனிதே நிறைவடையவுள்ளது.

திருவிழாக் காலத்தில் முற்பகல் 10.00 மணிக்கு கும்ப பூஜை வழிபாடு ஆரம்பமாகி, பிற்பகல் ஒரு மணிக்கு அலங்கார திருவிழா பிரதான பூஜையுடன் அம்பாள் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது.



## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பண்டிக்கைக்கால விருந்துபசாரம்



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தமிழ், சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையையொட்டி தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் விசேட விருந்துபசார நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விருந்துபசார நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய உணவு வகைகளை மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பரிமாறி மகிழ்ந்தனர்.

## நிந்தவூர் தொழிற்பயிற்சி நிலைய பயிலுநருக்கு உதவி



**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியை தொடரும் ஒருதொகுதி பயிலுநர்களுக்கான பயிற்சிநெறிக் கட்டணத்தை நாபீர் பௌண்டேஷன் செலுத்தியுள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தடையின்றி தொழிற்பயிற்சியை தொடரும் வகையில் பயிற்சிக் கட்டணத்தை நாபீர் பௌண்டேஷனின் தவிசாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் அண்மையில் வழங்கி வைத்தார்.

இந்த உதவியின் மூலம் நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சிநெறியை தொடரும் இம்மாணவர்கள் நன்மை அடையவுள்ளனர்.

தொழிற்பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ.ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

### நீர்வழங்கல் சபையால் வழங்கப்படும்

## குடிநீரை சீரான முறையில் வழங்க பொத்துவில் மக்கள் வேண்டுகோள்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறையின் பொத்துவில், அறுகம்பை பிரதேசத்துக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் விநியோகிக்கப்பட்டு வரும் குடிநீரை கிரமமான முறையில் வழங்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாளாந்தம் குறைந்தளவில் குடிநீர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் விநியோகிக்கப்படுவதால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது அறுகம்பை பிரதேசத்துக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டிய பொதுமக்கள், குடிநீர் பற்றாக்குறை காரணமாக எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படக்கூடுமெனத் தெரிவிக்கின்றனர்.



இந்த விடயம் தொடர்பாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம். முஸாஜித்திடம் கேட்ட போது, பொத்துவில் பிரதேசத்துக்கு குடிநீர் விநியோகிப்பதற்காக யூ.எஸ்.எயிட் நிறுவனத்தால் 2008ஆம் ஆண்டில் நீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, நீர் விநியோகிக்கப்படுகின்றது. ஆயினும் தற்போது நீர் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிநீர் விநியோகிப்படுவதாகத் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்துக்கான குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு இது தொடர்பான அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## கல்முனை அல்–பஹ்றியா மகா வித்தியாலய அபிவிருத்தி

### பாடசாலையில் கலந்துரையாடல்

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**



கல்முனை அல்பஹ்றியா மகா வித்தியாலயத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் பஹ்றியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி சம்பந்தமாகவும் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் அப்பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைஷல் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

பாடசாலை சமூகத்தை விளையாட்டின் மூலம் இணைத்து ஒற்றுமை, சமாதானம், விட்டுக்கொடுப்பு உள்ளிட்ட விடயங்களை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆண்டு தோறும் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபையும் இணைந்து பஹ்றியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டியை சிறப்புற நடத்துகிறது.

இதன்போது மாணவர்களின் கல்வி விருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இச்சுற்றுப் போட்டியை சிறப்புற நடத்த பூரண அனுசரணை வழங்குவதுடன், மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக தாம் கவனம் செலுத்தவுள்ளதாகவும், நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவர் தெரிவித்தார்.

## அரபுக் கல்லூரிகளின் சிரேஷ்ட விரிவுரையாளர் காலமானார்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் அரபுக் கல்லூரிகளின் சிரேஷ்ட விரிவுரையாளருமான மௌலவி ஏ.சி.முகம்மது பாகவி காலமானார்.

திருகோணமலை, கிண்ணியாவில் கடந்த திங்கட்கிழமை (15) இவர் காலமானார். அன்னாரது ஜனாஸா பெருந்தொகையானவர்களின் பங்குபற்றுதலுடன் கிண்ணியா ரஹ்மானியா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வேலூர், பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தில் கல்வி கற்ற இவர், வணிகத்துறை பட்டதாரியாவார். அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, கல்முனை அரபுக் கல்லூரிகள் உட்பட பல்வேறு பிரதேசங்களில் சமயப் பணியாற்றிய இவர், அரபுக் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பு நல்கினார்.

இவர் கிண்ணியாவை பிறப்பிடமாகவும் அட்டாளைச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்டவராவார்.

## பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள்



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய சுற்றுலா இடமான பாசிக்குடா கடற்கரையை நோக்கி தற்போது உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தந்த வண்ணமுள்ளனர்.

பாசிக்குடா கடற்கரைக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை விட, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையே அதிகளவில் உள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

பண்டிகைக் கால விடுமுறையையிட்டு பாசிக்குடாவுக்கு வரும் பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் கடலில் நீராடி மகிழ்வதுடன், இயற்கை அழகையும் கண்டு களிக்கின்றனர்.

தென்பகுதியிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது.

## காரைதீவில் இராமகிருஷ்ணர் திருக்கோவில் ஸம்ப்ரோக்ஷண விழா

**காரைதீவு குறூப் நிருபர்**

ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனின் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் புனரமைக்கப்பட்ட பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் திருக்கோவில் ஸம்ப்ரோக்ஷண விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெறவுள்ளது.

இராமகிருஷ்ணமிஷன் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ மகராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தாஜீ மகராஜ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அன்றையதினத்தில் வேதமந்திரம் ஓதுதல், மங்களாராத்தி, திருப்பள்ளியெழுச்சி, கோயில் வலம், கொடியேற்றம், பூஜை, பஜனை, ஹோமம் செய்தல், சிறப்பு ஆராத்தி, சொற்பொழிவு ஆகியன நடைபெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## அட்டாளைச்சேனையில் 'யுக்தி' சஞ்சிகை வழங்கும் நிகழ்வு

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தொடராக வெளியிட்டு வரும் 'யுக்தி' இலக்கிய சஞ்சிகையை வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றது. கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ். ஜௌபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் கலந்துகொண்டு 'யுக்தி' இலக்கிய சஞ்சிகையை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், முக்கியஸ்தர்களாகிய பலர் கலந்து கொண்டு 'யுக்தி' இலக்கிய சஞ்சிகையை பெற்றுக்கொண்டனர்.

# ஓர் பிரபஞ்ச நேசியின் கதை



**தேவருட்செல்வம் அவர்கள் சூழலியல் காவலராகவும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு சவால்களுக்கு தன் சுய முயற்சியினால் புதிய அணுகுமுறைகளை கண்டுபிடித்து மிக நேர்த்தியான செயல்பாடுகளை செய்வதன் மூலம் மிகச்சிறந்த விவசாயியாகவும் கால்நடை வளர்ப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார். அவரது செயற்பாட்டை கௌரவித்து 'பிரபஞ்ச நேசி' என்ற ஓர் விருதை காவேரி கலாமன்றம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வழங்கி கௌரவித்தது. அந்த கௌரவிப்பை தொடர்ந்து அவரது பெயரில் ஓர் விருதும் அறிவிக்கப்பட்டது. இனி வரும் தோறும் தேவருட் செல்வம் சிறந்த சூழலியலாளர் விருது வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. எனவே யார் இந்த தேவருட்செல்வம் என்பதை அறிந்து கொள்வதற்காக இந்த நேர்காணல் இங்கே பதிவு செய்யப்படுகிறது.**

(இலங்கையின் மிகச் சிறந்த சூழலியல் காவலர் அருள்செல்வம் தனது வாழ்வின் அனுபவங்களை இங்கு பகிர்கின்றார்...)

வண பிதா தேவராஜா தேவ அருட்செல்வன், வடமராட்சியைச் சேர்ந்தவர். அவர் மார்க்சிய ஈடுபாடு கொண்டவர். பீட்டர் கெனமன், கொல்வின் ஆர் டி சில்வா ஆகியோர்களுடைய காலத்தில் அவர்களுடைய சிந்தனைகளால் கவரப்பட்ட ஒருவர். இறை பணியில் மிக நீண்ட கால அனுபவம் உடையவர். அதே போன்று மனிதாபிமான சமூகப் பணிகளிலும் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சர்வ சமய விவகாரங்களிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருபவர். அவர் பற்றி இன்பராசா எழுதிய 'பிரபஞ்ச நேசம்' எனும் நூல்வெளியீட்டு விழாவும் அவருக்கான பாராட்டு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**நீங்கள் ஆரம்ப காலத்தில் கம்யூனிச சிந்தனையில் அதிகம் தாக்கம் கொண்டவர் என்று கூறுகின்றனர். அது பற்றிக் கூறுவீர்களா?**

உண்மையிலேயே மார்க்சிய ஈடுபாடு கொண்டவன். பீட்டர் கெனமன், கொல்வின் ஆர் டி சில்வா ஆகியோர்களுடைய காலத்தில் அவர்களுடைய சிந்தனைகளால் கவரப்பட்டேன். அப்பொழுது யாழ்ப்பாணத்திலும் சீன கம்யூனிஸ் என இருந்தது. அந்த அமைப்புகள் சரியான முறையில் வளரவுமில்லை. மக்களை வழிநடத்தவுமில்லை. எங்களுடைய இளமைக் காலத்தில் இன விடுதலைப் போராட்டங்கள் தொடங்கி விட்டது.



அந்நாட்களில் எங்களுடன் படித்தவர்கள் பலர் இனப் போராட்டத்தில் இணைந்து கொண்டு தங்களுடைய உயிரை அர்ப்பணித்து விட்டார்கள். மார்க்சிய ரீதியிலான போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. ஆனால் எமக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏதோ இறைவனின் திட்டப்படி என்னை இறை பணிக்காக தெரிவு செய்து கொண்டார்.

**நீங்கள் ஆரம்ப காலத்தில் எத்தகைய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டீர்கள்?**

1983 களில் தெஹிவளையில் வரி கம்பனி ஒன்றில் வேலை செய்தேன். அப்பொழுது 1983 ஜூலைக் கலவரம் இடம்பெற்றது. அதில் கடுமையான பாதிப்புக்கு உள்ளானேன். அப்பொழுது தப்பி வந்து பம்பலப்பிட்டியிலுள்ள அகதி முகாமில் 14 நாட்கள் வரை தங்கியிருந்தேன். அதன் பிறகு கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தேன். இந்த வடுக்கள் இன்னும் மாறாமல் மனதில் பதிந்து இருக்கிறது. அப்படி இருந்தும் எங்களது மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையும் ஏக்கமும் மனதில் இருந்து கொண்டே இருக்கிறது. அந்த வகையில் இறைவனுடைய ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அதற்காகப் படிக்க ஆரம்பித்தேன்.

**அப்படியாயின் உங்கள் கல்வி முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்?**

1987 களில் 'அமெரிக்கன் சிலோன் மிசன் சபை'யில் படிக்க வாய்ப்புக்கள் கிடைத்தன. அதாவது கண்டி பிலிமத்தாலாவையிலுள்ள செமினரிக்குச் சென்றுதான் நான் படிக்க வேண்டும். யுத்த சூழ் நிலை காரணமாக போக முடியவில்லை. மொழிப் பிரச்சினையும் இருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே படிக்க ஆரம்பித்தேன். யாழ்ப்பாணத்தில் படித்தாலும் எப்படியாயினும் நாங்கள் கண்டி பிலிமத்தலாவையிலுள்ள மிசனரியில்தான் பரீட்சை எழுத வேண்டும்.

1988 க்கு பிறகு இந்திய இராணுவம் இலங்கை வந்து இறங்கியது. எங்கள் சபை இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருந்தது. தென்னிந்திய திருச்சபை என்றுதான் எங்கள் சபையை அழைத்தார்கள். அதற்குள் எல்லா சாதி அமைப்புக்களும் இருந்தன. கர்நாடகம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மொழி பேசக் கூடியவர்கள் இருந்தார்கள். அப்பொழுது எல்லோருடனும் சேர்ந்து எல்லா மொழிகளையும் கற்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இந்நிலையில் இந்தியா செல்ல வாய்ப்பு கிடைத்தது. பைபிள் கிரேக்கம், ஹிப்ரு, மொழிகளில் எழுதப்பட்டதைப் படித்தேன். அவை எனக்கு படிப்புக்கு பெரும் உற்சாகத்தை தந்தன. மொழிகள் மூலமாக இறைவனைத் தேடலாம். மொழிகளை ஆய்வுகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். அவை மாத்திரமல்ல இறையியல் என்ற பாடம் இருக்கிறது. இறையியல் என்றால் இறைவன் பற்றிய செயற்பாடுகளாகும். பைபிளில் படிப்பதைப் போன்று இஸ்லாம், பௌத்தம். சமணம், பல சமயங்களையும் மொழிகளையும் படித்தோம். இவை எல்லாம் பெரியதொரு நன்மையாகும். சமூகத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்கும். சமூகத்தைப் பற்றியும் சிந்திக்கவும் அவை இன்றும் உதவியாக இருக்கின்றது.

**நீங்கள் சர்வ சமயங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சக வாழ்வையும் மேம்படுத்துவதற்காக அயராது பாடுபட்டு வருகின்றீர்கள் .அவை பற்றிக் கூறுவீர்களா?**

நான் இப்பொழுது பண்டைதரிப்பு என்ற இடத்தில் இறைபணியாற்றி வருகின்றேன். எங்ளுக்கிடையே சர்வ மத அமைப்பு இருக்கின்றது. நாங்கள் பல்லின சமயத்தவர்கள் சேர்ந்து சந்தித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். அதில் மௌலவிமார்கள், இந்து சமய குருக்கள் பௌத்த சமய மதகுருமார்கள் எனப் பலதரப்பட்ட சமயப் பெரியார்கள் அங்கம் வகிக்கின்றார்கள். மக்களை சரியான முறையில் வழிநடத்துவதற்கு சர்வ சமய சங்கங்களில் சேர்ந்து இருப்பது தான் வசதியாக இருக்கின்றன.

அவை மட்டுமல்ல 2003 ஆம் ஆண்டு தமிழ், முஸ்லிம் கலவரம் ஏற்பட்டது. அந்நாட்களில் தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அப்பொழுது 15 பேரை நாங்கள் பாதுகாத்தோம். நானும் திருச்சபையின் குருவும் சேர்ந்து பாதுகாத்தோம். வாழைச்சேனையில் கடைகள் எரியூட்டப்பட்டன. அப்பொழுது புலிகளுடைய காலம். மக்கள் நெருக்கடி நிலைக்கு உள்ளானார்கள். அப்பொழுது சமாதானத்தை கொண்டு வருவது மிகவும் சிரமாக இருந்தது. அப்பிரதேசத்தில் நல்லிணக்க சபையில் இணைந்து அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்காக செயற்பட்டுள்ளேன். இஸ்லாமிய நண்பர்கள் எமக்கு கன பேர் இருந்தார்கள். கத்தோலிக்க குருமார்கள் இந்து குருமார்கள் இஸ்லாமிய மௌலவிமார்கள் சேர்ந்து இரு தரப்பினர்களுடன் கதைத்து சமாதானத்தைக் கொண்டு வந்தோம்.

**நீங்கள் சமூகப் பணிகளில் அதிகளவு ஈடுபட்டுள்ளீர்கள். அவை பற்றிக் கூற முடியுமா?**

நான் மிசனரியில் படித்த காலத்தில் பல ஆயர்களுடன் சேர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபட்டேன். அதில் ஆயர் அம்பலவானர் இருந்தார். அவர் 1983களில் இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு மீள் குடியேற்றத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தார். அவர் அதற்குரிய நிதிகளைக் கண்டுபிடித்து சுமார் 1000 வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்தார். அந்த வீட்டுத் திட்டங்கள் எமது மக்களுக்கு கிடைத்த பெரிய வாழ்வாதாரம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பணிகளில் நானும் இருந்து பங்காற்றியுள்ளேன்.



இலங்கையில் இன விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் 1990, 1991 களில் வவுனியா மாவட்டத்தில் தான் அதிகளவு வேலை செய்தேன். வன்னியில் எட்டு வருடம் வேலை செய்துள்ளேன். இராணுவ நடவடிக்கையால் வன்னியில் மக்கள் மிகவும் நெருக்கடியான சூழலில் வாழ்ந்தார்கள். ஒருபுறம் இடம்பெயர்வு, யுத்த கெடுபிடிகள் மலிந்த கால கட்டத்தில் மக்களை வழிநடத்த வேண்டும் என்ற உணர்வு இருந்தது. இப்படியான சூழ்நிலையில் பல திட்டங்களை ஆரம்பித்தோம். இதற்காக கனடா நாட்டின் பயிற்சிகளையும் பெற்றேன்.

ஸ்ரீலங்கா கனடா அபிவிருத்தி நிதியம் என்ற அமைப்பு நிதி உதவிகளை வழங்கியது. அது ஒரு கோடிக்கு மேல் செலவு செய்தார்கள். நாங்கள் அந்தப் பயிற்சியைப் பெற்று 130 க்கு மேற்பட்ட கிராமங்களில் வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். ஆடு, மாடு, வளர்ப்பு, வீட்டுத் திட்டங்கள், நீர்க் குழாய் கிணறுகள் பெற்றுக் கொடுத்தல், போன்ற பணிகளைச் செய்தோம்.



ஏழு நிறுவனங்கள் வந்து இயங்கின. கேடிஆர்ஆர்ஓ, கிடிஆர்ஆர்ஓ, என்ற பெயரிலும் இப்படி பல அமைப்புக்கள் சிறந்த முறையில் மக்களின் அடிப்படை வாழ்வாதார மேம்பாட்டுக்காக இயங்கியன. அமெரிக்காவிலுள்ள சர்வதேச கெயர் நிறுவனம் கோடிக் கணக்கான பொருட்களைக் கொண்டு வந்து மக்களுக்கு வழங்கினார்கள். அவர்களுடைய நிதி உதவிகள் திருச்சபைகளுக்கும் கிடைத்தன. அது பெரியதொரு நன்மையாக இருந்தது. அதிலே என்னை முழுமையாக அர்ப்பணித்து என்னுடைய பணிகளைச் செய்தேன். அப்பொழுது பயணங்கள் எல்லாம் மிகவும் கடினமானதாக இருந்தது. ஆனையிறவு பாதையால் பயணம் செய்ய முடியாது. சில பாதைகளில் பயணம் செய்ய முடியாது. சிலவேளை கடல் பயணம் செய்ய வேண்டும். கடல் கொந்தளிப்பாக இருக்கும். அவைகளுக்குள்ளேயும் நாங்கள் பயணம் செய்வோம்.

திருச்சபைதான் மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்குச் செயற்பட்டன. அவை மட்டுமல்ல மக்களை வழி நடத்துவதற்கு நல்ல தலைவர்கள் உருவாவதற்கு செயற்பட்டன. இதனை குருமடங்கள் என்று சொல்வர். சமூகப் பணிகளை மேற்கொண்டதோடு யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கற்பித்தலையும் மேற்கொண்டேன். தொண்டு நிறுவனத்தின் வேலைத் திட்டத்திற்கு இணங்க அங்கு கற்பித்தேன்.

மட்டக்களப்பிலும் வணபிதா சுவாமிநாதனுடன் இணைந்து நிறைய வேலைகள் செய்துள்ளேன். பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் தொடர்ந்து கற்பிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு இருந்தது. ஆனாலும் சபையில் இருந்து சேவையாற்ற வேண்டும் என்ற காரணத்தினால் அங்கு ஒரு வருடம் படிப்பித்தேன்.

2005 இல் இந்தியாவுக்கு படிப்புக்காகச் சென்றேன். அங்கு எட்டு வருடம் படித்தேன். அங்கு படிக்கிற காலத்தில் இந்தியாவுடைய அரசியல் கட்டமைப்பு, பொருளாதார கட்டமைப்பு, அவர்களுடைய வாழ்வாதார நிலைமை என்ன என்பவை பற்றி கற்றுக் கொண்டேன். நான் இந்தியாவில் இருந்து வந்தவுடன் இந்தியாவின் சூழல் இயற்கை அமைப்பு ஒப்பிட்டு இலங்கையின் தண்ணீர் பாதுகாப்பை பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். அப்பொழுது விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சராக பந்துல குணவர்தன அக்கட்டுரைக்கு விருது வழங்கி கௌரவித்தார்.

**நீங்கள் இயற்கை சுற்றுச் சூழல் தொடர்பில் நிறைந்த ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த ஒருவர். அது பற்றி கூற முடியுமா?**

சுற்றுச் சூழல் சம்பந்தமாக நிறைய விடயங்களைத் தேடிப்படிப்பதிலே மிகுந்த ஆர்வம் எனக்கு இருக்கிறது. அதற்கு காரணம் இந்தியாவில் கற்றுக் கொண்ட கல்வியாகும். தமிழ் நாடு இறையியல் கல்லூரியில் கல்வி கற்றேன். அக்கல்லூரியில் கல்வி பயிலும் போதுதான் பல்வேறு அமைப்புக்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டேன். விவசாயிகளுக்கு அவர்கள் செய்கின்ற நன்மைகள், ஆய்வுகள் போன்றவற்றை தேடிக் கற்றேன். இலங்கைக்கு வந்த பிற்பாடு தண்ணீர் பாதுகாப்புக்கு நிலத்தடி தண்ணீரை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி தெளிவுபடுத்தினேன்.

இந்தியாவில் கற்றுக் கொண்டதை வைத்துத் தான் எமது பகுதியில் தண்ணீரைப் பயன்படுத்துவது தொடர்பில் திட்ட வரைபை எழுதி மக்களுக்கு தெளிவுபடுத்தி வந்தேன். சுற்றுச் சூழல் குறித்த தெளிவு இலங்கை மக்களிடத்தில் இல்லை. இந்த தெளிவை ஏற்படுத்துவதென்றால் ஒரு அமைப்பு ரீதியாகக் கொண்டு வருதல் வேண்டும். இதில் மிக முக்கியமாக குறிப்பிடுவது என்னவென்றால் சுற்றுச் சூழலைக் கற்பதற்கு ஒரு பாடசாலை அவசியம். பொலிதீன் பாவனை, பிளாஸ்டிக் பாவனையால் ஏற்படக் கூடிய டெங்கு பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கான இயக்கப்பாடு உடையவர்களையும் உருவாக்கலாம்.



அதேபோல யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்தி பற்றியும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கனவே ஆனையிறவில் நடைபெற்ற யுத்தத்தில் 150 இலட்சம் பனைகள் அழிக்கப்பட்டு விட்டன. இயக்கச்சி, பளை, எழுதுமட்டுவான் போன்ற இன்னும் எத்தனையோ இடங்களில் ஓங்கி வளர்ந்திருந்த பனைகள் இல்லாமற் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக நிலக்கண்ணிவெடிகள் அமைக்கப்பட்டிருந்த இடங்களில் பனைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடிகள் பயன்படுத்தப்பட்ட போது நிறையப் பனை மரங்கள் அழிந்து போயின. அடுத்து ஷெல் தாக்குதல்களினால் பனைகளுக்கு தலைகள் இல்லை. கருகிப் போய் உள்ளன. உடம்பு இருந்து என்ன பயன்? இது ஒரு பெரிய வேதனையான சூழல் ஆகும். இந்தப் பனை அபிவிருத்தியை மீளவும் கொண்டு வருதல் வேண்டும்.

நிறுவனங்களைக் கொண்டு வந்து இந்த திட்டங்களை மீள் புனர்நிர்மாணம் செய்து இத்திட்டத்தை வழிநடத்தலாம். அரசாங்கம் இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் ஆலோசனைகளையும் பெறல் வேண்டும். எம்மிடம் கேட்டாலும் அதற்கான ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கையின் கல்வித் திட்டமே மிக மோசமான திட்டம் ஆகும். இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் படித்திருந்தாலும் ஒரு திட்டமிட்ட பொருளாதார கட்டமைப்பை கொண்டு வர இயலாதவர்களாக இருக்கிறார்கள். மக்களுக்கு சேவையாற்றுவதற்கு சரியான நிறுவனங்கள் இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் சிறியவர்களாக இருக்கும் போது நான்கு மாதங்கள் மழை பெய்யும். ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள்தான் மழை பெய்யும். ஆனால் இன்றைக்கு நவம்பர் மாதம் மட்டும்தான் மழை பெய்கிறது. மழை இல்லாமற் போயிற்று. எங்களுடைய தண்ணீர் அளவு மிகவும் மோசமாகப் போயிற்று. முன்னர் ஒரு தோட்டத்திற்கு ஆறு மாதம் போதுமானளவு தண்ணீர் இருக்கும். இப்போது அது போதாது. மூன்று மாதத்திற்கு மட்டும் தான் தற்போது தண்ணீர் போதுமானதாக இருக்கிறது. எனவே இந்த தண்ணீருக்காக அதிக அளவு செலவும் செய்ய வேண்டியிருக்கிறது.

தென்னை மரத்தின் அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால் வரட்சி ஒரு புறம் நோய்த் தாக்கம் மறுபுறம் இருக்கிறது. குரங்குகளின் தொல்லையும் அதிகம். வாழை மரங்களும் வரட்சியின் காரணமாக அழிந்து கொண்டு போகின்றது. கால்நடை உற்பத்தி வலுவானதாக குறைந்து கொண்டு போயிற்று. மாடுகள் ரொம்ப விலை. கோழி வளர்ப்பு இல்லை. உற்பத்தி குறைவு. நோய்த்தாக்கம் கூடுதல் கடுமையான வெப்பம். ஏனைய இடங்களை விட யாழ்ப்பாணத்தில் வெப்பம் அதிகம். இப்படி வரவர மக்களுடைய வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. மக்கள் வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்று குறிப்பிடலாம்.

**இவ்வாறான நிலையில் ஒரு மாற்றம் ஒன்றுக்காக நீங்கள் எத்தகைய ஆலோசனைகளை முன் வைக்க விரும்புகின்றீர்கள்?**

இதற்காக ஒரு நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து அதன் ஊடாக கலந்துரையாடல்கள் செயலமர்வுகள் போன்றவை ஏற்படுத்தப்படல் வேண்டும். எமக்கு வாழ்வாதாரத்தை தரக் கூடிய பெரிய மர வகைகளை கொண்டு வருதல் வேண்டும். மா, பலா, வாழை இவை போன்ற பயிர்களை அபிவிருத்தி செய்தாலே பெரிய காரியமாக அமையும். அதேவேளை இடைவிடாமல் தோடை, முருங்கை போன்றவற்றைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பலாம். இங்கு கால் நடைகளை வளர்க்க முடியும். நல்ல இனப் பசுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக அரச விவசாயத் திணைக்களம் இம்முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் ஏற்கெனவே நல்ல அனுபவத்தோடு இருக்கின்றார்கள். அதற்கான நிதி உதவி, அதற்குத் தேவையான சகல சலுகைகளையும் அரசாங்கம் செய்தால் விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாம். பால் உற்பத்தியை அதிகரிக்கலாம். சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

சர்வ சமயங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதில் நாங்கள் தொடரேச்சியாக செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். பல நாடுகளில் இருந்து இந்த சர்வ சமய நல்லிணக்கத்தை கட்டியெடுப்பதில் சிலர் வருகை தந்து செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிக்காகோவில் இருந்து மெதடிஸ்த குருமார்கள் இருவர்கள் இங்கு வருகை தந்துள்ளார்கள். நைஜீரியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்தும் இஸ்லாமிய மதுகுருமார்கள் வருகை தந்துள்ளார்கள். பௌத்த குருமார்களும் இந்து குருமார்களும் இணைந்து எங்களுடன் செயற்படுகின்றனர். இறைவனுக்கு நீதியான காரியங்களைத் தான் செய்ய வேண்டி இருக்கிறது. மக்களுடைய வாழ்வாதாரத்தை மட்டும் கட்டியெழுப்புவது மட்டும் அல்ல சமய ரீதியிலான விடயங்களையும் கட்டியெழுப்புவதில் நாங்கள் முனைப்புடன் செயற்படுகின்றோம். இவை சரியாக இருந்தால் மனித வாழ்க்கையில் நிம்மதியும் சுபீட்சமும் சமாதானமும் சகவாழ்வும் தலைத்தோங்கும்.

**நேர்காணல் இக்பால் அலி**

# உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதன் ஊடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்

அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகளும் அவசியம் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா





உள்ளூர் உற்பத்திப்பொருட்களை அதிகரிப்பதன் ஊடாக சுயபொருளாதாரத்தை வலுப்படுத்த முடியுமெனவும் அதற்கேற்ற வகையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகளும் செயற்பாடுகளும் அமைய வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பொருளாதார வசதிகளை எவ்வாறு மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், துறைசார் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடலில் அமைச்சர் இதன்போது ஈடுபட்டார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதமான மீன்பிடி முறைகள் அனைத்தும் உடனடியாக கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் அதுதொடர்பான அறிக்கையொன்றை இரண்டு வார காலத்தில் சமர்ப்பிக்குமாறும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்புக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மாவட்டத்தில் அதிகமாக மேற்கொள்ளப்படும் வெளிச்சம் பாச்சி மீன்பிடியில் ஈடுபடுதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது பெண் முயற்சியாளர்களின் நியூ லக்ஷ்மி தையல் உற்பத்தி நிலையத்துக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் மேற்கொண்டிருந்தார்.

# வடக்கின் உதயம்

## யாழ். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் மாவட்ட செயலகத்துக்கு இடமாற்றம்

(யாழ். விசேட நிருபர்)



யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு எனும் விலாசத்தில் இயங்கி வந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் தற்போது யாழ். மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத் தொகுதியில் மூன்றாம் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

## பச்சிலைப்பள்ளி எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் வருமானம் அதிகரிப்பு

அமைச்சர் டக்ளஸுக்கு பாராட்டு




கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பும் நிலையம், சுமார் ஒரு மாதகாலத்தில் அதிகளவான வருமானத்தை ஈட்டியுள்ளதாக பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினரின் கோரிக்கைக்கமைவாக எரிபொருள் நிரப்பும் நிலையம் கடந்த மாதம் 9ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி எரிபொருள் நிரப்பும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒரு மாதத்தில் மூன்று இலட்சம் ரூபா வருமானமாக பெற்றுள்ளதாக நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

## வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வாள்களுடன் வந்த குழுவொன்று இளைஞன் மீது சரமாரியாக வாள்களை வீசி தாக்குதல் நடத்தி விட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றிருப்பதாக தெரியவருகின்றது. இதில் படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

வன்முறைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சிறைக் கைதிகள் தப்பியோட்டம்

(சாவகச்சேரி விசேட, யாழ். விசேட நிருபர்கள்)

யாழ். சிறைச்சாலையிலிருந்து சாவகச்சேரி நீதிமன்ற வழக்கு விசாரணைக்காக அழைத்துவரப்பட்ட போது கைதிகள் இருவர் தப்பியோடி பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களவு குற்றத்துக்காக சிறைத் தண்டனை பெற்றுவந்த கைதியும், விளக்கமறியல் கைதியொருவருமே இவ்வாறு தப்பியோடியிருந்தனர்.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார், 30 நிமிடங்களுக்குள் இருவரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது தப்பியோடிய குற்றத்துக்காக இருவருக்கும் தலா 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும், தலா 1500 ரூபா தண்டப்பணமும் நீதவானால் விதிக்கப்பட்டுள்ளதுடன் தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலதிகமாக மேலுமொரு மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

## 35 ஆடுகளை திருடியவர் கைது; காவலாளி படுகாயம்

(ஓமந்தை விஷேட நிருபர்)

புதுக்குடியிருப்பு மல்லிகைதீவு பகுதியில் காவலாளிகளை தாக்கிவிட்டு ஆடுகளை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரம், மல்லிகைதீவு பகுதியில் ஆட்டு மந்தையில் இருவர் காவல் கடமையிலிருந்த போது திடீரென வந்திறங்கிய குழுவினர் காவலாளிகளை தாக்கிவிட்டு 35 ஆடுகளை திருடிச் சென்றுள்ளனர்.

ஆடுகள் சுமார் 9 இலட்சத்தி முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியானவை என தெரியவருகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான இருவரில் ஒருவர் 55 வயதுடைய நபர் என தெரியவருகின்றது. இவர் தற்சமயம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் வற்றாப்பளை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 15 ஆடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஆடுகளை கடத்திச் செல்ல பயன்படுத்திய கப் ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருவதோடு விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வடக்கு பாடசாலை மாணவர்களுக்கான பார்வை ஆய்வு அட்டைகள் ஆளுநரிடம் கையளிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான பார்வை ஆய்வு அட்டைகள் (Vision charts) கௌரவ ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பார்வைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் ஒரு கட்டமாக பார்வை ஆய்வு அட்டைகளை (Vision charts) உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில், ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் பார்வை ஆய்வு அட்டைகள் நேற்று (17) கையளிக்கப்பட்டன.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவனின் வழிநடத்தலின் கீழ் முன்னெடுக்கப்படும் இச்செயற்றிட்டத்திற்கான பார்வை ஆய்வு அட்டைகளை, Vision care நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் கையளித்தனர்.

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமானது. அதற்கமைய, கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகள், வலயக் கல்வி பணிமனைகளூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான பார்வை தொடர்பில் ஆராய்வதற்கான பார்வை ஆய்வு அட்டைகளே (Vision charts) நேற்று கையளிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆளுநரின் செயலகத்தின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டு, அங்கிருந்து பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மன்னார் முசலியில்

## ஞானம் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகள் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் மன்னார் முசலி எஸ்.பி பொற்கேணி கிராமத்தில் மக்களின் குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு அமைக்கப்பட்ட மூன்று குழாய்க் கிணறுகள் நேற்றைய தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

இக்கிராமத்தில் மக்கள் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர். எனினும் சுத்தமான குடிநீர் வசதியின்றி பெரும் சிரமங்களை இவர்கள் எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் மூன்று குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன், மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் லைக்காவின் ஞானம் அறக்கட்டளை பணியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## மோட்டார் சைக்கிளில் சென்றவரை வழிமறித்து திருட்டு

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா நகரில் மோட்டார் சைக்கிளில் சென்றவரை வழிமறித்து மிரட்டி கொள்ளைக்கும்பலொன்று நகைகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளது.

குழந்தை மீது கத்தியை வைத்து தாயாரை மிரட்டி நகைகளை பறித்ததுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு செல்லும் வீதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கடவுச்சீட்டு காரியாலயத்திற்கு முன்பாக விண்ணப்படிவம் நிரப்பும் தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்ணொருவர் தமது தொழில் நிமிர்த்தம் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் தனது குழந்தையுடன் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு செல்லும் வீதியில் அவரை வழிமறித்த முகமூடியணித்த மூவர், குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்ததுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துக்கொண்டு அங்கிருந்து தப்பித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முல்லைத்தீவில் சாலை தொடக்கம் கொக்கிளாய் வரை சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் அதிகரிப்பு

அதிகளவில் சுருக்கு வலைகள் பயன்பாடு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவில் சாலை தொடக்கம் கொக்கிளாய் வரையில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதுடன் 200ற்கும் மேற்பட்ட சுருக்கு வலைகள் பயன்படுத்தப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தாவிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற அமைச்சருடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலை தொடக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பல படகுகள் மின் விளக்கை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் அதிகளவான மீன்கள் பிடிக்கின்றனர். இதனால் சாதாரண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் கடல் வளமும் அழிக்கப்படுவதாக மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் ஆகியோர் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பொலிஸார், இராணுவத்தினரின் ஒத்துழைப்பு தேவையெனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

நாயாறு புலிபாய்ந்த கல் கடற்கரை பகுதியிலிருந்து கொக்கிளாய் வரையிலான கடற்கரையோர பகுதிகளில் இராணுவத்தின் கண்காணிப்பு தேவையென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் உதவிப்பணிப்பாளரினால் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

நாயாறு தொடக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் இரவு நேரங்களில் ஒளிபாச்சி மீன்பிடிக்கும் நடவடிக்கை அதிகரித்துள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

## 'ஸ்மார்ட் எதிர்காலம்' மன்னாரில் நடமாடும் சேவை

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் ஸ்மார்ட் (SMART) எதிர்காலம் என்னும் தொனிப்பொருளில் நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திககிகளில் நடைபெறவுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நடமாடும் சேவை மூலம் தொழில் வாய்ப்பு உட்பட பல்வேறு உதவித்திட்டங்களை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நடமாடும் சேவையில் 36 வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்கள் கலந்து கொள்வதுடன் பின்தங்கிய மாணவர்கள் மற்றும் உள்நாட்டு தொழில் முறைமையிலான வேலை வாய்ப்புகளும் நடமாடும் சேவையூடாக வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பொது மயான நிலத்தை ஆக்கிரமிக்க வேண்டாம் ஹரிங்டன் தோட்ட மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ஹரிங்டன் தோட்ட மக்கள் தமது பொது மயானத்தை ஆக்கிரமிக்க வேண்டாம் என தெரிவித்து மயானத்துக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கொட்டகலை நகரிலிருந்து சுமார் 1/2 கிலோமீற்றர் தூரத்தில் ஹரிங்டன் என அழைக்கப்படும் 50 ஏக்கர் தேயிலை தோட்டம் காணப்படுகின்றது.

இத்தோட்டத்தில் தற்போது சுமார் 150 குடும்பங்கள் வாழ்கின்றனர்.

ஹரிங்டன் தோட்டம் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து தனியார் ஒருவரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இத்தோட்டத்தில் வசிக்கும் தோட்ட தொழிலாளர்கள் தனியார் உரிமையாளரின் முகாமைத்துவத்தின் கீழ் தமது தொழிலை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

அதேசமயத்தில் தற்போது ஹரிங்டன் தோட்டத்தின் தேயிலை நிலங்களை பராமரித்து வந்த தனியார் நிர்வாகத்தினர், அத்தோட்ட நிலங்களை கட்டம் கட்டமாக பிரித்து வெளியாருக்கு விற்பனை செய்து வருவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு எந்தவோர் பாதிப்பும் இதுவரை ஏற்படவில்லை. இத்தோட்டத்தில் பொது மயானத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த இலக்கம் 01 தேயிலை மலையின் 03 ஏக்கர் நிலப்பரப்பை தற்போது வெளியாருக்கு வழங்க முயற்சித்துவருவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்நிலையில் தோட்ட மக்கள் பரம்பரை பரம்பரையாக பராமரித்து வந்த பொது மயானத்தின் அடையாளம் அழிக்கப்பட்டு வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகையால் பொது மயானத்துக்குரிய மூன்று ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிக்க வேண்டாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேசந்தர்ப்பத்தில் பொது மயான ஆக்கிரமிப்பு தொடர்பில் தோட்ட மக்கள் திம்புள்ளபத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளனர்.

(ஆ.ரமேஷ்)




# சூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மனைவி பலி

கந்தேநுவர, ஹுனுகல பிரதேசத்தில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

குடும்ப தகராறு காரணமாகவே கணவர் மனைவியை கொலை செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹுனுகல, அல்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கந்தேநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





பதுளையைச் சேர்ந்த சமூக சேவையாளர் சிவம் லோகநாதன் கோபி, பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் தரம் நான்கு மாணவர்களுக்கான கற்றல் வழிகாட்டல் புத்தகங்களை வழங்கியுள்ளார். அதிபர் திருமதி எஸ். மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(படம்:லுணுகலை நிருபர்)

# வழுக்கு மரம் சரிந்து விழுந்ததில் நால்வர் படுகாயம்

(அக்குறணை குறூப் நிருபர்)


கம்பளை பிரதேசத்தில் புத்தாண்டு விளையாட்டுப் போட்டியொன்றின் போது வழுக்கு மரம் (கிறீஸ் மரம்) சரிந்து விழுந்ததில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

கம்பளை, கம்பளவெல, ராஜஎலகம பகுதியில் இச்சம்பவம் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில் வழுக்கு மரம் ஏறுதல் பாரம்பரிய விளையாட்டாக கருதப்படுகின்றது. வழுக்கு மரம் ஏறல் என்பது ஒருவர் உயரமான வழுவழுப்பான மரத்தில் ஏறி, அதன் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் பரிசு முடிப்பை எடுக்கும் விளையாட்டு.

நன்கு வளர்ந்த சுமார் 40 முதல் 60 அடிவரையான பாக்கு மரத்தின் மேல் பட்டையை உரித்து, அதில் கடுகு, ஆரியம், உளுந்து மாவு போன்ற பொருட்களைக் கலந்து மரத்தின் உச்சி வரை தடவுவர். தொடர்ச்சியாக வழுவழுப்பாக வைத்திருப்பர்.

இவ்வாறு மரம் ஏறும் போட்டியில் பங்குபற்றும் போது அது சரிந்து விழுந்தமையால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.



இச்சந்தர்ப்பத்தில் வழுக்கு மரத்தில் ஏற முயன்ற நால்வர் விபத்தில் காயமடைந்துள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

# பேக்கரிகளில் அதிகரிக்கும் மின்சார பயன்பாடு விறகு விநியோகிப்போருக்கு பாதிப்பு

மாத்தளை மாவட்டத்தில் விறகு பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பேக்கரி உற்பத்திப்பொருட்களுக்கு தற்போது மின்சாரம், கேஸ் பயன்படுத்தப்படுவதால் விறகு விநியோகிப்பவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலவருடகாலமாக பேக்கரி உற்பத்திகளுக்கு பாரம்பரிய முறையில் விறகு பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் அண்மைக்காலமாக விறகுக்கு பதிலாக மின்சாரம், கேஸ் பயன்படுத்தப்படுவதால் விறகு விநியோகிப்பவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர். இதனால் விறகு வெட்டுபவர்கள், போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள், விநியோகிப்பவர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாத்தளை மாவட்டத்தின் பல பேக்கரி உரிமையாளர்கள் மின்சாரம் மூலம் செயற்படுத்தப்படும் இயந்திரங்களுக்கு மாறியுள்ளமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் பேக்கரி உரிமையாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நுகர்வோரின் தேவைக்கேற்ப பேக்கரி உற்பத்திப் பொருட்களை தங்குதடையின்றி வழங்குவதற்கு மின்சாரம், கேஸ் பயன்படுத்துவது இலகுவாக இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி மின்சாரம், கேஸ் பயன்படுத்துவதால் பெரியளவில் இடவசதி தேவையில்லை, நேரமும் சேமிக்கப்படுவதால் இலாபகரமாக இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

# காவத்தையில் சைக்கிள் ஓட்டப்போட்டி 20 இலட்சம் ரூபா பரிசுகள்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

காவத்தை ரண்தரு விளையாட்டுக் கழகம் நடாத்தும் 2024 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டு விளையாட்டுப் போட்டியின் விசேட அங்கமாக 200 கிலோமீற்றர் தூர சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய பரிசு தொகையாக 20 இலட்சம் ரூபா வெற்றியாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை பிரதேசத்தில் கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 405 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவருகின்றது.

யுக்திய தேடுதல் நடவடிக்கையின் போது இறக்குவான எம்பிலிபிடிய பிரதான வீதியில் வைத்து இ.போ. சபைக்கு சொந்தமான பஸ்ஸை நிறுத்தி அதிலிருந்தவர்களை சோதனைக்குட்படுத்திய போதே சந்தேகநபர் கஞ்சா போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிபிடிய பிரதேசத்திலிருந்து அங்கொடை பிரதேசத்துக்கு கஞ்சா போதைப்பொருள் கொண்டுசெல்வதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# கல்முனை 'மஹ்மூத் அதிபர் பெயர் பலகை' திரைநீக்கம்



மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் அதிபர்களாக கடமையாற்றியவர்களின் பெயர்கள் மற்றும் காலங்களை உள்ளடக்கிய 'மஹ்மூத் அதிபர் பெயர் பலகை' உத்தியோகபூர்வமாக நேற்று புதன்கிழமை அக்கல்லூரியின் நிர்வாக கட்டடத் தொகுதியில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது பெயர் பலகையை மேற்படி கல்லூரியின் பழைய மாணவியும் தற்போதைய 17ஆவது அதிபருமான ஏ.பி.நஸ்மியா சனூஸ் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முதலாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக ஏ.பி.நஸ்மியா உள்ளார்.

இக்கல்லூரி வரலாற்றில் (1971 2024) இன்றுவரை 17 அதிபர்கள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்களாகிய பலரும் கலந்து கொண்டனர்

# சாய்ந்தமருது உணவு விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை

சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள உணவு தயாரிக்கும் இடங்கள் மற்றும் உணவு விற்பனை நிலையங்களில் சுகாதாரக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள், பாவனைக்கு பொருத்தமற்ற எண்ணெய் மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் தன்மை கொண்டதாக கூறப்படும் சுவையூட்டி, கலப்படம் செய்யப்பட்ட சுவையூட்டி ஆகியவற்றை கைப்பற்றப்பட்டன.

அத்துடன் சில உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கையை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

சாய்ந்தமருதிலுள்ள உணவகங்களில் சுகாதாரமற்ற உணவுகள் விற்கப்படுவதாக கிடைத்த தகவல்களை அடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் எனும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சுகாதாரக் குழுவினர் சாய்ந்தமருதிலுள்ள உணவு கையாளும் இடங்களில் கடந்த சில தினங்களாக திடீர் சோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.கே.எம்.அர்ஷத் காரியப்பர் தலைமையிலான சுகாதாரக் குழுவினரே இச்சோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

இரவுநேர உணவகங்கள், டேஸ்ட் கடைகள், கோழி பதப்படுத்தி விற்கும் இடங்கள் போன்றவற்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16) இரவு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, முறையான களஞ்சிய வசதி இல்லாத மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது சுகாதாரக் குழுவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் கைப்பற்றப்பட்டன.

உணவக உரிமையாளர்களுக்கும் உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும் உணவங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும், உணவுக் கையாளுகையில் முறையான ஒழுங்கை பேணுமாறும், நீண்ட நாட்களுக்கு உணவுகளை தேக்கி வைக்காதிருக்குமாறும், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரத்தை பேணுமாறும் சுகாதாரக் குழுவினர் ஆலோசனை வழங்கினர்.

# அக்கரைப்பற்று தயிர் கடைகள் சோதனை

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள தயிர் கடைகளில் காலாவதி திகதி இடப்படாத தயிர் மற்றும் பழுதடைந்த தயிர் சுகாதாரக் குழுவினரால் கைப்பற்றப்பட்டதுடன், அக்கடை வியாபாரிகளுக்கு சுகாதாரக் குழுவினர் எச்சரித்துள்ளனர். இவ்வாறான தயிர் கடைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், சுகாதாரக் குழுவினர் எச்சரித்துள்ளனர்.


அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் அமைந்துள்ள தயிர்க் கடைகளில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ. காதர் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் சோதனை நடத்தினர். இதன்போதே பாவனைக்கு உதவாத தயிரை சுகாதாரக் குழுவினர் கைப்பற்றினர்.

# கல்கிஸ்ஸையில் 52 வயது நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவில் 52 வயதுடைய நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானையைச் சேர்ந்த ஒருவரே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் தனது வீட்டின் படுக்கை அறையில் உறங்கிக்கொண்டிருந்த போதே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், அடையாளம் தெரியாத இருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இந்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளமை தமது ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தக் கொலையை புரிந்துள்ளவர்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவித்த பொலிஸார், இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்யும் நோக்கில் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுபோக நெற்செய்கைக்கான இரணைமடு குளத்து நீர் திறப்பு

பரந்தன் குறூப் நிருபர்



கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளமாக காணப்படுகின்ற இரணைமடுக் குளத்தின் கீழ் இந்தாண்டு 15 ஆயிரத்து 690 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிறுபோகச் செய்கைக்காக நிலத்தை பண்படுத்தும் நடவடிக்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருவதுடன், 2024ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்காக இரணைமடுக் குளத்து நீர் கடந்த திங்கட்கிழமை (15) திறந்து விடப்பட்டது.

வலதுகரை வாய்க்கால், குளத்துக்கு அருகில் அமைந்துள்ள ஒற்றைகை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, இரணைமடுக் குளத்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதேவேளை இடதுகரை வாய்க்கால், கிளிநொச்சி கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற விசேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து இடதுகரை வாய்க்காலுக்கான இரணைமடுக் குளத்து நீர் திறந்து விடப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் சு.முரளீதரன், வடமாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் ந.சுதாகரன் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளர்கள், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன், விவசாயிகள், பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மனிதநேயம் மிக்கவரை இந்த நாடு இழந்துள்ளது

## அலி சாஹிர் மௌலானா எம்.பி. இரங்கல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

அரசியலுக்கு அப்பால் பாலித எனும் ஒரு மனிதநேயம் மிக்க மனிதரை இந்த நாடு இழந்துள்ளதுடன், தேசத்துக்கும் இது பாரிய இழப்பாகுமென, பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.



முன்னாள் பிரதியமைச்சர் பாலித குமார தெவரப்பெருமவின் மறைவையிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"எனது 30 வருடகால அரசியல் வரலாற்றில் பாலித தெவரப்பெரும போன்ற ஒரு பணிவானவரை நான் கண்டதில்லை. அவர் மனிதாபிமானம் மிக்கவராவார். அவர் மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து பணியாற்றும் மக்கள் சேவகராவார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் சமூக வலுவூட்டல் அமைச்சின் இராஜாங்க அமைச்சராக நானும் அதன் பிரதி அமைச்சராக அவரும் செயற்பட்டோம். அவர் இனவாதம், பிரதேசவாதம் எல்லாம் கடந்து மனிதநேயத்தை நேசிக்கும் ஒருவராக என்றும் செயற்பட்டு வந்தார்.

இவரது எதிர்பாராத திடீர் இழப்புச் செய்தியை அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். முழு நாடும் மனிதநேயம் மிக்க பண்பாளரை இழந்த செய்தியால் துயரம் அடைந்து நிற்கிறது. அவரது இழப்பால் கவலையடைந்துள்ள அவரது குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

# உலகில் காலத்திற்கு காலம் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்சினைகள்

காலநிலை மாற்றத்தினை பற்றி பார்ப்பதற்கு முன்பு காலநிலை என்பதற்கான வரைவிலக்கணத்தை தெரிந்து வைத்திருத்தல் என்பது அவசியமாகும்.காலநிலைஎன்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நீண்ட காலத்திற்கு இருக்கும் வானிலை நிலைமைகளையே காலநிலை என அழைக்கப்படுகின்றது. அப்படியென்றால் காலநிலைமாற்றம் எனப்படுவது பத்தாண்டுகள் முதல் பல மில்லியன் வருடங்கள் வரை உண்டான கால கட்டங்களில் ஏற்படுகின்ற வானிலை மாற்றம் ஆகும். தற்போது ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பிறகு தான் இது குறித்து கவனம் செலுத்துகிறார். இது வரையில் எந்த ஒரு ஜனாதிபதியும் பெரிதும் இந்த காலநிலை மாற்றம் குறித்து கவனம் செலுத்தவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக ருவன் விஜேவர்தனவினை நியமித்துள்ளார். அதன்பொருட்டு அவர் கூறியுள்ளது என்னவென்றால் வலுசக்தி துறையில் பசுமை முதலீடுகளை அணி திரட்ட இலங்கை தயார் என்று கூறியுள்ளார். ஆகவே ருவன் விஜேவர்தன தலைமையில் இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பில் போதிய அளவிலான ஓர் அறிவு இல்லை என்றும் அதன் காரணமாகவே இலங்கையிலும் கூட வெளிநாடுகளை போன்று இங்கும் மாணவர்கள் கல்வி கற்பதற்காக காலநிலை தொடர்பான ஒரு பல்கலைகழகத்தினை அமைப்பதற்கு வரலாற்றிலேயே இலங்கையில் முதல் தடவையாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாககுறிப்பிடுவோமாக இருந்தால் இலங்கையில் 2004ஆம் ஆண்டு சுனாமி எனும் இயற்கை பேரனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் மட்டக்களப்பில் கல்லடி பாலத்தில் பாம்புகள் எல்லாம் குவியலாக இருந்ததாம் அது மட்டுமின்றி கரையோரத்தில் மீன்கள் எல்லாம் கரையொதுங்கின ஆனால் மக்களுக்கு இது தொடர்பில் போதிய அளவு அறிவின்மை மற்றும் முன்கூட்டியே அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம்எந்த விதமான முன் எச்சரிக்கையும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் இப்போது காலநிலை மாற்றம் குறித்து பெரிதும் கவனம் செலுத்தப்படுகின்றமையால் இனி வரும் காலங்களில் அனர்த்தத்திற்கு முன் எச்சரிக்கை கொடுக்க கூடிய வாய்ப்பு உள்ளது. அடுத்ததாக நாம் காலநிலையால் உருவாகியுள்ள தாக்கம் பற்றி பார்ப்போமானால் தற்போதைய காலகட்டத்தில் இலங்கையில் காலநிலையினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களாக தற்போதும் கூட எப்போதும் இல்லாத அளவுக்கு வரட்சியானது நிலவி வருகிறது. அதுமட்டுமின்றி இலங்கையில் எப்போதும் குளிராக இருக்கும் மலையக மண்ணிலும் தற்போதைய காலகட்டத்தில் வரட்சி மற்றும் சூடு அதிகமாகவே காணப்படுகிறது. மொனராகலை, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய வலயங்கள் எச்சரிக்கை வலயங்களாக காட்டப்பட்டுள்ளது. இந்தவரட்சி நிலவும் காலப்பகுதிகளில் அதிகமாக நீர் அருந்துதல் அவசியம் ஆகும். 2022 வருட இறுதியில் ஒரு மாத காலமாக அதிகமான குளிர் நிலவியது. இதன் காரணமாக இலங்கையின் பல இடங்களில் கால்நடைகள் மற்றும் விலங்குகள் பாதிக்கப்பட்டு இறந்தும் போனமை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவை அனைத்துமே இலங்கையில் அண்மை காலமாக நிலவிய காலநிலை மாற்றங்களின் தாக்கங்களாக எம்மால் கருத முடியும். அடுத்ததாகநாம் இலங்கையில் ஏற்படும் காடழிப்பு பற்றி கூறுவதாயின் காடுகள் என்பது இலங்கையின் இயற்கையின் கொடை வள்ளலாக கருதப்படுகிறது. அது மேலும் எமது நாட்டுக்கு அழகு சேர்க்கின்றன. விஞ்ஞான ரீதியாக கூறுவதாக இருந்தால் இலங்கை மக்களுக்கு ஒட்சிசனை பெற்று தருகிறது. இந்த காடழிப்பு என்பது ஏற்பட பெரும் பங்கு வகிக்கிறது என்னவென்றால் சட்ட விரோத குடியேற்றங்களினால் உதாரணமாக காட்டு யானை தாக்கியதில் உயிரிழப்புகள் என்று தினமும் எங்கோ ஒரு இடத்தில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி கொண்டே தான் இருக்கின்றன. இவை அனைத்தும் மனிதன் காட்டினை அழித்து குடியிருப்புகள் அமைப்பதனால் ஆகும். காடழிப்புக்கு முதல் காரணம் கிராமத்தில் உள்ள விவசாயி தான் காரணம் என்னவென்றால் கிராமத்தில் உள்ள விவசாயி தனது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக காடுகளை அழிக்கிறான். இதன் மூலம் அந்த காடுகளில் உள்ள விலங்குகள் யானை போன்றன இருப்பிடம் இன்றி மனிதன் வாழும் இடங்களுக்கு செல்லும் இதன் மூலம் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்படும். காலநிலை மாற்றங்களுக்கு முக்கிய காரணம் காபனீரொக்சைட்டு வெளியாகுதல் ஆகும். காடுகள்தீ வைத்து அழிக்கப்படுகின்றன. இதன் மூலம் விலங்குகள் இறந்து போகின்றன. அடுத்தாகஇயற்கையின் தாக்கம் மற்றும் பேரழிவுகள் பற்றி பார்ப்போம் இலங்கையில் இயற்கை தாக்கத்தால் உதாரணமாக சீரற்ற முறையில் குப்பை கூளங்களை கொட்டுவதால் கடந்த காலத்தில் மீதொட்டமுல்ல குப்பை மலை சரிவு ஏற்பட்டதில் அதிகமானோர் இறந்து போனர். பொருட்சேதமும் ஏற்பட்டது. வெள்ளப்பெருக்கு ஏற்பட முதற் காரணம் பொலித்தீன் பாவனை ஆகும். இதன் மூலமும் வெள்ளப்பெருக்கு ஏற்பட காரணமாக அமையும். அடுத்ததாகஇலங்கையில் மலையகத்தில் அதிகமான மண்சரிவுகள் ஏற்படுகின்றன. இருந்தும்பாரிய மண்சரிவுகளில் ஒன்று



என்றுமே மறக்காத பேரழிவு 2014 ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி காலை 7.15 மணிக்கு மலையகத்தில் ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் கொஸ்லாந்தை நகரிற்கு உட்பட்ட மீரியபெத்த தோட்டத்தில் பாரிய அளவிலான மண்சரிவு ஒன்று ஏற்பட்டது. அடுத்து கடலரிப்பு பற்றி பார்ப்போம் இலங்கையில் கடலரிப்பு மூலம் அதிகமாக பாதிக்கப்படுவர்கள் யார் என்றால் இலங்கையில் கரையோரங்களில் வாழ்கின்ற மீனவர்கள்தான்.

கடலரிப்பிற்கு உதாரணமாக 2020இல் இலங்கையில் அம்பாறையில் கரையோர பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்படுவதன் காரணமாக அங்குள்ள மக்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கடலரிப்பினால் இழந்து உள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீனவர்களின் சீவனோபாயமும் பாதிக்கப்படுகிறது. இதனை தடுக்க மணல் நிரப்பப்பட்ட பைகள் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளினால் ஆகும். இலங்கையில் காலநிலைமாற்றம்நடைபெற்று கொண்டு இருக்கிறதா என்றால் அது உண்மையாகவே நடைபெற்று கொண்டு தான் இருக்கிறது. நாம் இப்போது புள்ளி விபரதரவுகளை பார்ப்போம்.1905 முதல் 2005 வரையிலான நூறு வருடங்களுக்குள் வளிமண்டல வெப்பநிலை 0.11°C முதல்0. 74°C வரை எல்லா வலயத்திலும் வெப்பநிலை அதிகரித்துள்ளது.1966 இன் பின்னர் வருடாந்த வெப்பநிலை அதிகரிக்கும் வேகமானது இரு மடங்காக அதிகரித்துள்ளது. தற்போது இலங்கையில் சமுத்திர வெப்பமும் அதிகரித்துள்ளது. மழை வீழ்ச்சி அடர்த்தி தீவிரம் உயர்வடைந்துள்ளது. நாம் இப்போது காலநிலை மாற்றங்களால் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை இரு பிரிவுகளாக பிரிக்க முடியும். அவையாவன. இயற்கையான காரணிகள் மற்றும் மானிடக் காரணிகள் ஆகும். இயற்கையான காரணிகளில் சூரிய கதிர்களின் அளவு

மாற்றமடைந்தல், புவியின் பயணப் பாதை, சூரியனின் சுற்று பாதை மாற்றம் அடைதல் என்பனவாகும். அடுத்து மானிட காரணிகளில் தொழில்நுட்ப மயமாதல் முக்கியமான ஒன்றாகும். இரசாயன பொருட்கள் சுற்றுச் சூழலுக்கு வெளியாக்கள், முறையற்ற நிலப் பயன்பாடு விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளுக்காக காடுகளை அழித்தல், சட்ட விரோதமாக காடுகளை அழித்து மனித குடியிருப்புகள் அமைத்தல், மனித செயற்பாடுகள் மூலம் வளிமண்டலத்திற்குள் இரசாயன மற்றும் தூசுத் துணிக்கைகள் என்பன சேர்தல், தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகின்றன விஷ வாயுக்கள் என்பன வளிமண்டலத்திற்குள் சேர்கின்றன. இதன்மூலம் ஓசோன் படை ஆனது பாதிப்புக்கு உட்படுகிறது. இந்த காலநிலை மாற்றத்தால் பெரிதும் பாதிப்புக்கு உட்படும் சமூகத்தினால் ஏழை மக்கள், சிறிய அளவிலான விவசாயம் செய்வோர்,சிறிய அளவில் மீன் பிடிப்போர், சிறு பிள்ளைகள் மற்றும் வன விலங்குகள் என்பனவாகும்.

காலநிலை மாற்றங்களால் துரிதமாக அழிவுக்குள்ளாகும் இயற்கை வளங்கள் நன்னீர், விவசாய நிலங்கள் மற்றும் சூழற்த்தொகுதிகள் ஆகும். புவிகோளத்தில் நீரின் சதவீதம் தரவுகளாக உவர் நீர் 96.5%, நன்னீர் 0.36%, உறை பனி 0.001%,பனிக்கட்டி 1.75%, நீராவி 0.001% என்பனவாகும். உலகநீர் நிலைமையுடன் ஒப்பிடுகையில் இலங்கை ஒரு உயர் நீர் வளம் கொண்ட நாடாகும். இலங்கை என்பது நாலா பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். எனவே இலங்கை அயனமண்டல பிரதேசத்தினுள் அமையப்பெற்ற நாடு என்பதால் ஆண்டு முழுவதும் மழை அதிகமாகவோ குறைவாகவோ கிடைக்கிறது. இங்கு காலநிலை வலயங்களில் கணக்கெடுப்பின் படி வருடாந்தம் 700மி.மி முதல் 5500மி.மிவரை மழை வீழ்ச்சி கிடைக்கிறது. அதன்படி இலங்கைக்கு வருடாந்தம் 43000இன் மீட்டர் மில்லியன் கணக்கான அளவில் மழைவீழ்ச்சி கிடைக்கிறது. குடிநீர் மற்றும் வீட்டு பாவனைக்கு 3000 கன மீட்டர் மில்லியன் கணக்கான அளவு நீரே பயன்படுத்தப்படுகின்றது.

காலநிலை மாற்றங்களுக்கு பின்பற்ற வேண்டிய வழிமுறை ஒன்று இருக்கிறது. மனித செயற்பாடுகளினால் வளிமண்டல வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பினை குறைவடைய செய்தல். மனித செயற்பாடுகள் மூலம் வளிமண்டல வெப்பமடைதலை தடுப்பதற்கு தற்பொழுது நடைமுறையில் இருக்கும் வாகன போக்குவரத்து வாகனங்களில் இருந்து வெளியாகும் நச்சு புகைகள் போன்ற வளிமண்டலத்திற்கு வெளியிடப்படும் பாதகமான வாயுக்கள் ஆகிய வற்றை மட்டுப்படுத்த இவ்வாறான வாகன பாவனைகளை குறைத்தல். வளிமண்டலத்திற்கு செல்லும் நச்சு வாயுக்களின் சதவீதத்திலான தரவுகள் தொழில் மயமாக்களினால் 16.8%,போக்குரத்தினால் 14%,பெரியளவிலான விவசாய நடவடிக்கைகளால் 12.5%,சுரங்கத் தொழில் நடவடிக்கைகளால் 11.3%,படிம எரிபொருள் தகனத்தினால் 10%,மின்வலு தொழிற்சாலை நடவடிக்கைகளால் 21.3%,மற்றும் ஏனைய நடவடிக்கைகளால் 13.7% உம் வளிமண்டலத்திற்கு பாதகமான வாயுக்கள் வெளியிடப்படுகின்றன.



எழுத்தாக்கம்:
வி. சிவகஜன்

# "பழனத்தில் விளைந்த பவளங்கள்" சிறுகதை தொகுதிக்கான அறிமுகக் குறிப்பு



நூலாசிரியர் ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான் வெளியீடு எகுத்தார் இலக்கிய மன்றம் கிண்ணியா 06

சிறுகதை என்பது மனித வாழ்க்கையோடு மிக நெருங்கி இருக்கும் இலக்கியமாகும். ஒரு சமுதாயத்தின் விறுப்பு, வெறுப்பு, நம்பிக்கை போன்றவற்றை பண்படுத்துவன படைப்பிலக்கியங்களே. எனவேதான் படைப்பிலக்கியங்கள் மனித வாழ்வுக்கு துணை நிற்பதைக் காணலாம். அவ்வாறே ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், கதாசிரியர் மறைமுகமாக கூறும் செய்தி இவை அனைத்தும் இலக்கண மரபுகளை விட மிக முக்கியமானவை ஆகும். சிறுகதை என்பது சுருக்கமாக கதை கூறும் ஒரு புனைவு வகை உரைநடை இலக்கியமாகும். இது பெரும்பாலும் ஒரு மையக் கருவினை அல்லது சம்பவத்தின் அனுபவத்தை விவரிக்கும் ஒரு இலக்கிய கலையாகும். சிறுகதையானது குறுகிய நேரத்தில் படித்து முடிக்கக் கூடியது. அது ஒரு குதிரைப் பந்தயத்தைப் போல ஆரம்பமும் முடிவும் சுவை மிக்கதாக இருக்க வேண்டும். சுருங்கச் சொல்வதும் சுருக்கிச்சொல்வதும் இதன் உத்தியாகும். சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கிய பண்புகளாகும் என ஜேம்ஸ் கூப்பர் லாரன்ஸ் என்ற அறிஞர் கூறியுள்ளார். அறிவியல் வளர்ச்சியும் பத்திரிகைகளின் பக்கபலமும் சிறுகதைகளுக்கு துணை நிற்கின்றன. இன்று முகநூலும் இந்தப் பணியைச் செவ்வனே செய்கின்றன. ஒரு நல்ல சிறுகதை என்பது சுவை மிக்க ஒரு மாம்பழத்தை இறுதிவரை சுவைப்பது போன்றதாகும். அவ்வாறின்றி ஒரு மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசி எறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால் அச்சிறு கதையில் சுவை இல்லை ,பயன் ஒன்றும் இல்லை என்பதே கருத்தாகும். எனவே ஒரே மூச்சில் வாசிக்க தூண்டும் சிறுகதைகளை சிறந்த சிறுகதைகளாக கணிக்கலாம். இந்த வகையில் "பழனத்தில் விளைந்த பவளங்கள்" என்ற சிறுகதை தொகுதியினை தரும் அருமைச் சகோதரி ஜெனீரா தௌபீக் ஹைருள் அமானின் சிறுகதை தொகுதியினை இனி நோக்குவோம். இவரது பல சிறுகதைகள் சிறுகதைகளுகளுக்குரிய அணிகலன்களுடன் வெளிவந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இவரது கதைகளில் சோகம், சந்தோசம், வறுமை, அறிவுரை, படிப்பினை என பல ரசனைகளை உணரக்கூடியதாக இருக்கின்றன. வாழ்க்கையில் நாம் அன்றாடம் சந்தித்த கதாபாத்திரங்களை கதையில் புகுத்தி கதைகளை அழகாக நகர்த்துகிறார் கதாசிரியர். இனி இவரது கதைகளில் ஒரு சிலவற்றைத் தொட்டுப்பார்ப்போம் இவரது "வாழாவெட்டி' கதையில் ரூபிணி மனோஜ் விவகாரம் , தாயின் ஆதங்கம், மகளுக்கான அவளது அறிவுரை, ரூபீனியின் பிடிவாத குணத்தால் அவனது வாழ்க்கைக்கு நேர்ந்த கதி போன்ற விடயங்கள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன. முத்துக்கு நேரம் வந்தால் அது சிப்பிக்குச் சொந்தமில்லை. பிள்ளைகள் திருமணம் முடித்து விட்டால் அவர்கள் பெற்றோருக்கு சொந்தம் இல்லை என்ற கருத்துக்களை கதாசிரியர் கையாண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது . சிப்பியிலே முத்து. அது சிப்பிக்கென்ன சொந்தம் தென்னையில் இளநீர் அது தென்னைக்கென்ன சொந்தம்..!! என்ற சினிமாப்பாடலையும் என் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. 'பூ ஒன்று உதிர்ந்தது' என்ற கதையில் ஒரு பாடசாலை மாணவிக்கு ஏற்பட்ட டெங்கு காய்ச்சல் அதன் விபரீதம் சிறப்பாக தொட்டுக் காட்டப்படுகிறது இந்தக் கதாசிரியர் ஒரு பாடசாலை ஆசிரியர் என்பதை நிரூபிக்கும் வகையில் இந்த சிறுகதையில் அவரது அனுபவங்கள் பேசுகின்றன. பல் இன மாணவிகள் படிக்கும் பாடசாலையில் மாணவர்களிடையே நிலவும் இன ஒருமைப்பாடு, வேற்றுமையற்ற ஒற்றுமை என்பன நன்கு சித்தரிக்கப்படுகின்றன. இறுதியில் சம்ரூத் என்ற மாணவிக்கு நேர்ந்த விபரீதம் கண்களை குளமாக்குகின்றது. அவ்வாறே 'உழைக்கும் கரங்கள்' என்ற கதையில் வரும் ஆசியா உம்மா ஒரு மீன் வியாபாரியாக சித்தரிக்கப்படுகிறார். குடும்பப் பெண்ணாக இருந்தாலும் தானே குடும்பச் சுமையை ஏற்று, தன் பேரப் பிள்ளைகளையும் பராமரித்த விதம் கவலை அளிக்கிறது. அதே நேரம் ஆசியா உம்மாவின் துணிவும் யாரிடமும் யாசிக்காது தானே உழைத்து குடும்பச் சுமைகளை சமாளித்தமையும் பாராட்டத்தக்கது. அத்துடன் எப்படியும் வாழலாம், நம்பிக்கை துரோகம், பழனத்தில் விளைந்த பவளங்கள் போன்ற சில கதைகளையும் ஒரு பதச்சோறாக இங்கே குறிப்பிடலாம் . இந்த ஒவ்வொரு சிறுகதையும் வெவ்வேறு படிப்பினைகளை வாசகர்களுக்குத் தருகின்றன.

2009 ஆம் ஆண்டு 'பிரியமான சினேகிதி ' என்ற பெயரில் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி நூலாக வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், இலக்கியம் மற்றும் கவிதை நூல் என இதுவரை 8 நூல்களை வெளியிட்டுள்ள சகோதரி ஜெனீரா தனது ஒன்பதாவது நூலாகவே இந்தச் சிறுகதைத் தொகுதியை வெளியிடுகின்றார். இவரது இந்த சிறுகதைத் தொகுதிக்கு அறிமுகக் குறிப்பு வழங்குவதில் அக மகிழ்கிறேன்.

" பழனத்தில் விளைந்த பவளங்கள்" என்ற பெயரில் வெளியிடப்படும் இந்தச் சிறுகதைத் தொகுதியில் அவரால் எழுதப்பட்ட 14 சிறுகதைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. தற்சமயம் பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் அடிக்கடி பிரசுரமாகி வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

"பழனத்தில் விளைந்த பவளங்கள்" என்ற அழகான, வித்தியாசமான பெயரைக் கொண்டு வெளிவரும் இந்தச் சிறுகதை நூல், இலக்கிய வட்டத்திலே நல்ல அறுவடையைத் தரவேண்டும்; வாசகர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற வேண்டும் என்பதே என் வேணவா! ஏற்கனவே "இலக்கியத் தாரகை" என்ற பட்டம் பெற்ற சகோதரி ஜெனீரா ' "ககனத்தில் உதயமாகும் தாரகைகள் ' என்ற பெயரில் ஒரு கவிதை நூலையும் வெளியிட்ட சிறந்த கவிதாயினும் கூட. இவர் இலக்கியவானிலே ஒரு மின்னும் தாரகையாகவும் ஜொலிப்பவர். இலங்கையின் இலக்கியப் பிரியர்களுக்கு மற்றுமொரு சிறுகதை நூலை பரிசளிக்கும் சகோதரி ஜெனீரா, இலக்கியத்தில் இன்னும் என்னும் மின்ன வேண்டும்.




கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்
அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி

# பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் மறைவு சைவத்தமிழ் உலகிற்கு பேரழப்பாகும்

நூற்றாண்டு கடந்த வரலாற்றை கொண்டதும், ஈழத்தின் பழம் பெரும் அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டதும், பல பண்டிதர்களை இத்தமிழ் உலகிற்கு அளித்ததுமான ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தன்னை கடந்த 40 வருடங்களாக போற்றி பணியாற்றிய பெருந் தமிழ்மகன். தமிழ் மூச்சே உயிர்மூச்சு என்ற அசையாத நம்பிக்கையோடு சங்கத்தை திறம்பட வழி நடத்தி பண்டிதர் மரபை நம் மண்ணிற்கு அளித்த பெருமகனார்.

தமிழோடு சைவத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக சைவப்புலவர்களை இம் மண்ணில் பிரசவிக்க வேண்டும் என்னும் பேரவாவின் காரணமாக மரபு வழி குருமரபில் இலக்கணத்தை நாவலர் பெருமான் தோற்றுவித்த நாவலர் மகா வித்தியாலயத்தில் மூன்று தசாப்தத்துக்கு மேலாக இளஞ்சைவப்புலவர், சைவப் புலவர் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இலக்கண பாடத்தினை இலகு பாடமாக்கி கற்பித்த நல்லாசான். தொல்காப்பியத்தை விருப்புடனும் அனைவர் மனதிலும் பதிந்து விருப்புடன் கற்க இலகுபடுத்தி கற்பித்த பெருமகனார். காப்பிய தாசன் என்று போற்றப்படும் தொல்காப்பிய விற்பன்னன்.

தொல்காப்பியத்தை கற்பிப்பதில் இவருக்கு இணையாக யாரையும் ஒப்பிட இயலாத பெருந்தகை. தொல்காப்பியத்தோடு நன்னூல், நன்னூல் கண்டிகையுரை ஆகியவற்றையும் விருப்புடன் கற்பித்து இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டத்தின் ஒரு பாடத்திற்குரிய இலக்கண பாடத்தை மாணவர்கள் கற்று சித்தியடையச் செய்தவர். நீண்டகாலமாக சைவப்புலவர் பட்டப் பரீட்சைக்குழுவில் இலக்கண வினாத்தாள் தயாரிப்பாளராக மதிப்பீட்டாளராக நடுநிலையுடன் இரகசியத் தன்மையுடன். பணியாற்றி சைவப்புலவர் சங்கத்தின் மூத்த சைவப்புலவர்களினால் நன்மதிப்பைப் பெற்றவர்.



குறுகிய சில வருடங்களாக தன் உடல் நிலை காரணமாக இப்பணியில் இருந்து விலகியிருந்தார்.

சைவத்தமிழ் மரபில் தமிழ்ப்பண்டிதர்களையும் சைவப்புலவர்களையும் உருவாக்கிய பெருமகனார் பண்டிதர் ம. ந கடம்பேசுவரன் அவர்கள் தமது இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

பிறந்தவர் மண்ணில் மறைவது இயல்பு என்ற சிந்தனைக்கமைய காலம் தன் கடயையை நிறைவேற்றியுள்ளது. உயர் தமிழ் மகனாரின் ஆத்மா பார்பதி சமேத பரமேஸ்வரனின் பாதார விந்தங்களை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு வாழ பிரார்த்திக்கின்றோம்.

பண்டிதமணி ஐயாவுக்கு வெறும் இரங்கல்களையோ அனுதாபங்களையோ தெரிவித்து விட்டு கடந்து விடும் இழப்பல்ல இவ் இழப்பு. அசராத தமிழ்ப் பாண்டித்தியத்தின் ஒரு தலைமுறையின் இழப்பு.

கடந்து வந்த பல தசாப்தங்களில் புலமையையும் தமிழ் மரபுக் கல்வியையும் கடத்தி வந்த, காவி வந்த, தொடரின் ஒரு பெரும் அத்தியாயம் இவர்.

ஈழத்து மரபுத்தமிழ் கல்வி வரலாற்றில் அழித்து விட முடியாத எங்கள் பண்டிதர் ஐயாவுக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சார்பில் அஞ்சலிகளை செலுத்தி நிற்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

சைவப்புலவர் செ.த.குமரன்
செயலாளர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
யாழ்ப்பாணம்.

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைதுறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/ 6569/(EL) | Spares for Alimak Elevators of Crames | 6,000.00 | 1,000.00 | 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/PT/ 6581(EL) | 05 Nos. Pro-Face Display Unit for Transfer Cranes at JCT | 40,000.00 | 1,000.00 | 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6577(MP) | 14 Nos. Trolley Wire Rope for 41T Mitsui STS Cranes at JCT | 120,000.00 | 3,500.00 | 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/ 6584(MP) | Rotary Actuators for Ram Spreaders Twin Lift & Single Lift | 160,000.00 | 3,500.00 | 2024.06.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/ 6582(MP) | 24 Nos. Twist Lock Assy for Spreader of SHI 41 Tons RTG Cranes at JCT | 30,000.00 | 1,000.00 | 2024.06.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/PT/ 16/068 | Spares for Air Starter of Wartsila Main Engines | 25,000.00 | 1,000.00 | 2024.05.09ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/ 02/001 | 01 No. of Hydraulic Press | 35,000.00 | 1,000.00 | 2024.05.09ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/07/001 | Laser Printer (A4 Monochrome) | 18,500.00 | 1,000.00 | 2024.05.09ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/02/051 | 50 Nos. of Wheel Rims for Terberg Terminal Tractors | 19,000.00 | 1,000.00 | 2024.05.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/07/051 | Spare Parts for Terberg Terminal Tractors | 24,000.00 | 1,000.00 | 2024.05.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/068 | Leaf Spring Sets of the Dutch Lanka Trailer | 42,500.00 | 1,000.00 | 2024.05.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24 /PT/02/052 | Spares for YT220 Terberg Terminal Tractors | 100,000.00 | 3,500.00 | 2024.05.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றுகீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழ்வேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# கேள்விக்கான அழைப்பு (IFB)

## மத்திய மாகாண பாடசாலைகளுக்கு மத்திய அளவான மேசை மற்றும் கதிரைகளைக் கொள்வனவு செய்தல்

## மத்திய மாகாண முதல் மற்றும் கல்வி அமைச்சு


**IFB NO. CPC/CMS/ACC/06/2024/10**

01. மத்திய மாகாண பாடசாலைகளுக்குத் தேவையான கீழேயுள்ள மேசை மற்றும் கதிரைகளை வழங்குதல் சார்பாக மத்திய மாகாண முதல் மற்றும் கல்வி அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் கேள்விக்கான அழைப்பு விடுக்கப்படுகிறது.

| உருப்படி இலக்கம் | விபரம் | தேவைப்படும் அலகின் அளவு | கேள்விப்பிணையின் பெறுமதி ரூ. (2024.09.07வரை செல்லுபடியாதல் வேண்டும்) | | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) மீளளிக்கப்படாத) |
|---|---|---|---|---|---|
| | | | வங்கிப் பிணை மூலமாயின் (ரூ) | காசாக (ரூ) | |
| 1 | மத்திய அளவான சிறுவர் மேசை (Medium Size Student Desk) | 6800 | 240,000.00 | 120,000.00 | 3500.00 |
| 2 | மத்திய அளவான சிறுவர் கதிரை (Medium Size Student Chair) | 6800 | 150,000.00 | 75,000.00 | |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறையில் இடம்பெறும்.
03. மத்திய மாகாண முதல் மற்றும் கல்வி அமைச்சினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்கள் மூலம் கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன், மேற்படி அட்டவணையில் குறிப்பிடுமாறு மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத் தொகையை செலுத்திய பின்னர் குறித்த கேள்வி ஆவணங்களை மத்திய மாகாண முதல் மற்றும் கல்வியமைச்சின் பிரதம கணக்காளரிடம் 2024.04.18 முதல் 2024.05.08 வரை அரச வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கிடைப்பட்ட காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.
04. முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நகல் பிரதியுடன் 2024.05.09 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "தலைவர், பெறுகைக் குழு, முதல் மற்றும் கல்வி அமைச்சு, மாகாண சபை கட்டிடத் தொகுதி, பல்லேகெலே, குண்டசாலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து அமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது மேல் மூலையில் "மத்திய அளவிலான சிறுவர் மேசை மற்றும் கதிரைகளை வழங்குவதற்கான விலைமனுக்கள் மற்றும் IFB NO.CPC/CMS/ACC/06/2024/10" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்துடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அதனை மத்திய வங்கியில் அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட வங்கிப் பிணையொன்றை அல்லது மத்திய மாகாண முதல் மற்றும் கல்வியமைச்சிற்கு காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றாக இருத்தல் வேண்டும்.
06. இது பற்றிய பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.04.25 மு.ப. 11.00 இற்கு மத்திய மாகாண முதல் மற்றும் கல்வியமைச்சில் நடைபெறுவதுடன், அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. கேள்விகள் திறத்தல் 2024.05.09 மு.ப. 11.00 இற்கு மத்திய மாகாண முதல் மற்றும் கல்வியமைச்சின் கணக்குப் பிரிவில் இடம்பெறுதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. இது பற்றிய மேலதிக விபரங்களை மத்திய மாகாண முதல் மற்றும் கல்வியமைச்சின் பிரதம கணக்காளரின் தொ.பே. இலக்கம் 081 - 2424935 மூலம் விசாரித்து அறிந்து கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்களை 2024.04.18 முதல் 2024.05.08 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கட்டணம் செலுத்தாமலேயே, பரீட்சித்துப் பார்க்கலாம்.
09. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் அமைச்சு பெறுகை குழுவிற்கு உரியது. மேற்படி விடயங்களுக்கு அப்பால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை நிபந்தனையின்றி நிராகரிக்கப்படும்.

**அமைச்சு செயலாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவர்,**
**முதல் மற்றும் கல்வி அமைச்சு,**
**மாகாண சபை கட்டிடத் தொகுதி,**
**பல்லேகெலே**
**குண்டசாலை**
**தொலைபேசி/ பெக்ஸ் இல. 081 - 4481322 / 081 - 2424935**
**2024.04.18**




# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/087<br>பிரதம பொறியியலாளர் (வணிகம்) கிழக்கு அலுவலகத்திற்கு தகவல் தொழில்நுட்ப அதிகாரியின் பயன்பாட்டிற்காக ஒரு வேன் / காரை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்கு அமர்த்தல் | 08-05-2024 ம் திகதி மு.ப.10.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும்வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

PR - 5307 Mahindra bolero, 2011 cab. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 45429 5 8. 025545

## தேவை

"ஓ" பொசிடிவ் வகை சிறுநீரகம் தேவை. தொடர்புகள் 0714240370

## பெயர் மாற்றம்

சாய்ந்த மருது, 05 பி.எம்.வீதி, 140/ Dஜச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் வைசுல் கரீனி ஆகிய நான் எனது பதிவுப் பெயர் முகம்மது இஸ்மாயில் வைசுல் கர்ணி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது பெயரை 01.04.2024ம் திகதியிலிருந்து முகம்மது இஸ்மயில் வைசுல் எனும் பெயரில் மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

-முகம்மது இஸ்மயில் வைசுல்-

---

**எனது இலக்கம் :**
**DS/UP/LND/ACQUIS/14/02/07**
**காணி அமைச்சின் இலக்கம் :**
**4-3/10/2012/UDA/290**

**பிரதேச செயலகம் ஊவா பரணகம**
**2024.04.08**

## காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 7ம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் லுனுவத்த நகர அபிவிருத்தி விடயங்களுக்காக அரசிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் காணி, அச் சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் உரித்துரிமை மற்றும் நஷ்டஈட்டு பரிசீலனை 2024.06.05 மு.ப. 10.00 இற்கு ஊவா பரணகம பிரதேச செயலகத்தில், என்னால் நடத்தப்படும் என பொதுமக்களின் அறிவூட்டலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது. இக்காணி விடயத்தில் தொடர்பு உடையவர்களால் அப்பரிசீலனைக்காக பங்குபற்றலாம். மேலதிக விபரங்களுக்கு இல. 1853/44 மற்றும் 2024.03.13ம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : பதுளை
பிரதேச செயலகம் : ஊவா பரணகம
கிராம அதிகாரி பிரிவு : (41 - C) உணபாத்த
அடிப்படை வரைபட இல : அ.க.பி. 439 இன் மேலதிக இல.11 இன் பத்திர இலக்கம் 12
காணியின் பெயர் : ஹீயுகோலன்ட்வத்த
துண்டு இலக்கம் : துண்டு இல. 710 மற்றும் 711
முழுக்காணி அளவு : 0.7992 ஹெக்டயார்
அமைவிடம் : பதுளை மாவட்டத்தில் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவில் மெதபலாத்த கோரலயின் அ.க.பி 439 என்ற உணபானகம

**எம்.ஜீ.எம்.எஸ்.குமார**
**பிரதேச செயலாளர்**
**ஊவா பரணகம**

---

**எனது இலக்கம் :**
**DS/UP/LND/ACQUIS/14/02/07**
**காணி அமைச்சின் இலக்கம் :**
**4-3/10/2012/UDA/290**

**பிரதேச செயலகம் ஊவா பரணகம**
**2024.04.08**

## காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 7ம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் லுனுவத்த நகர அபிவிருத்தி விடயங்களுக்காக அரசிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் காணி, அச் சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் உரித்துரிமை மற்றும் நஷ்டஈட்டு பரிசீலனை 2024.06.05 மு.ப. 10.00 இற்கு ஊவா பரணகம பிரதேச செயலகத்தில், என்னால் நடத்தப்படும் என பொதுமக்களின் அறிவூட்டலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது. இக்காணி விடயத்தில் தொடர்பு உடையவர்களால் அப்பரிசீலனைக்காக பங்குபற்றலாம். மேலதிக விபரங்களுக்கு இல. 1856/44 மற்றும் 2024.03.13ம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : பதுளை
பிரதேச செயலகம் : ஊவா பரணகம
கிராம அதிகாரி பிரிவு : (41 - B) லுனுவத்த
அடிப்படை வரைபட இல : அ.க.பி. 440 இன் மேலதிக இல.05 இல் பத்திர இலக்கம் 06
காணியின் பெயர் : ஹீயுகோலன்ட்வத்த
துண்டு இலக்கம் : துண்டு இல. 181 மற்றும் 185
முழுக்காணி அளவு : 2.2032 ஹெக்டயார்
அமைவிடம் : பதுளை மாவட்டத்தில் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவில் மெதபலாத்த கோரலயின் அ.க.பி 440 கொண்ட வெவகெதரகம

**எம்.ஜீ.எம்.எஸ்.குமார**
**பிரதேச செயலாளர்**
**ஊவா பரணகம**

---

Repeat Your Ad For Better Offers

---

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் - KDS/UDB/4/1/1/41
(உது/2/2/10/71)

காணி அமைச்சின் இலக்கம் - 13/97/FR/65

காணி மாவட்டத்தின் உடதும்பர பிரதேச செயலாளர் ஜயமினி போகஹவத்த ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33 வது பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள உபஅட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நஷ்டஈட்டு தொகையாக ரூபாய் பதின்மூன்று இலட்சத்து அறுநூற்று எழுபத்தெட்டாயிரம் (ரூ.13,678,000.00) உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு எண் **LAD 174/23** இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**திகதி : 24.04.03**

**பிரதேச செயலாளர்**
**உடதும்பர**

**உப அட்டவணை**

காணியின் பெயர் - கொபோநில்ல தோட்டம்
ஆரம்ப வரைபட இல - அ.க. பி. 504
துண்டு இல - 192, 193, 194,197
விஸ்தீரணம் - 21.2508 ஹெக்டயார்
அமைவிடம் -

- உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் கங்தெக்க கோரளை சிறுபிரிவில் கொபோநில்ல கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கொபோநில்ல தோட்டம் எனும் காணி

---

# இலங்கை வங்கி

**ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)**

**கேள்விப்பத்திர இல: P/PROC/2024/73**

கணக்குப் புத்தகம்/சரிபார்க்கும் 225 அச்சு இயந்திரங்களை இலங்கை வங்கிக் கிளைகளுக்கு வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

கணக்குப் புத்தகம்/சரிபார்க்கும் 225 அச்சு இயந்திரங்களை இலங்கை வங்கிக்கு வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பனவற்றுக்கு கீழ்க்காணும் விபரங்களுக்கு அமைய பிரதானிகள் / உற்பத்தியாளர்கள் / விநியோகத்தர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் கோரப்படுகின்றன.

**முக்கிய திகதிகள்:**

| | |
|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024.05.08 அன்று 1500 மணி |
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| விலைகூறலை மூடும் திகதியும் நேரமும் | : 2024.05.09 1000 மணி |
| விலைகூறலைத் திறத்தல் | : விலைகூறல் முடிவடைந்ததும் |

மேலதிக விவரங்களுக்கு, விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 094 112204270, 094 112204260, 094 112544310
மின்னஞ்சல்: procurement@boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்கோரல்

## மண் போக்குவரத்துக்காக 10 எண்ணிக்கையிலான 03 கியூப் டிப்பர்களை வாடகைக்கு எடுப்பதற்கான தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் - (S-683)

வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் (DPC) தலைவரினால் **செவனகல சீனி தொழிற்சாலை பிரிவிற்கு மண் போக்குவரத்துக்காக 10 எண்ணிக்கையிலான 03 கியூப் டிப்பர்களை ஆறு மாத காலத்திற்கு (06) வாடகைக்கு வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

1. மீளளிக்கப்படாத **ரூ.4,500.00** கட்டணத்தை பணமாக செலுத்தி **2024.05.08** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **09.00 மணி முதல் 15.00** மணிவரை **வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04** என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். கட்டணம் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை **2024.05.09** ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி **14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மண் போக்குவரத்துக்காக 10 எண்ணிக்கையிலான 03 கியூப் டிப்பர்களை வாடகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் திறக்கபடும் நாளிலிருந்து **119 நாட்களுக்கு** செல்லுபடியாகும். **ரூ.162,000.00 (ஒரு இலட்சத்தி அறுபத்தி இரண்டு ஆயிரம்) மனுப்பாதுகாப்புடன்** சமர்ப்பித்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி : +94 11 258 4184 கையடக்கதொலைபேசி : +94 77 010 3359, தொலைநகல் : +94 11 2 50 0674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk)**

தலைவர்,
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SELACINE

---

The Trusted Market place for Buying & Selling
adz.lk it's what you want
It's Simple & Fast
POST YOUR AD
1. Visit www.adz.lk
2. Log In/ Register
3. Select Category
4. Enter Details
5. Upload Photos
6. Pay
7. Publish
Visit www.adz.lk
WE ACCEPT
Contact Us:-
- 011 2 429 369 | - 077 7 270 067
- 077 7 270 845 | - adzsuo@lakehouse.lk

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பெல்வத்த சீனி தனியார் தொழிற்சாலைக்காக சூரிய குழாய் (Solar Pump) நீர்பாசன அமைப்பினை வழங்கல், நிறுவுதல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல்

சூரிய குழாய் (Solar Pump) நீர்பாசன அமைப்பினை வழங்கல், நிறுவுதல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்தல் - PR - 9601

**விலைமனுக்கோரலின் இறுதி திகதி நீடிப்பு**

**2024.03.29** ஆம் திகதி வெளியான தினமின, டெயிலி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகை விளம்பரத்தில் மேற்கூறிய தலைப்பு தொடர்பான விலைமனுக்கோரல் அறிவிப்பானது மனுதாரர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுக்கோரலின் இறுதித் திகதி **2024.04.25** ஆம் திகதி 14.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**2024.03.29** ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரத்தின் ஏனைய அனைத்து நிபந்தனைகளும் அப்படியே உள்ளது.

தலைவர்,
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SELACINE

---

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுக்களுக்கான வேண்டுகோள் (RFB) – வேலைகள்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**

## காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை

**செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960**

## தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம்: CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/006, 019, 023, 032, 034, 041 & 047**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA) கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. அனுராதபுரம் மாவட்டத்தினுள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அனுராதபுரம் - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவுறுத்தும் காலம் (நாட்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பின் கீழ் | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | வருடாந்த நிர்மாணப் புரள்வு (இல. ரூபா மில்லியன்) | நிதி வளம் (இல. ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | | | |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/006 | அனுராதபுரம் பிரிவில் 5+650 கி.மீற்றரிலுள்ள மஹாவிலச்சிய வலதுகரை பிரதான கால்வாய் மீறிய பிரதேசத்தில் Canal Spill நிர்மாணித்தல் | 06 | C7 | 165,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 15.0 | 5.0 |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/019 | பதவிய திட்டத்திலுள்ள UMC இல் உருக்கு வான் கதவுகளை நிறுவுதல் மற்றும் பலயவெவ வார்ப்புடன் கூடிய ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பை தகர்த்தல் மற்றும் மீள் நிர்மாணித்தல் | 06 | C7 | 145,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 13.0 | 5.0 |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/023 | நாச்சதுவ திட்டத்திலுள்ள துருவிலயில் FC 05 கால்வாயில் இடதுகரை மடையை புனரமைத்தல் | 06 | C6 | 195,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 17.0 | 6.0 |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/032 | ஹுருலுவெவ பிரிவிலுள்ள ஹுருலுவெவ திட்டத்தில் 34/D9/RBMC இன் மேம்படுத்தல்கள் | 06 | C7 | 98,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 9.0 | 3.0 |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/034 | அனுராதபுரம் திட்டத்திலுள்ள CP கால்வாயில் ஹால்பனுஎல அணைக்கட்டை நிர்மாணித்தல் | 06 | C7 | 165,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 14.0 | 5.0 |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/041 | கலென்பிந்துவெவயில் 100 மீற்றரில் மடை மற்றும் கால்வாய், 500 மீ குளக் கட்டை நிர்மாணித்தல் | 06 | C7 | 105,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 10.0 | 4.0 |
| CResMPA-1/RP/WORKS/ID-ANU/NCB/047 | மதவாச்சியில் குளக்கட்டின் திருத்தவேலை, வலதுகரை வான் கதவை பிரதியீடு செய்தல் மற்றும் Spill இன் மீள்நிர்மாணம் | 06 | C7 | 115,000.00 | 105 2024-08-22ஆம் திகதி வரை | 77 | 10.0 | 4.0 |

3. தகைமைத் தேவைப்பாடுகள்: விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளார் என ஆவண ரீதியாக விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பில் விசேடத்துவமாக ஆகக் குறைந்த ICTAD/ CIDA செல்லுபடியாகும் தரப் பதிவு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஆகக்குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தம்வசமுள்ள நிதி வளம் அல்லது கிடைக்கும் வழிகளை விலைமனுதாரர் விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - பொதுவான அனுபவம் - கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரர் பாத்திரத்தின் கீழான அனுபவம்
   - விசேடத்துவ அனுபவம் - கடந்த பத்து (10) வருடங்களில் வெற்றிகரமாகவும், கணிசமாக நிறைவுசெய்யப்பட்ட குறைந்தபட்சம் இதனையொத்த இயல்பைக் கொண்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல்.
   - கடந்த பத்து (10) வருடங்களில் நீர்ப்பாசன கால்வாய்களின் மண் வேலைகள் மற்றும் நிர்மாணம் அல்லது கால்வாய் கட்டமைப்பு திருத்தவேலைகளில் முக்கிய செயற்பாட்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4. IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் 2020 பெறுகை ஒழுங்குவிதிகளின் 04வது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைக்கான பெறுகையின் பிரகாரம் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும் என்பதுடன் பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிவாய்ந்த விலைமனுதார்களுக்கு இது திறந்திருக்கும். மேலதிகமாக உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையின் 1.6 மற்றும் 1.7 பந்திகளை தயவு செய்து பார்க்கவும்.
5. விலைமனுதாரர்கள் 2024-04-18ஆம் திகதி முதல் 2024-05-08ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (9.30 மற்றும் 14.30 மணித்தியாலத்திற்கிடையில்) ஒவ்வொரு தொகுதிக்கும் NCB/023 ஒப்பந்தப் பொதிக்காக 4,000.00 இலங்கை ரூபாவையும் ஏனைய அனைத்து பொதிகளுக்காகவும் 3,500.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் அனுராதபுரம், விமான நிலைய வீதி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து (அனுராதபுரம்) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அவற்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (அனுராதபுரம்) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 025-2222499
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-03ஆம் திகதி 9.30 மணித்தியாலத்தில் அனுராதபுரம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் 2024-05-02ஆம் திகதி 9.30 மணித்தியாலத்தில் பின்வரும் அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இல. (CResMPA-1/RP/WORKS/ID-MON.......) | அதிகாரியின் பெயர் | தொடர்பிலக்கம் |
|---|---|---|
| NCB/006 & NCB/034 | பொறி. A.M.T.S.H. வேதாந்த | 074 3750571 |
| NCB/023 | பொறி. R.M.U.N. ஜயவர்தன | 071 3051223 |
| NCB/032 | பொறி. H.M.D.C. திலக்கரத்ன | 071 1963460 |
| NCB/019 | பொறி. C.J. கஸ்தூரியாரச்சி | 071 0191472 |
| NCB/041 | பொறி. R.M.T.S. தயாரத்ன | 070 2622222 |
| NCB/047 | பொறி. H.D.T. ஹிடிகே | 077 5056531 |

8. 2024-05-09ஆம் திகதி 3.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அனுராதபுரம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில் வழங்குநர் தீர்மானிப்பார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**விமானநிலைய வீதி,**
**அனுராதபுரம்.**

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ``(ஒப்பந்த இலக்கம்) என்பதற்கான விலைமனு'' என தயவுசெய்து எழுதவும்.

சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**விமான நிலைய வீதி,**
**அனுராதபுரம்.**

**திகதி: 2024-04-18.**

---

**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**KEL/RPC/24/073**

**களனிக் கிளை மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையங்களுக்கும் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக வளமுள்ள சேவை வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.**

மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவை செலுத்திய பின்னர், வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனியின் களனிக் கிளையிலிருந்து வன்பிரதி பதிப்பொன்றை பெற்றுக் கொள்ளலாம்.

2024 ஏப்ரல் 18 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கிரிபத்கொட, மாக்கோல வீதி 38 ஆம் இலக்கத்திலுள்ள LECO இன் களனிக் கிளையில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

பார்வையிடும் நோக்கத்திற்காக, **www.promise.lk or www.leco.lk** ஆகிய இணையதளங்களில் விலைமனு ஆவணத்தின் வரைவானது (விலைமனுக்கோரலுக்கு அல்லாதது) காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் பிரதான பொறியியலாளர் (கிளை), வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி என முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்கள் கீழேயுள்ள முகவரியிலுள்ள 2 ஆம் மாடியின் கேள்விப் பெட்டியில் 2024 மே 02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளிக்க விரும்பும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

**பிரதான பொறியியலாளர் (கிளை),**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி,**
**இல. 38, மாக்கோல வீதி, கிரிபத்கொட**
**தொலைபேசி: 0112910129**

TENDER NOTICE
www.leco.lk

---

## Invitation for Bids - Security Services

## Buddhist and Pali University of Sri Lanka

**BPU/DPC/ 02/2024**

1. **The Chairman, Department Procurement Committee, Buddhist and Pali University of Sri Lanka,** on behalf of the Buddhist and Pali University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for **Security Services, Buddhist and Pali University of Sri Lanka.** Bids should be submitted for all premises. However, the University has the right to take a final decision.
2. The intended Service Period is one (01) year from the date of 1st of June 2024 to 31st of May 2025 with a probation period of **three months.**
3. Bidding will be conducted through National Competitive Bidding.
4. All bidders shall have a valid Business Registration and Certificate obtained from the Ministry of Defense.
5. Interested eligible bidders may obtain further information from the **Assistant Registrar (Administration), Buddhist and Pali University of Sri Lanka** and inspect the Bidding Documents at the address given below from **8.30 a.m. to 3.30 p.m. (Tel: 011- 2857786) from 18th of April 2024 to 02nd of May 2024 during working days.**
6. Complete set of Bidding Documents (with Duplicate) can be purchased on payment of a non-refundable fee of **Rs. 4,000.00.** Payments shall be made at the **Shroff Counter of the Buddhist and Pali University of Sri Lanka.**
7. A Pre-Bid meeting will be held on **26th April 2024 at 2.00 p.m.** at the Boardroom No. 2, 1st Floor, Buddhist and Pali University of Sri Lanka, No.37, Moragahahena Road, Pitipana Town, Homagama.
8. Bids shall be valid up to 31st of July 2024.
9. Bids shall be accompanied by a bid security of Rs. 140,000.00 obtained from a commercial bank approved by the Central Bank of Sri Lanka (CBSL) valid up to 30th of August 2024.
10. Sealed Bids in duplicate should be sent to the below mentioned address by registered post or can be deposited in the tender box kept at the Administration Division at or before **2.00 p.m. on 02nd of May 2024.** Both original and duplicate of the bids should be enclosed in one cover and top left-hand corner shall be marked **"BPU/DPC/02/2024".** The name and address of the firm submitting the bids should appear on the cover.
11. Bids will be opened immediately after closing of bids on the date 02nd of May 2024 at the Boardroom No. 2, 1st Floor, Buddhist and Pali University of Sri Lanka, No. 37, Moragahahena Road, Pitipana Town, Homagama. Authorized bidders can participate.

**Late bids will be rejected.**

**The Chairman**
**Department Procurement Committee**
**Buddhist and Pali University of Sri Lanka**
**No. 37, Moragahahena Road,**
**Pitipana Town, Homagama.**

18th April 2024



# இலங்கை மெய்வல்லுநர்கள் நால்வர் ஒலிம்பிக் தகுதிக்காக டுபாய் பயணம்




டுபாய் நகரில் எதிர்வரும் மே 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய அரபு இராச்சிய – கிரோன் பிரீ மெய்வல்லுனர் போட்டியில் இலங்கையின் நான்கு விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் யுபுன் அபேகோன், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தருஷி கருணாரத்ன, கயன்திகா அபேரத்ன மற்றும் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் நதீஷா ராமநாயக்க ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இதற்காக யுபுன் அபேகோன் இத்தாலியில் இருந்து தனது இத்தாலி நாட்டு பயிற்சியாளருடன் பங்கேற்கவுள்ளார். போட்டியில் பங்கேற்பதற்கு விமான டிக்கெட் வசதியை இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் வழங்கவுள்ளது.

எதிர்வரும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி வாய்ப்பை பெறுவதற்கு இலங்கை தடகள வீரர்களுக்கு இந்தப் போட்டி முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த வாய்ப்பை உறுதி செய்வதற்கு உலகெங்கும் உள்ள வீர, வீராங்கனைகளுக்கு எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் உள்ளது.

டுபாய் மெய்வல்லுனர் போட்டி குறுந்தூர வீரர் யுபுனுக்கு முக்கியமானதாக உள்ளது. அவர் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 9.96 விநாடிகளில் (2022) நிறைவு செய்து சிறந்த காலத்தை பதிவு செய்திருப்பதோடு தெற்காசியாவின் அதிவேக வீரராகவும் சாதனை படைத்துள்ளார்.

கடைசியாக அவர் 2023 மே 24 ஆம் திகதியே 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்றிருந்தார். அப்போது அவர் 10.04 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து இரண்டாவது இடத்தை பெற்றதோடு மீண்டும் அவர் மே 13 ஆம் திகதியே 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

எவ்வாறாயினும், உபாதை காரணமாக சுமார் ஓர் ஆண்டு காலமாக போட்டிகளில் பங்கேற்காது இருந்த யுபுன், கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி இத்தாலியில் நடைபெற்ற 150 மீற்றர் ஓட்டப் போட்டியை 15.19 விநாடிகளில் முடித்து முதல் இடத்தை பிடித்திருந்தார்.

மறுபுறம் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆசிய சம்பியன்சிப், ஆசிய விளையாட்டுப் போட்டி மற்றும் ஆசிய கனிஷ்ட போட்டிகளில் அடுத்தடுத்து தங்கப் பதக்கம் வென்ற 20 வயதான தருஷி கடைசியாக கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி ஹங்ஜோ நகரிலேயே போட்டி ஒன்றில் பங்கேற்றிருந்தார்.

அதில் அவர் 2 நிமிடம் 01.39 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து தங்கப் பதக்கம் வென்றார். இதனைத் தொடர்ந்து அவர் முதல் முறையாகவே டுபாய் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் மற்ற வீராங்கனையான 37 வயது கயன்திகா அபேரத்ன கடைசியாக 2022 இல் நடைபெற்ற பர்மிங்ஹாம் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்றிருந்தார். அதில் அவர் 800 மீற்றர் போட்டியை 2 நிமிடம் 01.20 விநாடிகளில் நிறைவு செய்திருந்தார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி வாய்ப்பை பெறுவதற்கு பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1 நிமிடம் மற்றும் 59.30 விநாடி வரம்பை பெற்றிருத்தல் வேண்டும்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் 52.61 விநாடி என்ற தனது சிறந்த காலத்தை பதிவு செய்திருக்கும் நதீஷா ராமநாயக்க பாரிஸ் ஒலிம்பிக் தகுதி வாய்ப்பை பெறுவதற்கு குறைந்தது 50.95 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்தல் வேண்டும்.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக் தகுதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால எல்லை 10.00 விநாடிகளாகும்.

# பலஸ்தீன அங்கத்துவத்திற்கு பாதுகாப்புச் சபையில் வாக்கு




ஐக்கிய நாடுகள் சபையின் முழு அங்கத்துவ நாடு ஒன்றாக அங்கீகாரம் பெறுவதற்காக பலஸ்தீனத்தின் விண்ணப்பம் தொடர்பில் பாதுகாப்புச் சபையில் இன்று (18) வாக்கெடுப்பு நடைபெறவிருப்பதாக இராஜதந்திர வாட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்தியில் தனது முழு அங்கத்துவத்திற்கான விண்ணப்பத்தை பலஸ்தீனம் ஏப்ரல் ஆரம்பத்தில் புதுப்பித்திருந்தது. இந்த விண்ணப்பம் 2011 ஆம் ஆண்டு முதல் முறை பாதுகாப்புச் சபைக்கு முன்வைத்த போது அமெரிக்கா அதற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய நிலையில் தற்போதும் அமெரிக்கா எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் பரிந்துரையை அடுத்தே பொதுச்சபையில் மூன்றில் இரண்டு வாக்குகளுடன் புதிய அங்கத்துவ நாட்டை அங்கீகரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. 2012 தொடக்கம் பலஸ்தீன் ஐ.நாவின் பார்வையாளர் அந்தஸ்துடன் இயங்கி வருகிறது.

ஐ.நாவின் 193 அங்கத்துவ நாடுகளில் 137 நாடுகள் ஏற்கனவே பலஸ்தீன நாட்டை அங்கீகரித்துள்ளது.

'நாம் அனுமதியை கோருகிறோம். அது எமது இயற்கையான மற்றும் சட்ட ரீதியான உரிமையாகும்' என்று முழு அங்கத்துவ கோரிக்கை பற்றி ஐ.நாவுக்காக பலஸ்தீன தூதுவர் ரியாத் மாலிக்கி குறிப்பிட்டுள்ளார்.

# அடை மழையினால் டுபாய் விமானநிலையம் முடக்கம்




டுபாயில் பெய்த கடும் மழையால் அந்த பாலைவன நகர் வெள்ளத்தில் மூழ்கியதை அடுத்து அங்குள்ள சர்வதேச விமானநிலைத்திற்கான விமானங்கள் நேற்று முன்தினம் (16) திசைதிருப்பப்பட்டன.

உலகின் பரபரப்பான விமானப் போக்குவரத்து மையமாக இருக்கும் டுபாயில் செவ்வாய்க்கிழமை இரவு 7.26 மணி அளவில் விமானப்பயணங்கள் நிறுத்தப்பட்ட நிலையில் இரண்டு மணி நேரத்திற்குப் பின்னரே படிப்படியாக வழமைக்கு திரும்பியது.

அடை மழையால் டுபாய் நகர் ஸ்தம்பித்ததோடு ஐக்கிய அரபு இராச்சியம் தவிர பஹ்ரைனிலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டது.

கடந்த இரு தினங்களில் ஓமானில் மழை வெள்ளத்தால் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

டுபாய் விமானநிலைய செயற்பாடுகள் 25 நிமிடங்களுக்கு இடைநிறுத்தப்பட்டதோடு தேங்கிய நீரில் விமானங்கள் இருக்கும் காட்சிகளும் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன.

பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளிலும் சுமார் ஓர் ஆண்டில் பெய்யும் மழை ஒரு நாளில் கொட்டித் தீர்த்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஈரானுக்கு எதிராக புதிய தடைகளை விதிக்கத் திட்டம்

## ஈரான்–இஸ்ரேல் தொடர்ந்தும் பரஸ்பர எச்சரிக்கை



இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய ஈரானுக்கு எதிராக மேலும் தடைகளை விதிக்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமெரிக்க கருவூலச் செயலாளர் ஜனட் யெலன் குறிப்பிட்டிருக்கும் அதேநேரம், தமது அமைப்பு தடை தொடர்பில் செயற்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு கொள்கை தலைவர் ஜோசெப் பொரல் தெரிவித்துள்ளார்.

ஈரானின் ஏவுகணை திட்டத்தின் மீது தடைகளைக் கொண்டுவரும்படி இஸ்ரேல் தனது கூட்டணி நாடுகளை வலியுறுத்தி வரும் நிலையிலேயே இந்த செய்தி வெளியாகியுள்ளது.

ஈரானின் ஏவுகணை திட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் தடைகள் எதிர்வரும் ஒக்டோபரில் காலவதியாகவுள்ளது. ஈரானின் அணு திட்டத்தை கட்டுப்படுத்தும் பரந்துபட்ட ஓர் நடவடிக்கையாகவே ஐ.நாவின் இந்தத் தடை இருந்து வந்தது.

எவ்வாறாயினும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் உட்பட பல நாடுகளும் இந்தத் தடைகளை தொடர்ந்து முன்னெடுத்து வரும் நிலையிலேயே புதிய தடைகளை கொண்டுவர திட்டமிட்டுள்ளன.

ஈரான் தாக்குதலுக்கு பதிலளிக்காது விடப்படாது என்று இஸ்ரேல் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹெர்சி ஹலவி கடந்த திங்களன்று எச்சரித்திருந்தார்.

கடந்த சனிக்கிழமை 300க்கும் அதிகமான ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைக் கொண்டு ஈரான் நடத்திய தாக்குதல் அந்த நாடு இஸ்ரேல் மீது நடத்திய முதலாவது நேரடித் தாக்குதலாக இருந்தது.

ஏப்ரல் 1ஆம் திகதி 13 பேர் கொல்லப்பட்ட சிரியாவில் உள்ள தமது துணைத் தூதரகத்தின் மீதான தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈரான் குறிப்பிட்டது.

ஈரானின் தாக்குதலை அடுத்து இஸ்ரேலிய போர்க்கால அமைச்சரவை இதுவரை ஐந்துக்கு மேற்பட்ட தடவைகள் கூடி பதில் நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியபோதும், இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்பிலேயே அது அவதானம் செலுத்தியுள்ளது.

ஈரானின் ஏவுகணை திட்டத்திற்கு எதிராக தடைகளை விதிக்க இஸ்ரேல் 30க்கும் அதிகமான நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

ஈரானின் பிரதான இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக இருக்கும் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கவும் இஸ்ரேல் அழைப்பு விடுத்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்கா இதனைச் செய்திருந்தபோதும் பிரிட்டன் போன்ற மற்ற நாடுகள் அந்த நவடிக்கையை எடுக்கவில்லை.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக காசாவில் போர் நீடிக்கும் சூழலில், ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பதற்றம் பிராந்தியத்தில் போர் சூழலை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் மற்றும் இஸ்ரேல் இரு தரப்பும் பரஸ்பரம் எச்சரிக்கைகளை விடுத்துவரும் நிலையில் அமைதி காக்கும்படி உலகத் தலைவர்கள் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியுடன் தொலைபேசியில் பேசிய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், 'முழு பிராந்தியத்திலும் பேரழிவு விளைவை ஏற்படுத்தும் புதிய சுற்று மோதலை தவிர்ப்பதற்கு இரு தரப்பும் அமைதி காக்க வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

பதற்றம் அதிகரிக்கப்படுவது தொடர்பில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை மீண்டும் ஒருமுறை எச்சரித்த பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், இது அமைதி காக்கப்பட வேண்டிய தருணம் என்று வலியுறுத்தியுள்ளார்.

காசா போரை ஒட்டி ஏற்கனவே ஈரான் ஆதரவு லெபனான் ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுடன் ஈரான் மற்றும் சிரியாவில் இருக்கும் ஈரான் ஆதரவுக் குழுக்கள் இஸ்ரேலுடன் மோதலில் ஈடுப்பட்டிருக்கும் நிலையில், தற்போதைய பதற்றம் பிராந்தியத்தில் முழு அளவிலான போரை தூண்டும் அச்சுறுத்தலை ஏற்பட்டுத்தியுள்ளது.

# வாபஸ் பெற்ற இஸ்ரேலிய டாங்கிகள் மீண்டும் வடக்கு காசாவுக்குள் முன்னேற்றம்: ரபாவில் வான் தாக்குதல்



வடக்கு காசாவில் இருந்து ஒரு வாரத்திற்கு முன் வாபஸ் பெற்ற இஸ்ரேலிய டாங்கிகள் மீண்டும் அந்தப் பகுதியை நோக்கி முன்னேறும் நிலையில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக உள்ள ரபா நகர் மீது போர் விமானங்கள் சரமாரித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

வடக்கு காசாவில் உள்ள பெயித் ஹனூன் மற்றும் ஜபலியாவில் இணையதளம் துண்டிக்கப்பட்டிருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். பெயித் ஹனூன் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறி வருகின்றன.

இங்கு பாடசாலைகளில் அடைக்கலம் பெற்றிருக்கும் குடும்பங்கள் மற்றும் அருகில் உள்ள வீடுகளில் இருப்பவர்களை வெளியேறும்படி இஸ்ரேலிய இராணுவம் உத்தரவிட்டிருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன்போது இஸ்ரேலிய படையினர் பலரையும் கைது செய்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவில் கடந்த ஒக்டோபரில் போர் வெடித்த ஆரம்பத்தில் 60,000 மக்கள் வசிக்கும் பெயித் ஹனூன் பகுதியே இஸ்ரேலின் முதல் இலக்குகளில் ஒன்றாக இருந்தது. அங்கு கடந்த பல மாதங்களாக விழுந்த குண்டு மழையில் முழு நகரும் இடிபாடுகளாக மாறியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலிய துருப்புகள் அண்மையில் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து பல குடும்பங்களும் அண்மைய நாட்களில் நகருக்கு திரும்பியுள்ளனர். இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (16) ஆரம்பமான இஸ்ரேலிய படையின் புதிய சுற்றுவளைப்புகளால் அந்தக் குடும்பங்கள் மீண்டும் நகரை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளன.

இதேவேளை தெற்கு காசாவின் ரபா நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று (17) நடத்திய வான் தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது. இதன்போது இடிபாடுகளில் இருந்து காயமடைந்தவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் மீட்கப்பட்டதாக காசா சிவில் பாதுகாப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய தரைப்படை இன்னும் நுழையாத ஒரே பகுதியாக இருக்கும் எகிப்து எல்லையை ஒட்டி ரபா நகரில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மத்திய காசாவில் உள்ள அல் மகாசி அகதி முகாமில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'எனது சகோதரர்கள் வாசலில் அமர்ந்திருந்தார்கள். எனது சகோதரர் மற்றும் அவரது மைத்துனர் காயமடைந்தனர். எனது மகனை நான் இழந்தேன். எனக்கு வீடு இல்லை, கணவர் இல்லை, எதுவுமே இல்லை' என்று இந்தத் தாக்குதலில் தனது மகன் முஹமது மற்றும் கணவரை இழந்த வபா இஸா அல் நூரி என்ற பெண், ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். காசா நகரின் துப்பா பகுதியில் இஸ்ரேலிய போர் விமானம் பொலிஸ் கார் ஒன்றை தாக்கியதில் ஏழு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக காசா உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 56 பேர் கொல்லப்பட்ட நிலையில் மேலும் 89 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் நீடித்து வரும் இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 33,899 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 76,664 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 14,520க்கும் அதிகமான சிறுவர்கள் மற்றும் 10,000க்கும் அதிகமான பெண்கள் அடங்குகின்றனர். எனினும் இஸ்ரேலிய தாக்குதல்களின் இடிபாடுகளில் ஆயிரக்கணக்கான உடல்கள் சிக்கி இருக்கும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை கூறப்பட்டதை விடவும் அதிகமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் நீடித்தபோதும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தமது நிலைப்பாடுகளை விட்டுக்கொடுக்காத நிலையில் இன்னும் உடன்பாடு ஒன்றுக்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது. மத்திய காசா பகுதியில் படை நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டிருப்பதோடு பல ஆயுததாரிகளையும் கொன்றதாக தெரிவித்துள்ளது.

எனினும் மத்திய காசாவின் நுசைரம் அகதி முகாமில் இருக்கும் குடியிருப்பாளர்கள், இஸ்ரேலிய போர் விமானங்கள் கடந்த செவ்வாயன்று நான்கு மாடி குடியிருப்பு கட்டடம் ஒன்றை தாக்கி அழித்ததாக தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் தொடர்ந்து சட்டவிரோதமான வகையில் காசாவுக்கான மனிதாபிமான உதவிகளை கட்டுப்படுத்தி வருவதாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.